GOKULAM

கோகுலம்

ஜூலை 2002 ரூ.6/-



மீன்கள் பலவிதம்;
ஒவ்வொன்றும்
ஒரு விதம்!
பக். - 32




+2 நிலையில்
ஃபோட்டோ கலை!





வண்ணம் தீட்டுங்கள்

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



விடை: குடை, குரங்கின் சட்டை, ஷு, குழந்தையின் வளையல், நீர்த் துளி.

தவறைத் திருத்துங்கள்!



விடை: பெரிய சக்கரம் மறுமுனையில் உள்ள சிறிய சக்கரத்தின் கீழ் அமைந்திருக்க வேண்டும்.



கோகுலம்

கதைகள் :

படக் கதைகள் :

வாசகர்களின் படைப்புகள் :

மலர் : 20
இதழ் : 6
ஜூலை
2002

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.



ஞாபகம் இருக்கிறதா?



மனித உடல் பற்றி, நமக்குத் தெரியாத அதிசயமான பல செய்திகள் இருக்கின்றன என்பது, இன்டர்நெட்டில் வலை வீசித் தேடினபொழுது தெரிய வந்தது. அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாமா?

- அம்மாவின் வயிற்றுக்குள் மூன்று மாதக் குழந்தையாக இருக்கிறபோதே, அதற்குக் கைவிரல்களில் ரேகைகள் உருவாகி விடுகின்றன.
- மனிதன் வேகமாகத் தும்முகிறபோது, வாயிலிருந்து தும்மல் மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் வெளிப்படுகிற வாய்ப்பு உண்டு.
- ஒரு மனிதன் தன் வாழ்நாளில், சராசரியாக எழுபத்தி இரண்டாயிரம் லிட்டர் தண்ணீர் குடிக்கிறான்.
- குழந்தை பிறக்கிறபோது, அதன் உடம்பில் மொத்தம் முன்னூறு எலும்புகள் இருக்கும். அது வளர, வளர அவை இணைந்து, குறைந்து, வளர்ந்த மனிதனாகிறபோது 206 எலும்புகளாகிவிடும்.
- கால்நகங்களைவிட, கைநகங்கள் வேகமாக வளரும்.
- நம் வயிற்றில் உள்ள சிறு குடலின் மொத்த நீளம் இருபத்து இரண்டு அடி.

அடுத்து சில ஜோக்ஸ் ரசிக்கலாமா?

ஒரு வயதான தம்பதி. முதுமை காரணமாக, இரண்டு பேருக்குமே ரொம்ப ஞாபக மறதி.

ஒருநாள் டீ.வி.யில் சினிமா ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, ஏதாவது சாப்பிட வேண்டும் போல இருந்தது இரண்டு பேருக்கும்.

மூதாட்டி சொன்னாள்: "எனக்கு ஒரு ஆம்லெட் சாப்பிட வேண்டும் போல இருக்கிறது."

"சரி, நீ இங்கேயே இரு! நான் போய் ஆம்லெட் செய்து எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்றார் வயதான கணவர்.

"மறந்து விடப் போகிறது! எனக்கு ஆம்லெட் வேண்டும்!"

"மறக்க மாட்டேன்! உனக்கு ஆம்லெட்! 'எனக்கு ஆம்லெட்டும், பிரெட்டும்!"

"வேண்டுமானால், பேப்பரில் எழுதித் தரட்டுமா? மறந்து விடப் போகிறது" என்றாள் மறுபடியும் மூதாட்டி.

"எனக்கு இந்த சிம்பிள் விஷயம் கூடவா மறந்து போய்விடும்? உனக்கு ஆம்லெட், எனக்கு பிரெட். மறக்கவே மாட்டேன்."



பத்து நிமிடங்கள் கழித்து, தாத்தா திரும்பி வந்தார். கையில் இரண்டு காப்பி கப்கள்.

ஒன்றை மனைவியிடம் நீட்டினார்.


பாட்டி உரத்த குரலில் சத்தம் போட்டாள்: "உங்களுக்கு மறதி ஜாஸ்தி! அதனால்தான் எழுதி வைத்துக்கொண்டு போங்கள்! என்று சொன்னேன். கேட்டீங்களா? இப்போது பாருங்கள். நான் கேட்டது டீ! நீங்கள் கொண்டு வந்திருப்பது காபி!"

ஒரு அரங்கம் நிறைய, மக்கள் கூடியிருந்தனர். ஒரு பேச்சாளர் பேச ஆரம்பித்தார். அரை மணி நேரம் பேசியிருப்பார். முதல் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு நபர், மேடை ஏறி வந்தார்.

"நான் ஒரு ஐந்து நிமிஷம் பேச ஆசைப்படுகிறேன்" என்றார்.

பேச்சாளர், "இங்கே நான்தான் பேச அழைக்கப்பட்டிருக்கிறேன். திடீரென நீங்கள் பேச வேண்டும் என்கிறீர்களே! அது எப்படி சாத்தியம்?" என்று கேட்டார்.

"சரி! நான் பேசவில்லை! நீங்கள் இதுவரை பேசி, பதிவு செய்த டேப்பைப் போடச் சொல்கிறேன். அதை ஐந்து நிமிடம் உங்களால் உட்கார்ந்து கேட்க முடிகிறதா பாருங்கள்! அப்புறம் நீங்கள் பேச்சைத் தொடருவது பற்றி யோசிக்கலாம்!"



"இன்னிக்கு மாலை, ஆபீசிலிருந்து வருகிறபோது, மறக்காமல் எலிப்பொறி ஒன்று வாங்கிக் கொண்டு வாருங்கள்."

"ஏற்கெனவேதான் நம் வீட்டில் இரண்டு எலிப்பொறி இருக்கிறதே!"

"இரண்டிலும் ஏற்கெனவே எலி பிடித்து வைத்திருக்கிறேனே! இன்னும் பிடிக்க எலி இருக்கே!"



இங்குள்ள ஏசு கிறிஸ்துவின் முகத்தைப் பாருங்கள். சுமார் இருபது விநாடிகள் உற்றுப் பார்த்த பின் ஒரு சில நிமிடம் கண்களை மூடிக்கொண்டு இருங்கள். பின்னர், வெண்மையான அல்லது வெளிர் நிறமான சுவரை நோக்கித் தலையைத் திருப்பி, கண்களைத் திறந்து, உற்றுப் பாருங்கள்.

என்ன! இங்கே பார்த்த ஏசு கிறிஸ்துவின் உருவம் சுவரில் தெரிகிறதா?

நிறையப் புதிர்களைப் படித்திருப்பீர்கள். புத்திசாலித்தனமாகக் கணக்கிட்டு, சரியான விடையையும் கண்டுபிடித்திருப்பீர்கள். ஆனால் இங்கே சொல்லப்போவது, வித்தியாசமான ஒரு புதிர்.

வழக்கமான கோணத்தில் யோசித்து, கணக்குப் போட்டு, இதற்கு விடை சொல்ல முடியாது.


அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்றின் பத்தாவது மாடியில் ஒருவர் வசிக்கிறார். அவருடைய பையன், தன் பத்தாவது மாடி ஃபிளாட்டிலிருந்து கீழே வர வேண்டும் என்றால் லிஃப்ட் மூலம் கீழே இறங்கி வந்துவிடுவான்.

ஆனால், கீழேயிருந்து மேலே போக வேண்டும் என்றால், எட்டாவது மாடி வரை லிஃப்டில் போய்விட்டு, அதன் பிறகு, படிக்கட்டு மூலம் ஏறிப் போவான். ஒவ்வொரு தடவையும் இப்படி படியேறிப் போவது அவனுக்குப் பிடிக்காது. ஆனாலும் வேறு வழியில்லாமல் நடந்துதான் போவான்! என்ன காரணம், வித்தியாசமான கோணத்தில் யோசித்துப் பார்த்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

விடை: அந்தப் பையனுக்கு, லிஃப்ட்டுக்குள் இருக்கும் லிஃப்ட் ஸ்விட்ச்சில் பத்தாவது மாடிக்குரிய பட்டன் எட்டாது. எட்டாவது மாடிக்குரிய பட்டன்வரைதான் எட்டும். எனவே, எட்டாவது மாடிக்கு உரிய பட்டனை அழுத்திவிட்டு, அதுவரை மட்டும் லிஃப்டில் போகிறான்.

ஆனால் கீழே வரும்போது, தரைதளத்துக்குரிய பட்டன் கீழேதானே இருக்கும். சுலபமாக அதை அழுத்தி, கீழே வந்து விடுவான்!

— கௌதம் ராம்



சு. ஜெயகவிதா

நல்லவனூரில் முத்தையா என்ற எண்ணெய் வியாபாரி இருந்தார். அவருக்குச் சொந்தமாக ஒரு எண்ணெய் ஆட்டும் செக்கும் இரண்டு மாடுகளும் இருந்தன.

அவர் வெளியூர் விவசாயிகளிடம் எள்ளை விலை கொடுத்து வாங்கி அதைத் தன்னுடைய செக்கில் ஆட்டி எண்ணெய் எடுத்து வியாபாரம் செய்தார்.

திடீரென எள் விலை உயரவே அவர் மிகவும் வேதனைப்பட்டார். அப்போது அவரது மனைவி ஒரு யோசனை சொன்னாள்.

"என்னங்க, நாமே எள்ளைப் பயிர் செய்தால் நமக்கு நல்லதுதானே?" என்றாள்.

அவருக்கும் அந்த யோசனை பிடித்திருந்தது. அவருக்கு ஒரு காடு தரிசுநிலமாய் இருந்தது.

அதில் ஒரு பழைய ஆலமரமும் இருந்தது. அதை வெட்டி வீழ்த்தினால்தான் பயிர் செய்ய முடியும்.

பேயைப் பிடித்துக் கட்டு!



"நாளைக்கே மரத்தை வெட்டுங்கள். மரமும் விலை போகும். விளை நிலமும் சுத்தப்படும்" என்றாள் அவர் மனைவி.

மனைவியின் வார்த்தைப்படியே அவர் மறுநாள் காலையிலேயே கையில் கோடாரியோடு காட்டிற்குச் சென்றார்.

மரத்தில் கோடாரியால் ஒரு வெட்டு வெட்டினார். மரத்திலிருந்து ஆ...ஊ...வென பயங்கர அலறல் கேட்டது.

அவர் திடுக்கிட்டார். ஆனாலும் பயப்படவில்லை. "யார் நீங்கள்?" என்றார்.

"நாங்கள் இந்த மரத்தில் குடியிருக்கும் பேய்கள். நீண்ட காலமாக இங்கே குடியிருந்து வருகிறோம். தயவுசெய்து மரத்தை வெட்டாதீர்கள்" என்றது ஒரு பேய்.

"முடியாது. இதை வெட்டினால் தான் நான் என் பயிரிட முடியும். ஆகையால் மரத்தை வெட்டாமல் விடமாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொன்னார் முத்தையா.

"உனக்குத் தேவை என். எங்களுக்குத் தேவை மரம். உனக்குத் தேவையான எள்ளைக் கொடுத்தால் மரத்தை வெட்டாமல் விடுவாயா?" என்று கேட்டது மற்றொரு பேய்.

அவர் யோசித்தார். மரத்தை வெட்டி பின், நிலத்தை உழுது, பயிரிட்டு, அப்புறம் விளைச்சலைப் பார்ப்பதற்கு நீண்ட நாட்களாகும். அதுவும் போக உழைக்காமலே பலன் கிடைத்தால் கசக்கவா செய்யும்? நல்ல யோசனையாகவே பட்டது.

"சரி. உங்கள் யோசனை எனக்குப் பிடித்திருக் கிறது. ஆனால் என்றைக்கு நீங்கள் எள் கொண்டு வந்து தருவதை நிறுத்துகிறீர்களோ, அன்றைக்கு மறுபடி மரத்தை வெட்ட வருவேன்" என்றார்.

உடனே மரத்திலிருந்த பேய்கள் எல்லாம் கட்டுப் பட்டு அவரது வார்த்தையை ஏற்றுக் கொண்டன. அன்று முதல் அவரது வீட்டிற்குத் தினமும் தேவை யான அளவு எள்ளைக் கொண்டு வந்து போட்டு விட்டுச் சென்றன.

எண்ணெய் வியாபாரி இப்போது பணம் கொடுத்து எள் வாங்க வேண்டிய அவசியமில்லாமல் இலவசமாக கிடைத்த எள்ளையே ஆட்டி எண்ணெ யாக்கி விற்று வந்தார்.

ஆலமரத்திற்குப் புதிதாக ஒரு பேய் குடி வந்தது. அது மற்ற பேய்களின் செய்கைகளைக் கவனிக்கலாயிற்று. எல்லாப் பேய்களும் இரவில் எங்கோ சென்று விட்டுக் காலையில் மரத்திற்குத் திரும்பும் ரகசியத்தை ஒரு பேயிடம் கேட்டது.

"அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறாய்? இந்த மரத்தை வெட்டாமல் இருப்பதற்காக நாங்கள் தின மும் பல இடங்களில் அலைந்து திரிந்து எள்ளைக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று மனக்குறையை வெளியிட்டது ஒரு பேய்.

"அட முட்டாள்களே...! பேய் என்றால் மனிதன் பயப்படுவான். நீங்கள் அவனுக்குப் பயப்படுகிறீர்கள். உங்களுக்கு வெட்கமாயில்லை. அவன் கொட் டத்தை அடக்கும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று சவால் விட்டது புதுப் பேய்.

மற்ற பேய்கள் அதன் பேச்சைக் கேட்டு ஆறு தலடைந்தன.

அன்று காலையிலேயே அந்தப் பேய் முத்தை யாவின் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் போய் ஒளிந்து கொண்டது.

மாட்டுத் தொழுவத்திற்கு வந்தார் முத்தையா. மாடுகள் பேயின் வருகையைத் தெரிந்து கொண்டு மிகவும் மிரண்டன. இப்படியும் அப்படியுமாகத் துள்ளின.

முத்தையாவிற்குக் கோபம் வந்தது. கையில் சாட்டையை எடுத்து, "அடங்காத பேயே! உன்னைக் கட்டி வச்சுத் தோலை உரிக்கிறேன் பார். என்கிட் டேயா நீ கண்ணாமூச்சி விளையாடுகிறாய்?" என்று சாட்டையை ஒரு சுழற்று சுழற்றினார்.

மாட்டுத் தொழுவத்தில் ஒளிந்திருந்த பேய்க்குப் பயம் உண்டாயிற்று. 'நாம் ஒளிந்திருந்ததை எப்படி கண்டுபிடித்தான். இவன் உண்மையிலேயே அபார சக்தி கொண்டவனாகத்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால நாம் அவன் கண்ணுக்குப் புலப் பட்டிருக்க மாட்டோமே' என நினைத்தது.

ஆனால் உண்மையில் முத்தையா தம் மாட் டைத்தான் பேய் என்று குறிப்பிட்டார் என்பது அந்த பேய்க்குத் தெரியவில்லை.

பயந்து போன பேய் தான் சாட்டையடி வாங்கும் முன் தப்பித்துக் கொள்ள நினைத்து அவர் முன் வந்து காலில் விழுந்து பணிந்தது. "என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் இங்கே வரமாட் டேன்" என்றது.

முத்தையாவும் புதுப்பேயிடம் வந்த விஷயத்தைக் கேட்டார். அது எல்லா விவரமும் சொன்னது.

"நீங்கள் குடியிருக்கும் இடம் என்னுடையது. அதற்கு வாடகை போல் எள்ளைத் தருகிறீர்கள். நீ என்னிடத்திற்கு வந்தது உன் குற்றம்தான். அதற் குத் தண்டனை அடைந்தே தீர வேண்டும்" என்றார்.

"என்ன தண்டனை வேண்டுமானாலும் தாருங் கள். ஆனால் சாட்டையடி மட்டும் வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டது பேய்.

"அப்படி வா வழிக்கு... இன்று முதல் யாரும் எள் கொண்டு வர வேண்டாம். அதற்குப் பதிலாக எண்ணெயாகக் கொண்டு வந்து தாருங்கள்" என்று கட்டளையிட்டார் முத்தையா.

"அப்படியே செய்கிறோம்" என்று சொல்லி விட் டுத் தப்பித்தோம்; பிழைத்தோம், என எண்ணிய படியே அந்தப் புதுப் பேய் ஓட்டம் பிடித்தது. இப் போது பேய்கள் எண்ணெய்க்காக இரவில் அலைந்து கொண்டிருக்கின்றன!


"எங்க வீட்ல திருடன் பூட்டை உடைச்சு திருடிட்டுப் போயிட்டான்!"

"பூட்டை எதுக்கு அவன் திருடிட் டுப் போனான்?"

- எம். விநோத்



ஸ்பைடர் மேன்



சூப்பர்மேன், பேட் மேன் போன்ற பெயர்களைப் போல் ஸ்பைடர் மேன் என்ற பெயரும் உலகம் முழுவதும் எல்லோருக்கும் நன்கு அறிமுகமான பெயர்தான். 1962ஆம் ஆண்டு மார்வல் காமிக்ஸ் நிறுவனத்தால் காமிக்ஸ் உலகில் அறிமுகமானான் ஸ்பைடர் மேன்.

நாற்பதாண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக திரைப்பட உலகில் கால் எடுத்து வைத்திருக்கிறான் ஸ்பைடர்மேன். ஏற்கெனவே வெளிவந்து வசூலை வாரிக் கொட்டிய சூப்பர் மேன் படத்தையும் வசூலில் மிஞ்சி விட்டது ஸ்பைடர் மேன் திரைப்படம். உலகம் முழுவதும் இப் படத்திற்குச் சிறியவர், பெரியவர்களிடத்தில் அமோக ஆதரவு கிடைத்திருக்கிறது.

ஸ்பைடர் மேனாக வரும் பீடர் பார்க்கர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மாணவன். ஒரு நாள் ஆய்வுக் கூடத்தில் விசேஷ சக்தியுடன் உருவாக்கப்பட்ட சிலந்தி பீடர் பார்க்கரைக் கடித்து விடுகிறது. அந்தச் சிலந்தியின் சக்தி தனக்குக் கிடைத்திருப்பதை மெதுவாக உணர்கிறான் பார்க்கர். சிலந்தியின் சக்தி வெளிப்படும் நேரங்களில் அவனால் பல வித சாகஸங்களைச் செய்ய முடிகிறது.

முதலில் இந்த விசேஷ சக்தியை வைத்துப் பணம் சம்பாதிக்கும் வழியில் இறங்குகிறான். பிறகு தீய சக்திகளை அழித்து மக்களைக் காப்பாற்றவும், தன் மாமாவைக் கொன்றவனைப் பழி தீர்க்கவும் பயன்படுத்துகிறான்.


ஸ்பைடராக இல்லாத நேரங்களில் சாதாரண மனிதனுக்குள்ள கவலை, ஆசை, கோபம், பாசம், பயம் என எல்லாவற்றுடனும் வலம் வருகிறான் பார்க்கர்.

ஸ்பைடர்மேனின் வெற்றிக்கு இந்த யதார்த்தமான அம்சங்கள்தான் காரணம் என்கிறார்கள். சூப்பர் மேன் வேற்று கிரக மனிதன், பேட் மேன் பணக்காரன். ஆனால் இந்த ஸ்பைடர் மேனோ நம்மில் ஒருவன் என்ற உணர்வை ஏற்படுத்துவதுதான் மாபெரும் வெற்றியின் ரகசியம் என்கிறார்கள். பல வருடங்களாகவே குழந்தைகள் பயன்படுத்தும் சட்டை, பொம்மை, பை, வாட்டர் பாட்டில் போன்றவற்றில் ஸ்பைடர் மேன் உலா வந்திருக்கிறான். அத்தகையவனைத் திரையில் பார்க்க யாருக்குதான் ஆர்வம் இருக்காது?

— நடராஜன்

40ஆம் பக்கத்தில் போஸ்டர்

பரிசு ரூ.100/-



- கி.மகிழ்மாறன், திருநின்றவூர்.

நகைச்சுவை மேடை!




பரிசு ரூ.50/-

"ஒரு கணக்குப் புத்தகம் இன்னொரு கணக்குப் புத்தகத்திடம் என்ன சொல்லும்?"

"தெரியலையே!"

"எனக்கு ஏகப்பட்ட பிராப்ளம்!"

- பி.விஜயசாரதி, திருப்பதி



பரிசு ரூ.25/-

அப்பா : ஏண்டா, சாப்பிட்டுக்கிட்டு இருக்கும் போது பேசக் கூடாதுன்னு உங்கிட்ட சொல்லியிருக்கிறேன்ல?

அம்மா : அவன் எங்கேங்க சாப்பிட்டுக்கிட்டு இருக்கும்போது பேசறான்? அவன் பேசிக்கிட்டு இருக்கும்போதுதானே சாப்பிடறான்!

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

ஜோக்ஸ் எழுதுங்கள், பரிசுகளை வெல்லுங்கள்!

பரிசு ரூ.15/-

"கப்பற்படையிலே சேர்ந்திருக்கியே, உனக்கு நீந்தத் தெரியுமா?"

"விமானப்படையிலே சேர்ந்திருக்கியே உனக்குப் பறக்கத் தெரியுமா?"

- வெங்கடேஷ், பதினோராம் வகுப்பு, சைனிக் பள்ளி, உடுமலைப்பேட்டை.




பரிசு ரூ.15/-


"உன் சாக்ஸ்ல ஓட்டை இருக்காடா?"


"இல்லையே!"

"பின்னே எப்படி காலை நுழைப்பே?"

- ஜி. கார்த்திகேயன், சென்னை






செல்லப்பன் காசு
செல்லாக் காசு
கதை: வி. கமலக்கண்ணி படம்: தமிழ்
செல்லப்பன் பெரிய செல்வந்தர். ஆனால் மகாகருமி.
வேலப்பா, துணியெல்லாம் மூட்டைக் கட்டிட்டியா?
எல்லாம் தயாரா இருக் குங்க.
மறுநாள் வியாபாரம் முடிந்து திரும்பும்போது -
ஐயா, இன்னிக்கு நல்ல வியாபாரம் என் கூலியைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுங்க.
ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு மேல் ஒரு பைசா தர மாட்டேன். இதை வச்சுக்கிட்டு ஒழுங்கா வேலை செய்.
சிறிது நேரத்தில் -
ஐயா, இந்தப் பக்கம் திருட்டுப்பயம் அதிகம். தூரத்தில் யாரோ வருவது போல் தெரியுது.
இப்ப என்னடா பண்றது?
நான் அந்தப் புதர்ல ஒளிஞ் சுக்கறேன். நீங்க இந்தப் புதர்ல ஒளிஞ் சுக்குங்க.
திருடர்கள் வந்தனர்.
அதோ, புதர்ல அசைவு தெரியுது. யார்டா அது?
நீ வர்றியா, நாங்க வரட்டுமா?


வெளியில் வந்தான் வேலப்பன்
எவ்வளவு பணம் வச்சிருக்கே?
இந்த ஒரு ரூபாய் தாங்க.
ஏண்டா இவ்வளவுதானா? அதுவும் செல்லாக் காசாக இருக்கு!
என்னது, செல்லாக் காசா?
இதுக்குப் போய் ஒளிஞ்சியா? செல்லுமா, செல்லாதா?
எனக்கு எப்படி தெரியும்? வேணும்னா அங்கே இருக்கிற எங்க ஐயாகிட்டே கேட்டுக்குங்க.
திருடர்கள் செல்லப்பனிடம் இருந்த பணத்தையும் எடுத்துக்கொண்டு, தர்ம அடியும் கொடுத்து விட்டுச் சென்றனர்.
வீட்டில் –
வேலப்பன்தான் கைத்தாங்கலா உங்களை அழைச்சு வந்திருக்கான்.
அவனாலதான் இவ்வளவு பிரச்னையும்.
பிரச்னை உங்களாலதான். நீங்க நல்ல காசைக் கொடுத்திருந்தால் திருடர்கள் அதை வாங்கிட்டுப் போயிருப்பாங்க.
உங்க கஞ்சத் தனத்துக்கு நல்ல பாடம் கற்பிச் சிட்டாங்க.



• தன்ராஜ் பிள்ளை

தேய்ந்து வரும் தேசிய விளையாட்டு

இதுவரை வேறெந்த விளையாட்டிலும், இல்லாத அளவுக்கு ஹாக்கியில், இந்தியா எட்டுத் தங்கப் பதக்கங்களை ஒலிம்பிக்ஸ் போட்டியில் வென்றிருக்கிறது. ஆனால் இந்தப் பெருமையெல்லாம் 1980ம் ஆண்டு வரைதான். அதற்குப் பின், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, வெண்கலம்கூட வென்றெடுக்காத நிலைதான் இருந்து வந்திருக்கிறது. இடையில் ஒரே ஒருமுறை ஆசிய விளையாட்டில் தங்கப் பதக்கம் வென்றது. தேசிய விளையாட்டாக அறிவிக்கப்பட்டுள்ள ஹாக்கிக்கு ஏன் இந்த நிலை?

"ஒரு நல்ல ஆட்டக்காரரை உருவாக்க வேண்டுமென்றால் எட்டு வயதிலிருந்தே திட்டமிட்டு உருவாக்க வேண்டும். ஆனால் தற்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஹாக்கிக்கு, ஏன் பொதுவாக விளையாட்டுகளுக்கே, சரியான முக்கியத்துவம் தரப்படுவதில்லை. சென்னை நகரில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் பள்ளிகளில் ஹாக்கி அணிகள் இருக்கின்றன. அதேபோல் நான்கைந்து கல்லூரிகளில்தான் ஹாக்கிக்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது. இதற்கு மற்றொரு காரணம், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் தற்போது விளையாட்டுத் திறமை அடிப்படையில் வேலைக்கு ஆட்களை எடுப்பதில்லை. எனவே இளைஞர்களுக்கு உற்சாகம் போய்விட்டது. மேலும் இன்றைய சூழலில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்கள் பொழுதைக் கழிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவர்கள் விளையாட்டு மைதானத்தில் நேரம் செலவழிக்க விரும்புவதில்லை. இதுதவிர அவர்களது நேரத்தைப் படிப்பும் ஆக்ரமித்து விடுகிறது. இந்தக் காரணங்களால், ஹாக்கி உட்பட வேறு பல விளையாட்டுகளும் தேய்ந்து வருகின்றன. இந்த நிலையில் உலக அளவில் நாம் எப்படி சிறந்த நிலையில் உருவாக முடியும்?" என்று கேட்கிறார் ஹாக்கி நடுவர்கள் சங்கத் தலைவர் நபி.

ஹாக்கி ஆட்டம் இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே ஆடப்பட்டிருப்பதாகத் தகவல்கள் சொல்கின்றன. எகிப்தில் நைல் நதி பள்ளத்தில் உள்ள பெனிஹசன் நகரில் உள்ள கல்லறைச் சுற்றுச் சுவரில் இருவர் கையில் மட்டையை வைத்துக் கொண்டு ஹாக்கி ஆடுவது போன்ற சித்திரம் உள்ளது. இந்தச் சித்திரம் 2000 ஆண்டுகள் பழமையானது என்று சொல்லப்படுகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 470 வருடங்களுக்கு முன்பே எகிப்து, பாபிலோனியா மற்றும் கிரேக்கம் ஆகிய பகுதிகளில் ஹாக்கி விளையாடப்பட்டு வந்ததற்கு ஆதாரமாகச் சித்திரங்கள் இருக்கின்றன. ஆனால் தற்போது ஆடப்படும் நவீன ஹாக்கிக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பிரிட்டிஷ் தீவுகளில்தான். 1908ம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ஹாக்கியும் முதன் முதலாக இடம் பெற்றது. 1928ம் ஆண்டு, இந்தியா ஒலிம்பிக்ஸ் ஹாக்கி போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளத் துவங்கியது. 1958ல் டோக்யோவில் நடந்த ஆசிய விளை

யாட்டில் ஹாக்கி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய ஹாக்கியின் தந்தை என்று தியான்சந்தைச் சொல்லலாம் 1926ம் ஆண்டிலேயே இந்தியப் படைவீரர்களைக் கொண்ட ஹாக்கி அணியை நியூஸிலாந்து நாட்டுக்கு அழைத்துப் போனவர் இவர். இவரும் இவரது சகோதரர் ரூப்சிங்கும் சிறந்த ஹாக்கி வீரர்கள். கிட்டத்தட்ட 100 சர்வதேச போட்டிகளுக்கு மேல் ஆடியுள்ளார் தியான்சந்த். 1932ல் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் அமெரிக்காவுக்கு எதிராக ஆடியபோது தியான்சந்த் எட்டு கோல்களும் அவரது சகோதரர் ரூப்சிங் ஒன்பது கோல்களும் போட்டார்கள். இது இன்றுவரை ஒரு சாதனைதான். இவருக்குப் பிறகு குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு வீரர் முகமது ஹாகித். சுமார் பத்து ஆண்டுகளில் 200க்கும் மேற்பட்ட சர்வதேச போட்டிகளில் பங்கெடுத்துள்ளார் இவர்.

இன்றளவும் பஞ்சாப் மாநிலம்தான் சிறந்த ஹாக்கி ஆட்டக்காரர்களை உருவாக்கி வருகிறது என்று சொல்லலாம். ஒரு சமயத்தில் இந்திய அணியில் பல்பீர் சிங் என்ற பெயரில் மூன்று வீரர்கள் இருந்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு இந்திய அணியில் சிறந்த வீரரான தன்ராஜ் பிள்ளை தமிழகத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால் இவர் ஆடுவது மராட்டிய மாநிலத்துக்காக. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தினேஷ் நாயக், திருமாவளவன், பிரபாகரன், ரியாஸ் போன்ற ஆட்டக்காரர்கள் சிறந்து விளங்குகிறார்கள். உலக அளவில் பார்த்தால் இன்று சாம்பியன் ஹாலந்துதான். ஒரு காலத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையில்தான் இறுதிப் போட்டிகள் நடக்கும். இப்போது இந்த இரு நாடுகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஹாலந்து, கொரியா, ஆஸ்திரேலியா போன்றவை முன்னுக்கு வந்து விட்டன. இருந்தும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இப்போதும் பரபரப்பான போட்டிகள் நடந்து வருகின்றன. ஆசியப் போட்டிகளைப் பொறுத்தமட்டில் இறுதியில் மோதுவது இந்தியாவும் பாகிஸ்தானும் மட்டும்தான். 1994ல் சார்க் விளையாட்டுப் போட்டிகளில் சென்னையில் இந்தியாவும் பாகிஸ்தானும் இறுதிப் போட்டியில் மோதின. சென்னை ஹாக்கி ரசிகர்கள் இன்றளவும் அந்த ஆட்டத்தை மறக்கவில்லை. அத்தனை விறுவிறுப்பான போட்டி அது. அதில் ஐந்துக்கு இரண்டு என்ற அளவில் பாகிஸ்தானை இந்தியா வென்றது.



கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் கோகுலம் ஏழாவது இதழ் வெளி வந்துவிட்டது. இன்னும் ஐந்து இதழ்களே உள்ளன. கோப்பைக்காகப் போட்டியிடும் பள்ளி மாணவ, மாணவியர் தங்கள் படைப்புகளை அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

சென்னையில் இருக்கும் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியம் உலகிலேயே இரண்டாவது சிறந்த ஸ்டேடியம். அஸ்ட்ரோ டர்ப் என்ற செயற்கை புல் ஸ்டேடியமான இதில் ஆடுவதற்குத் தனிப் பயிற்சி வேண்டும். தமிழ்நாட்டிலேயே இது ஒன்றுதான் இந்த வகையான ஸ்டேடியம். ஆனால் மாவட்டங்களில் உள்ள ஆர்வமுள்ள பல ஆட்டக்காரர்களுக்கு இதில் பயிற்சி எடுக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை.



தேசிய மற்றும் சர்வதேச போட்டிகள் செயற்கை புல் ஸ்டேடியத்தில் நடப்பதால், ஆட்டக்காரர்கள் இந்த வகையான ஸ்டேடியங்களில் பயிற்சி பெறுவது அவசியம்.

''எட்டிலிருந்து பத்து வயதுக்குள் ஒரு சிறுவனை ஹாக்கி ஆட்டத்தில் ஈடுபடச் செய்து, பயிற்சி கொடுத்து வந்தால் அவனது இருபதாம் வயதில் சிறந்த ஆட்டக்காரராக உருவாகலாம்'' என்கிறார் நபி. ஹாக்கி மட்டையை எப்படி பிடிப்பது, பந்தை லாவகமாக எப்படி புஷ் செய்வது, வேகமாக அடித்து எப்படி பந்தை பாஸ் செய்வது, மட்டையிலேயே பந்தை எவ்வாறு கடத்திக் கொண்டு போவது, எதிர் அணி கோல் கீப்பர் ஏமாறும் விதத்தில் எப்படி கோல் அடிப்பது என்ற பல நிலைகள் பயிற்சியில் இருக்கின்றன. பேஸ் ஆப் த ஸ்டிக் என்று சொல்லப்படும் பகுதியைக் கொண்டுதான் மட்டையில் ஆட வேண்டும். அதன் மறு பக்கத்தால் பந்தை அடிக்கக் கூடாது. ஒரு தரமான ஹாக்கி மட்டையின் விலை ஐநூறு ரூபாய்க்கும் மேல்தான். ''ஹாக்கி விளையாட்டில் மட்டையால், காலை அடிப்பார்கள் என்று பயந்து கொண்டே பல சிறுவர்கள் இந்த ஆட்டத்தைத் தவிர்க்கிறார்கள். இது தவறான கண்ணோட்டம். இது போன்ற முறைகேடான ஆட்டங்களுக்கு அபராதம் உண்டு. எனவே பெற்றோர்கள்தான் தைரியம் சொல்லி சிறுவர்களை ஹாக்கி விளையாட ஊக்கப்படுத்த வேண்டும்'' என்கிறார் நபி.

ஹாக்கி ஆட்டத்தில் ஒரு அணியில் 16 வீரர்கள். ஆனால் களத்தில் 11 வீரர்கள் இருப்பார்கள். ஆட்டக் களத்தில் நடுக்கோட்டை ஒட்டி ஐந்து முன்னணி வீரர்கள். எதிர் அணி ஏரியாவில் ஊடுருவி கோல் போடுபவர்கள் இவர்கள்தான். இந்த ஐந்து பேருக்குப் பின்னால் எதிரணி தாக்கு

தலைத் தடுக்கும் வண்ணம் மூன்று வீரர்கள். அவர்களுக்கு பின்னால், பந்தை முன்னணி வீரர்களுக்கு பாஸ் செய்து கொடுக்க இரண்டு வீரர்கள். அப்புறம் கோல் கீப்பர். 35 நிமிடங்கள் என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து எழுபது நிமிடங்கள் போட்டி நடக்கும். இடையில் பத்து நிமிடம் ரெஸ்ட். அப்போது இரண்டு அணிகளும் இடம் மாறிக் கொள்ளும். முன்பெல்லாம் பத்து நிமிட இடைவேளையின் போதுதான் ரிசர்வில் இருப்பவர்கள் களம் புகுந்து ஆட்களை மாற்றிக் கொள்வார்கள். ஆனால் இப்போது ஆட்டத்தின் எந்தச் சமயத்திலும் ஆட்டக்காரர்களை வெளியே அழைத்து ரிசர்வில் இருப்பவர்களை உள்ளே அனுப்பலாம். ஷூட்டிங் சர்க்கிள் என்று சொல்லப்படும் 'D' பகுதியில் இருந்துதான் கோல் அடிக்க வேண்டும்.





• நபி

70 நிமிடங்களில் எந்த அணியும் கோல் போடவில்லையென்றால் முடிவு எப்படி நிர்ணயம் செய்யப்படும்? 70 நிமிடங்களுக்குப் பிறகு நாக் அவுட் என்று ஒவ்வொரு அணிக்கும் தலா ஏழரை நிமிடம் கொடுப்பார்கள். அந்த வேளையில் அடிக்கப்படும் கோலுக்கு 'கோல்டன் கோல்' என்று சொல்வார்கள். ஏழரை நிமிட ஆட்டத்திலும் யாரும் கோல் அடிக்கவில்லை அல்லது சமமான கோல்கள் என்றால் அப்புறம்? டைபிரேக்கர் என்று ஒவ்வொரு அணிக்கும் ஐந்து வாய்ப்பு கொடுப்பார்கள். கோல் கீப்பருக்குச் சில மீட்டர் தொலைவில் இருந்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். டைபிரேக்கரிலும் முடிவு தெரியாவிட்டால், கடைசியாக வருவதுதான் சடன் டெத். இரண்டு அணிகளிலும் உள்ள ஆட்டக்காரர்களுக்கு கோல் போட வாய்ப்புக் கொடுக்கப்படும். அணிகளின் கோல் கீப்பர்கள் மாறி, மாறி, பங்கெடுப்பார்கள். இந்த வகையில் யார் முதல் கோல் அடிக்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்கள். பல போட்டிகள் சடன் டெத் வரை போய் முடிவைக் கண்டதுண்டு.

இந்தியாவைப் பொறுத்தவரை, ரங்கசாமி கப், நேரு மெமோரியல், பம்பாய் கோல்டு கப், ஆகாகான் கோல்டு கப் ஆகியவை முக்கியமான போட்டிகள். மிகவும் ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால், சென்னை கிரிக்கெட் கிளப்பும் ஆண்டுக்கொருமுறை ஹாக்கிப் போட்டிகளை நடத்துகிறது. இப்போது ஹாக்கியில் சிறப்பாகப் பேசப்படுவது பெங்களூரில் நடத்தப்படும் 'யூ அண்ட் ஐ' போட்டிகளைப் பற்றித்தான். தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி வாரியம், இந்திய விளையாட்டுக் கழகம் ஆகியவை ஆர்வமுள்ள சிறுவர்கள், இளைஞர்களுக்கு இலவசமாகவே ஹாக்கிப் பயிற்சி கொடுக்கின்றன.

"தங்கும் இடம், சாப்பாடு இலவசம்... இதுபோன்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு சிறந்த வீரர்கள் உருவானால் ஹாக்கியில் இழந்த பெருமையை நாம் மீட்க முடியும்" என்கிறார் நபி.

- ப்ரியன்

படங்கள் : **ராஜன்**

தேர் திருவிழா!



ஒரிஸ்ஸாவில் இருக்கும் பூரியில் ஜெகநாதர் கோயில் மிகவும் பிரபலமானது. ஜெகநாத் என்பதற்கு 'வெல்ல முடியாத சக்தி' என்று பொருள். ஆண்டுதோறும் ஜூன் - ஜூலை மாதங்களில் பூரியில் தேர் திருவிழா சிறப்பாக நடத்தப்படுகிறது. அப்போது ஜெகநாதர் (ஸ்ரீ கிருஷ்ணர்) பெரிய தேரிலும், பாலபத்ரா (பலராமன்), சுபத்ரா (தங்கை) ஆகியோர் சற்றுச் சிறிய தேர்களிலும் வலம் வருவார்கள். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் தேர் திருவிழாவைக் காண பூரிக்கு வருகிறார்கள்.

ஜெகநாதரின் புகழைப் பரப்பும் கோஷத்தோடு பக்தர்கள் தேரை இழுத்து வரும் காட்சி மிகவும் அருமையாக இருக்கும். ஜெகநாதரையோ, அவரது தேரைக் கட்டியிருக்கும் கயிற்றையோ தொடுபவர்கள் மறு பிறப்பிலிருந்து விடுபடுவார்கள் என்பது மக்களின் நம்பிக்கை.

ஜெகநாதர் பழங்குடி மக்களின் கடவுள். நீலக் கல்லில் அமைந்த சிற்பத்தை பழங்குடி மக்கள் அலங்காரம் செய்து வழிபட்டு வந்தனர்.

ஒரு நாள் இந்திரதியும்னன் என்ற அரசனின் கனவில் பிரம்மன் தோன்றி கோயில் கட்டும்படி கூறுகிறார். பூரியில் இருக்கும் பழங்குடிகள் வழிபடும் கடவுளைத் தேடி அரசன் வரும்போது நீலக்கற்சிலை காணாமல் போய் விடுகிறது. அரசன் கடவுளை வேண்டி நிற்கும்போது 'கடலில் மிதந்து வரும் மரக்கட்டையைக் கொண்டு சிற்பம் செதுக்கு' என்று அசரீரீ ஒலிக்கிறது.

கடலில் மிதந்து வந்த கட்டையை எடுத்த அரசன் பல சிற்பிகளை வைத்து செதுக்கச் சொன்னான். ஆனால் ஒருவராலும் செதுக்க இயலவில்லை. பிறகு தேவ சிற்பி வந்து "நான் 21 நாட்கள் ஒரு அறையில் இருந்து செதுக்குவேன். அதற்குப் பிறகுதான் கதவைத் திறக்க வேண்டும்" என்றார். அரசனும் சம்மதித்தான்.

ஒரு நாள் உளி சத்தம் கேட்காததால் அவசரப்பட்டுக் கதவைத் திறந்தான் அரசன். அங்கு தேவ சிற்பி இல்லை. முற்றுப் பெறாத மூன்று மர சிற்பங்கள் மட்டுமே இருந்தன. இன்றுவரை இந்த முழுமையடையாத சிற்பங்கள்தான் தேர் திருவிழாவின்போது வலம் வருகின்றன.

படம் : தேபப்ரதா பானர்ஜி

குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. தமிழ்நாட்டில் பலா பழத்துக்குப் பெயர் பெற்ற ஊர் (5)

3. பூந்தி ஒன்று சேர்ந்தால் இது கிடைக்கும் (3)

4. ஆற்றில் மண்ணைத் தோண்டினால் ____ நீர் கிடைக்கும் (3)

7. இவர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் (4)

10. பாண்டவர்களின் தாய் (3)

11. ____ தாளம் இவற்றுடன் வரவேற்பு (3)

வலமிருந்து இடம்

2. உலகம் (3)

6. மண்பாண்டம் செய்பவர் (4)

9. செழிப்பு என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

12. நவரத்தினங்களுள் ஒன்று (5)

மேலிருந்து கீழ்

1. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு இவர்கள் ஆட்சி செய்தனர் (5)

2. சரி என்பதற்கு எதிர்ச்சொல் (3)

8. இடம் விட்டு இடம் நகராத உயிரினம் (5)

9. காடு (3)


கீழிருந்து மேல்

4. கிராமப்புறங்களில் குடிதண்ணீருக்கான நீர் நிலை (3)

5. சிற்றுண்டிகளில் ஒன்று. உப்புமாவுக்கு நெருங்கிய உறவு (4)

11. இது குளிர்ந்தால் மழை பொழியும் (3)


12. மருத்துவர் என்பதை இப்படியும் கூறலாம் (5)





விடை 50 ஆம் பக்கம்

- உ. சங்கரலிங்கம்,
எட்டாம் வகுப்பு,
புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி,
செங்கல்பட்டு.



யாரும்

மாலதி

ஏழையாகப் பிறந்தாலும் நற்குணங்கள் நிறைந்தவள் கங்கா.

உரிய வயதில் அவளுக்குத் திருமணம் நடந்தது. புகுந்த வீடும் ஏழ்மையானதே. கங்கா மூன்றாவது மருமகள். மூத்த இரு ஓரகத்திகளுடனும், மாமியாருடனும் ஒற்றுமையாகப் பணிவுடன் நடந்து கொண்டாள் கங்கா.

காட்டில் சுள்ளி பொறுக்க மூன்று மருமகளும் போவது வழக்கம். ஒருநாள் அவள் தலையில் 'டொக்'கென்று ஏதோ விழுந்தது. எடுத்துப் பார்த்தால் அரச முத்திரை பதித்த வைர மோதிரம். ஏதோ பறவை வாயிலிருந்து விழுந்திருக்க வேண்டும். எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

சுள்ளிக் கட்டோடு ஊருக்குள் வந்ததும் முரசறிவிப்பு கேட்டது.

''இந்நாட்டு மன்னரின் முத்திரை மோதிரத்தை ஒரு பறவை தூக்கிச் சென்றுவிட்டது. மோதிரத்தைக் கண்டெடுத்தவர்கள் அரசரிடம் சேர்ப்பித்தால் அவர் விரும்பும் சன்மானம் அளிக்கப்படும். அதை விடுத்து அதைத் தவறான செயலுக்குப் பயன்படுத்திக் கொண்டால் தண்டனை பெறுவர்'' என்று சொல்லிக் கொண்டே சென்றான் முரசறிவிப்பவன்.

கங்கா தன் கணவனிடம்

விளக்கேற்றக் கூடாது!

மோதிரத்தைக் காண்பித்து நடந்ததைக் கூறினாள்.

"என்ன கேட்கப் போகிறாய்? பணமா, நகைகளா? உழுவதற்கு நிலமா? குடியிருக்க வீடா?" என்று கேட்டான்.

"நீங்கள் சொன்ன எதுவுமேயில்லை! ஏன், எதற்கு என்று கேட்காமல் என்னோடு அரண் மனைக்கு வர வேண்டும்" என்று கோரினாள்.

"நீ எது செய்தாலும் எனக்குச் சம்மதமே" என்று மனப்பூர்வமாகச் சம்மதித்தான் கணவன்.

இருவரும் அரண்மனைக்குச் சென்று மன்னரிடம் மோதிரத்தைக் கொடுத்தனர்: மன்னர் அவர்களின் நேர்மையைப் பாராட்டி, "எது வேண் டுமோ கேளுங்கள்" என்றார்.

"அரசே! ஏதாவது ஒரு வெள்ளிக் கிழமை மாலை ஐந்து மணி முதல் ஏழு மணி வரை அரண்மனை உட்பட இந்த ஊரில் ஒரு வீட்டிலும் விளக்கேற்றக் கூடாது. ஒரு வெளிச்சம் கூட இல்லாமல் காவல் போட வேண் டும். நான் மட்டும் விளக் கேற்றுவேன். இந்த வரம் மன்னர் தர வேண்டும்" என்று பணிவுடன் வேண்டினாள்.

மன்னருக்கு வியப்பாக இருந்தது. "எதற்காக இப்படியொரு வேண்டுகோள்? பணமோ, பட்டுப் புடவைகள், நகைகளோ வாங்கிக் கொண்டு சௌக்கியமாயிருக் கலாமே" என்று கேட்டார்.

"வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம். காரணத்தை விளக்கேற்றிய மறு வெள்ளியன்று சொல்கிறேன்" என்றாள் கங்கா.

அரசனுக்குக் காரணத்தை அறியும் அவ சரம்! "அடுத்த வெள்ளிக் கிழமையே விளக்கேற்றிக் கொள்" என்றான். ஊரிலே முரசறைந்து "வரும் வெள்ளிக்கிழமை ஐந்து மணி முதல் ஏழு மணி வரை யார் வீட்டிலிருந்தும் சிறு வெளிச்சம் வந்தாலும் கடும் தண்டனையளிக் கப்படும்" என்று உத்தர விட்டான்.

வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணி. கங்கா தன் ஓரகத்திகளைச் சேர்த்துக் கொண்டு கழுவித் துடைத்து அழகாகக் கோலமிட்டிருந்தாள். வாசல் தெளித்து, காவி பூசி மணக் கோலம் போட்டிருந்தாள். நிறைய அகல், எண்ணெய், திரி எல்லாம் வாங்கி வாசலிலும் நிலைப்படிகளி லும் சந்தனம், குங்குமமிட்டு, துளசி மாடம் உட்பட எங்கும் விளக்கேற்றினாள். அன்று காலையி லிருந்து அவள் எதுவும் சாப்பிடாமல் விரத மிருந்தாள்.

ஊர் முழுவதும் இருண்டு கிடக்க அவள் வீடு மட்டும் ஜெகஜோதியாய்ப் பிரகாசித்தது.

கணவனை வாசலில்



நிறுத்தி, "எவராவது உள்ளே போக வேண்டுமென்று கேட்டால் மறுபடி வெளியே போகக் கூடாதென்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு அனுப்புங்கள். தூங்கி விடாதீர்கள்" என்று எச்சரித்தாள்.

ஒரு மைத்துனரைப் புறக்கடையில் நிறுத்தி, "யாராவது வெளியே போக வேண்டுமென்று கேட்டால் மறுபடி உள்ளே வர மாட்டேன் என்று சத்தியம் செய்து தந்தாலொழிய வெளியே விடாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டாள்.

ஒரு மைத்துனரை விளக்குகளில் எண்ணெய் குறையக் குறையப் பார்த்து ஊற்றச் சொல்லியிருந்தாள். இரு ஓரகத்திகளையும் அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம் படிக்கச் சொல்லி விட்டுக் காற்றில் அணையும் விளக்குகளை மறுபடி ஏற்றிக் கொண்டிருந்தாள் கங்கா.

"நாங்கள் உள்ளே போக வேண்டும். ஏன் தடுக்கிறாய்?" என்ற குரல் கேட்டு வெளியே வந்தாள் கங்கா.

"நீங்கள் யார்?" என்று கங்காவின் கணவன் கேட்க, "நாங்கள் அஷ்ட லக்ஷ்மியர். இருட்டும், அழுக்கும் நாங்கள் வெறுப்பவை. சுத்தமும், வெளிச்சமும் எங்கள் பீடங்கள். எங்களை ஏன் மறிக்கிறாய்?" என்றனர்.

"எக்காரணம் கொண்டும் வெளியே வர மாட்டோம் என்று உறுதி அளித்தால் தாராளமாக உள்ளே போகலாம்" என்றான் கங்காவின் கணவன்.

"ஒழுக்கமும், தூய்மையும் கெடாதவரை வெளியேற மாட்டோம்" என்று அவர்கள் வாக்களிக்க பூர்ணகும்ப மரியாதையோடு அவர்களை வரவேற்றாள் கங்கா. தம்பதிகள் அஷ்டலக்ஷ்மியரின் பாதங்களில் நமஸ்கரித்தனர்.

ஜல், ஜல் என்று மெட்டியும், கொலுசும் சப்தமிட, வளையல்கள் கலகலக்க உள்ளே நுழைந்தனர் அஷ்டலக்ஷ்மியர்.

அதே சமயம் புறக்கடையில் தலைவிரி கோலமாய், மூக்கொழுக, அழுக்கு உடையுடன், நெற்றியில் திலகமின்றி ஓடி வந்தாள் ஒருத்தி.

"கையை எடு. உள்ளே இருக்க முடியவில்லை. என் தங்கையர் வந்து விட்டனர். அவர்கள் இருக்கும் இடத்தில் நான் இருக்க மாட்டேன். வெளிச்சம் என் சத்துரு. சாம்பிராணி, ஊதுபத்தி, பூ, கற்பூர மணம் எனக்கு ஆகாது. விடிந்து வெகு நேரமும், சந்தியாகாலத்திலும் தூங்கும் வீடு எனக்குச் சொர்க்கம். என் பெயர் மூதேவி" என்று பரபரத்தாள்.

"இனி இங்கே வர மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு" என்றான் மைத்துனன்.


"தூ! இந்தத் திசையிலும் எட்டிப் பார்க்க மாட்டேன். பூஜை மணி அடித்து கங்கா என்னைத் தூங்க விடுவதில்லை! துளசிக்கும் எனக்கும் பகை. எப்படி நிம்மதியாய் குடி இருக்க முடியும்? சத்தியமாக இனி இங்கு வர மாட்டேன்" எனவும் கையை எடுத்தான் மைத்துனன். மூதேவி ஓடிப் போனாள்.


அஷ்டலக்ஷ்மியருக்கும் சர்க்கரைப் பொங்கல் நிவேதிக்க பூஜைப் படத்தில் அவர்கள் ஐக்கியமாயினர்.

மறுநாள் காலை. வீட்டிற்குள் ஒரு பெரிய எலிப்பொந்து. அதில் கங்கா தெரியாமல் கால் வைக்க பொதபொதவென்று இறங்கியது. மண்வெட்டியைக் கொண்டு மைத்துனர்கள் சரிசெய்ய முற்பட 'டங்'கென்ற சத்தம். என்னவென்று தோண்டிப் பார்த்தால் ஒரு பெட்டி நிறைய நகைகள்.

அதை அப்படியே அரசனிடம் கொடுத்து விளக்கேற்றக் கூடாது என்றதற்கான காரணத்தையும் கூறினாள் கங்கா. அரசன் அவள் அறிவை, பக்தியை மெச்சி அப் புதையலை அவளுக்கே கொடுத்தான். வீடும் நிலமும், தானியமுமாக செல்வம் கொழித்தது. ஊரும், உறவும் கங்காவைக் கொண்டாடியது.

"எதற்கு அந்த ஹோட்டல்காரர் சைக்கிள் பம்ப் வாங்கிட்டுப் போறார்?"
"பூரிக்குக் காத்தடிக்கவாயிருக்கும்!"
— உடுமலை சுசீலா





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, கைக்கடிகாரப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....


முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா *(6 இதழ்கள்)* ரூபாய் *36/-* ஒரு வருட சந்தா *(12 இதழ்கள்)* ரூபாய் *72/-*. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை **'Gokulam Tamil'** என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.




இடம் பிடித்த பாட்டி

நாங்கள் ரயில் பயணத்திற்காக 'தூங்கும் வசதி' (பர்த்) வகுப்பினை முன் பதிவு செய்திருந்தோம். ரயில் நிலையத்தில் ரயில் வந்தவுடன் எங்கள் பாட்டி அவசர அவசரமாக 2 துண்டுகளைப் போட்டு இடம் பிடிப்பதில் ஆர்வம் காட்டினார். அதோடு இடம் பிடிக்க ஆர்வம் காட்டாத எங்கள் அப்பாவிற்கு செம டோஸ் விட்டார். நாம் முன் பதிவு செய்துள்ளதால் இடம் பிடிக்கத் துண்டு எதுவும் போடாமல் விட்டாலும் நிச்சயம் நமக்கு இடம் கிடைக்கும் என்று விளக்கிய பிறகே சமாதானம் அடைந்தார்.

- பெ.நடராசன், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை

டீ.வி.யா, பாடமா?


ஒரு நாள் டீ.வி. முன் உட்கார்ந்து கொண்டு படம் பார்த்தபடியே பாடம் படித்துக் கொண்டிருந்தாள் என் அக்கா. அதைப் பார்த்த எங்கள் அப்பா, ''டீ.வி. பாரு! இல்ல பாடம் படி. இரண்டையும் பண்ணாதே'' என்று சத்தம் போட்டார். என் அக்கா பயந்து போய் டீ.வி.யை அணைத்துவிட்டு ஒழுங்காகப் பாடம்



பொடிகலர்

பக்கத்து வீட்டுச் சிறுமி எங்கள் வீட்டிற்கு வந்தாள். அம்மா என்னவென்று விசாரித்தார். சிறுமி, ''மாடியில் காயப்போட்ட பொடி கலர் சட்டையைக் காணோம். உங்க வீட்டுப் பக்கம் விழுந்ததான்னு எங்கம்மா கேட்டுட்டு வரச் சொன்னாங்க'' என்றாள். அதைக்கேட்ட என் தம்பி ''பொடி கலர்னா, காப்பி பொடியா, மூக்குப் பொடியா? இல்லை மிளகாய்ப் பொடியா என்ன பொடி கலர்?'' என்று கேட்க அந்தச் சிறுமி பரிதாபமாக விழித்தாள். பிறகு அம்மா தம்பியைக் கண்டித்தார்.


- எம்.மகேஷ், தாரமங்கலம்



அட்மிஷன்

எங்கள் வீட்டு வாண்டு ப்ரணவ்வை ஒரு பள்ளியில் 2ம் வகுப்பில் சேர்ப்பதற்காக என் அண்ணனும், நானும் அழைத்துச் சென்றிருந்தோம். பிரின்சிபல் ரூமிற்கு வெளியே காத்துக் கொண்டிருந்தோம். பிரின்சிபல் ரூமுக்குள் அந்நியர்கள் யாரும் நுழையக் கூடாது என்பதைக் குறிக்கும் வகையில் 'நோ அட்மிஷன்' என எழுதியிருந்தனர். அதைப் படித்த பிரணவ் என் அண்ணனிடம், ''டாடி! இந்த ஸ்கூல்ல 'அட்மிஷன்' கிடையாதாம்! வாங்க வீட்டுக்குப் போகலாம்'' என்றதும் அங்கிருந்த அனைவரும் சிரித்தனர்.

- ஆர். குட்டிபிரசன்னா, கரூர்



படிப்பாள் என்பது எங்கள் அப்பாவின் எண்ணம். ஆனால் என் அக்காவோ "நான் டி.வி.யே பார்க்கிறேன்" என்று புத்தகத்தை மூடி வைத்ததும் அப்பாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! இரண்டு நிமிடம் கழித்து டி.வி.யை அணைத்துவிட்டுப் பாடம் படித்தாள் அக்கா.


- எஸ்.சௌம்யாயனி, ஒன்பதாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி

நோ அட்மிஷன்

பேண்ட் வாத்தியம்

எங்கள் உறவினர் ஒருவரின் திருமணத்திற்கு மேள வாத்தியக் குழுவையும் பேண்ட் வாத்தியக் குழுவையும் ஏற்பாடு செய்திருந்தனர். பேண்ட் வாத்தியக் குழுவினரை மிகவும் வியப்புடன் பார்த்த என் தம்பி அப்பாவிடம், "இவர்கள் ஒரே மாதிரியாக டிரஸ் போட்டிருக்காங்களே ஏன்?" என்று கேட்டான். அவர்கள் பேண்ட் வாத்தியக்காரர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்றார் அப்பா. "அப்படின்னா அவங்க வேட்டி வாத்தியக் குழுவினரா?" என்று மேளக்கச்சேரி செய்பவர்களைக் காட்டி தம்பி கேட்க, அனைவரும் சிரித்து விட்டோம்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்







டாக்டர் அல்ல

நாங்கள் எங்கள் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அங்கு திடீரென்று அம்மாவிற்கு வயிற்று வலி வரவே டாக்டரிடம் கிளம்பினோம். வழியில் டாக்டர் சுவாமிநாதன் என்ற போர்டைப் பார்த்து உள்ளே சென்றோம். அப்போது தான் அவர் மருத்துவர் இல்லை என்பதும் டாக்டர் பட்டம் பெற்றவர் என்பதையும் தெரிந்து கொண்டோம். அந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வரும்.

- ராஜன், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை



விடுகதைப் பக்கம்

பட்டணத்துப் பனைமரம் வெட்ட வெட்ட வளருது - அது என்ன?

I 1. காலில்லை, கையில்லை மரத்தைச் சாய்ப்பான்; வாயில்லை, குரல் இல்லை, சத்தம் செய்வான் - அவன் யார்?

2. ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா உத்தரவு போடுவாரு; உலா வர மாட்டாரு - அவர் யாரு?

3. தாய் தெருவிலே மகள் கொலுவிலே - எது என்ன?

4. பந்தல் போட்டுச் சாப்பிடுவதில் அவன் கெட்டிக்காரன் - அவன் யார்?

5. கட்டாமல் கறக்காமல் காடேறித் திரியாமல் நின்ற இடத்தில் ஒரு படி பால் - அது என்ன?

- பா. கவிதா, பன்னிரெண்டாம் வகுப்பு, சுமேர்மால் பப்ளிக் பள்ளி, புதுடெல்லி.

I விடைகள்: 1. காற்று, 2. நாக்கு, 3. களிமண் பொம்மை, 4. சிலந்தி, 5. இளநீர்

II. 1. பட்டணத்துப் பனைமரம் வெட்ட வெட்ட வளருது - அது என்ன?

2. தட்டாமல், கொட்டாமல், மேளம் சத்தம் கேட்கும் — அது என்ன?

3. விண்ணைச் சிரிக்கச் செய்வாள்; கண்ணைப் பறிக்கச் செய்வாள்; அவள் யார்?

4. எண்ணெய் வேண்டா விளக்கு; எடுப்பார் கை விளக்கு - அது என்ன விளக்கு?

5. பூட்டுச்சாவி இல்லாத பெட்டி; காசு கொடுத்து வாங்கும் பெட்டி - அது என்ன பெட்டி?

எஸ். அமீர்ஜான், இராமசமுத்திரம், திருவண்ணாமலை மாவட்டம்.

II.விடைகள்: 1. தலைமுடி, 2. இடி, 3.மின்னல், 4. மெழுகுவர்த்தி, 5. தீப்பெட்டி.

III.1. வெயிலிலும் பூக்கும், மழையிலும் பூக்கும்; வீட்டுக்குள் மட்டும் பூக்காது - அது என்ன பூ?

2. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ - அது என்ன பூ?

3. நீரில் பூக்காது. நிலத்தில் பூக்கும் பூ - அது என்ன பூ?

4. சுத்தி சுத்தி வந்தாலும் ஒரு தப்படி நகராது - அது என்ன?

- பெ. நடராசன், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை.

III. விடைகள்: 1. செருப்பு, 2. சிரிப்பு, 3. உப்பு, 4) மின்விசிறி.

IV. 1. அணிந்தால் அழகு; தின்றால் விஷம் — அது என்ன?

2. எங்கிருப்பான் தெரியாது; எப்படி இருப்பான் புரியாது; என்ன சொன்னாலும் திருப்பிச் சொல்வான் — அவன் யார்?

3. அங்குமிங்கும் ஆடுவான். அசையாமல் நிற்கும்போது சரியான கணக்குக் காட்டுவான் — அவன் யார்?

4. ஓயாது இரையும் எந்திரம் அல்ல; உருண்டோடி வரும் பந்தும் அல்ல — அது என்ன?

5. ஒற்றைக்காலால் சுற்றுபவனுக்கு அடிக்கடி மயக்கம் — அவன் யார்?

6. இது அசுத்தமாக இருக்கும்போது வெள்ளையாக இருக்கும்; சுத்தமாக இருக்கும்போது கறுப்பாக இருக்கும் — அது என்ன?

- ஔவை ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்.

IV விடைகள்: 1. வைரம், 2. எதிரொலி, 3. தராசு முள், 4. கடல் அலை, 5. பம்பரம், 6. கரும்பலகை.

கோலக்குழல்

மதிவதனி

உருண்டு உருண்டு போகுது - மாவை
உதிர்த்துக் கொண்டு போகுது
புரண்டு புரண்டு போகுது - பூப்போல்
வரைந்து கொண்டு போகுது.

நீர் தெளித்த வாசலில் - நிறைய
சித்திரம் தீட்டிச் செல்லுது.
ஊர் முழுதும் வந்து - நின்று
வியந்து பார்த்துச் செல்லுது.

விரல் இழுத்த பாதை - பின்னே
ஊர்ந்து மெல்ல நடக்குது.
உரலில் இடித்த மாவை யெல்லாம்
உயர்ந்த கலையாய் ஆக்குது!



● ந.பாலமுருகன், சேலம்

? சிலருக்கு மட்டும் முடி சுருட்டையாக இருப்பது ஏன்?

! முடியின் அமைப்புக்கு மூலகாரணம் நம்முடைய மரபணுக்கள்தான். பரம்பரை பரம்பரையாக மரபணுக்களில் பொதிந்திருக்கும் சில கூறுகள் முடியின் அமைப்பைத் தீர்மானிக்கின்றன. முடி அடர்த்தியா, நீளமா, சுருட்டையா, குட்டையா போன்றவை நாம் அம்மா வயிற்றில் சிசுவாக இருக்கும்போதே தீர்மானமாகிவிடும். முடியின் குறுக்குவெட்டு வடிவம் சிலருக்கு உருண்டையாகவும், சிலருக்கு நீள்வட்டமாகவும், வேறு சிலருக்குத் தட்டையாகவும், இன்னும் சிலருக்குச் சிறுநீரக வடிவத்திலும் இருக்கும். இந்த அமைப்பு தட்டையாக உள்ளவர்களுக்கு முடி சுருட்டையாக இருக்கும். உருண்டையாக இருந்தால் முடி விறைப்பாக இருக்கும். சிறுநீரக வடிவில் இருக்குமானால் முடி மிகக் குட்டையாகவும், சுருட்டையாகவும் காணப்படும். நீள்வட்டவடிவில் இருந்தால் நெளிவுடனும், சுருள்களுடனும், மென்மையாகவும் இருக்கும்.

● க. துளசிராமன், கடம்பரவாழ்க்கை

? ஜலதோஷம் என்று டாக்டரிடம் சென்றேன். அவர் 'ஆண்டிபயாட்டிக்' மாத்திரைகளைக் கொடுத்தார். ஜலதோஷம் வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது என்று படித்துள்ளேன். ஆண்டிபயாட்டிக் மருந்துகள் வைரஸ் கிருமிகளை அழிக்குமா? ஜலதோஷத்தின் போது ஆண்டிபயாட்டிக் மருந்துகளின் பங்கு என்ன?



! வைரஸ் கிருமிகளை ஆண்டிபயாட்டிக் மருந்துகளால் அழிக்க இயலாது. பல சமயங்களில் ஜலதோஷத்தின்போது பாக்டீரியா கிருமிகளும் நோயாளியிடம் காணப்படும். வைரஸ் கிருமிகளால் உண்டாகின்ற ஜலதோஷம் மாத்திரை மருந்து இல்லாமலே குணமாகிவிடும். ஆனால், பாக்டீரியாக் கிருமிகளால் உண்டாகின்ற சளியையும், மூக்கு ஒழுகல், தும்மல் போன்ற ஜலதோஷத்தை ஒத்த பிற அறிகுறிகளையும் குணப்படுத்த ஆண்டிபயாட்டிக் மருந்துகள் தேவைப்படும். ஆகவே, அவற்றை அழிக்கவே ஆண்டிபயாட்டிக் மருந்துகளை மருத்துவர்கள் தருகிறார்கள்.

● இரா. சிவராமன், காவேரிப்பட்டணம்

வெயிலில் உடலின் நிறம்

? வெயிலில் அலைந்தால் உடலின் நிறம் மாறுவது ஏன்?

! சூரிய ஒளியில் புற ஊதாக் கதிர்கள் உள்ளன. இவை தோலில் உள்ள 'ஹிஸ்டிடின்' எனும் வேதிப் பொருளோடு வினை புரிந்து இரத்த நாளங்களை விரிவடையச் செய்கின்றன. அப்போது அவற்றில் அதிக இரத்தம் பாய்வதால் தோல் சிவந்து காணப்படுகிறது. அடுத்து, தோலில் 'டைரோசின்' எனும் பொருளும் உள்ளது. புற ஊதாக் கதிர்கள் இவற்றை 'மெலனின்' என்னும் பழுப்பு வண்ண நிறமிப் பொருளாக மாற்றுகிறது. இந்த நிறமிகள் தோலில் உள்ள புற அடுக்குகளில் எல்லா இடங்களிலும் பரவி சூரிய ஒளிக்கதிர்களால்



தோலுக்கு தீங்கு ஏற்படாதவாறு பாது காக்கின்றன. இதன் காரணமாகத்தான் வெயிலுக்குச் சென்றால் தோல் நிறம் மாறுகிறது.

● பெ. குணசுந்தரி, சின்னமனூர்

? யார் யார் இரத்ததானம் செய்யலாம். டாக்டர்?

! 18 முதல் 60 வயது வரை உள்ள







மாறுவது ஏன்?

ஆண், பெண் இருபாலரும் இரத்ததானம் செய்யலாம். இவர்களின் உடல் எடை 45 கிலோவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மலேரியா, எய்ட்ஸ், பாலியல் நோய்கள் போன்றவற்றுக்கு ஆட்படாத வர்களாக இருக்க வேண்டும். மது மற்றும் போதைப் பழக்கம் இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். இதய நோய், இரத்தம் தொடர்பான நோய்கள் உள்ளவர்கள், கர்ப் பிணிகள் இரத்ததானம் செய்ய இயலாது.

● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? இரத்தக் கொதிப்பு நோய் உள்ள வர்கள் எந்தெந்த உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்?

! உடற்பயிற்சிகளில் 'காற்றலைப் பயிற்சிகள்' (Aerobic Exercises), 'தசைச்சமன் பயிற்சிகள்' (Isometric Exercises), 'தசைப் பெருக்குப் பயிற்சிகள்' (Isotonic Exercises), 'அழகுதரும் பயிற்சிகள்' (Callisthenic Exercises), 'மந்தப் பயிற்சி கள்' (Passive Exercises) எனப் பல வகைகள் உள்ளன. அவற்றுள் காற்றலைப் பயிற்சிகள் மிகவும் குறிப்பிடத் தகுந்தவை. இவைதான் இரத்தக் கொதிப்பு மற்றும் இதய நோய்கள் வராமல் உடலைக் காக்க உதவும் பயிற்சிகள். மெதுவாக நடத் தல், வேகமாக நடத்தல், ஓடுதல், நீந்து தல், மிதிவண்டி ஓட்டுதல், கைப்பந்து, பூப்பந்து, இறகுப்பந்து, வரிப்பந்து ஆகியவற்றை விளையாடுதல் முதலி யவை காற்றலைப் பயிற்சிகளாகும். இப்பயிற்சிகளில் ஒன்றை தினமும் முறைப் படி செய்துவந்தால் உடல் தசைகளுக்கு அதிக இரத்தம் செல்லும். குறிப்பாக இதய இயக்கத்திற்குத் தேவையான இரத்தம் சரி யான அளவில் செல்லும். இரத்த நாளங் களின் சுருங்கிவிரியும் தன்மையையும் நெகிழ்வுத் தன்மையையும் இவை முறைப் படுத்துவதால் இரத்த அழுத்தம் நல்ல கட் டுப்பாட்டில் இருக்கும். இரத்தக் கொதிப்பு ஏற்படாது.

டாக்டர் கு. கணேசன்

1 மாலா தேடிய மாயப்பெண்

கதை : விஜி   படம்: சேகர்




மாலா வேண்டாம் என்றால் நானும் வர மாட்டேன்.
சரி, எல்லோரும் போகலாம். சிவா தயாராகி விட்டாயா?
நால்வரும் நீண்ட பயணத்துக்குப் பின் மரகதமலையை அடைந்தனர்.
அப்பா, இந்த இடம் ரொம்ப அருமையாக இருக்கிறது!
தனியாகக் காட்டுக்குள் சென்று விடாதே!
சிவா இந்தத் தங்கப்பந்தை வைத்து விளையாடு.
அப்பா எனக்கும் ஒரு தங்கப்பந்து வேணும்.
மாலா, நீ என்ன சின்னப் பெண்ணா? தம்பியுடன் போட்டிப் போடறே?
எதுக்குச் சண்டை? இருவரும் விளையாடுங்கள்.


அடுத்த நாள் மாலாவும் சிவாவும் தங்கப் பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.
சிவா, ரொம்ப தூரம் தூக்கி வீசாதே! காட்டுக்குள் பந்து விழுந்துடப் போகுது.
விழுந்தால் என்ன அக்கா?
விழுந்தால் கண்டுபிடிப்பது கஷ்டம். சித்திக்கிட்டே நான்தான் திட்டு வாங்கணும்.
அப்படியா! இதோ பார்.
சிவா, ஏன் இப்படி தூக்கி வீசினே? எப்படி தேடறது?
ம்... எப்படியோ தேடு.
உடனே...
அம்மா, மாலா தங்கப் பந்தைத் தூக்கி காட்டுக்குள்ளே வீசிட்டாள்.
நான் வீசலை சித்தி. சிவாதான் வீசினாள்.
நீதான் வீசியிருப்பே! உனக்குத்தான் பொறாமை, போட்டி எல்லாம் அதிகமாச்சே!
சித்தி, என்னை நம்புங்க.


மாலா, நீயே போய் அதைத் தேடி, கண்டுபிடிச்சு எடுத்துட்டுவா.
மாலா நீயே வீசிட்டு ஏன் அழறே?
இந்தக் காட்டுக்குள்ளே எப்படி தேடறது?
பந்தோடு வந்தால்தான் இனி உனக்கு இங்கு இடம். இல்லைன்னா அப்படியே போய்விடு.
அப்பாகிட்டே சொல்லிட்டு...
அதெல்லாம் முடியாது. சிவா, வா போகலாம்.
சித்தி...சித்தி...
அப்பாடா! இன்றோடு தொலைந்தாள்...

தொடரும்


மீன்கள் பலவிதம்:

❖ சிங்கப்பூர், மலாய் பகுதிகளில் மட்ஸ்கிப்பர் என்ற ஒருவகை மீன் இருக்கிறது. இந்த மீன் மரம் ஏறுகிறது. குளம் குட்டையில் உள்ள மரம் செடிகள் மீது ஏறி நீருக்கு மேலே வந்து சன்பாத் எடுக்கிறது.




• செய்ல் ஃபிஷ்

❖ பிளாட்டி மீன் என்ற மீனின் உடலில் துணியைச் சுற்றி எரித்தால் மெழுகுவர்த்தி போலவே பிரகாசமாக எரியும். அமெரிக்க சிவப்பு இந்தியர் இந்த மீனையே விளக்காகப் பயன்படுத்துகின்றனர்.



• லங் ஃபிஷ்




• டிஸ்கஸ்

❖ திலாபியா என்று ஒரு அதிசய மீன் இனம் இருக்கிறது. இந்த மீன் முட்டையிட்டதும் அவற்றை வாயில் கவ்வி அடைகாக்கும். இப்படி ஐந்து வாரம் வாயில் அடைகாத்தபின் அந்த முட்டைகள் பொறிந்து குஞ்சுகளாகத் தாய் மீனின் வாயிலிருந்து வெளிவரும். வெளியே அவை திரியும்போதும் குஞ்சுகளுக்கு ஆபத்து என்று தெரிந்தால் உடனே அவற்றைத் தனது குகை போன்ற வாய்க்குள் வரச் செய்து அடைக்கலம் தந்து ஆபத்து நீங்கியது மீண்டும் வெளியே அனுப்பும்.

❖ ஸால் வெரன்ஸ் என் மீனின் உடலில் செதிகளுக்குப் பதில் முடிகள் முளைத்துள்ளன.

❖ நீரில் மிக வேகமாக நீந்திச் செல்லக்கூடிய மீன் 'செய்ல் ஃபிஷ்'. இந்த மீன் மணிக்கு 109 கிலோமீட்டர்



• பிளாட்டி

ஒவ்வொன்றும் ஒருவிதம்!


எம். ஹேமா பாலு


தூரம் செல்லக் கூடியது.

❖ பிரேசில் நாட்டில் பிளாட் ஹெட் பிஷ் என்ற ஒருவகை மீன் இருக்கிறது. அதில் ஆண் மீன் பெண் இட்ட முட்டைகளைத் தனது முதுகிலேயே மூட்டைகளைச் சுமப்பது போலச் சுமந்து திரிகிறது.

❖ கோல்ட் பிஷ் எனப் படும் தங்கநிற மீனை நீண்ட நாட்களுக்கு இருட்டறைக் குள்ளேயே வைத்து இருந்தால் வெளுத்துப் போய் வெள்ளை நிற மீனாக மாறிவிடும்.

• கோல்ட் ஃபிஷ்





• கார்ப்



• கேட் ஃபிஷ்



• மட்ஸ்கிப்பர்

❖ அமெரிக்க ஏரிகளில் வாழும் 'அனாபிலப் மீன்' விநோதமானது. எல்லா மீன்களைப் போலவும் அதற்கும் இரண்டு கண்கள்தான். ஆனால் ஒவ்வொரு கண்ணிலும் மேலும் கீழுமாக இரண்டிரண்டு கண்மணிகள் (பாப்பா) உள்ளன. தண்ணீரின்



மேல்மட்டத்திற்கு வரும்போது மேல் கண்மணியினால் தரை மேல் உள்ளதையும்; கீழ்க் கண்மணியினால் தண்ணீரினுள் உள்ளதையும் 'அனாபிலப்' மீனினால் ஒரே நேரத்தில் பார்க்க முடியும்.

❖ மீன்களில் கார்ப் என்று ஒரு வகை இருக்கிறது. இதை நீர் நரி என்று அழைக்கிறார்கள். இந்த மீன் எளிதில் தூண்டிலிலோ, வலையிலோ சிக்குவது இல்லை. அப்படியே சிக்கிவிட நேர்ந்தாலும் இது தன்னுடைய அறம் போன்ற செதில்களால் தூண்டிலைத் துண்டித்து வெளியேறித் தப்பி விடும்.

❖ ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா கண்டங்களில் மட்டுமே 'லங் பிஷ்' என்ற மீனினம் காணப்படுகிறது. இது கோடைக் காலம் பூராவும் துயில் கொள்ளும் ஒரு அபூர்வ வழக்கத்தை மேற்கொண்டுள்ளது. வேனிற் காலத்தில் நீர் நிலைகளில் நீர் வற்றியதும், இது அடிப்பாகமுள்ள சேற்றில் படுக்கை அறை அமைத்துக் கொண்டு அதனுள் துயில் கொள்ள ஆரம்பிக்கும். காய்ந்து போன இச் சேற்றைத் தோண்டி எடுக்கும் போது மண்ணோடு இம் மீனும் ஒட்டிக் கொண்டிருப்பது தெரியவரும். இந்த மண்ணைத் திரும்பவும் நீரில் இட்டால் மீன் விழிப்புற்று மீண்டும் செயல்படத் தொடங்கி விடுகிறது.

❖ டிஸ்கஸ் என்ற மீன் தனது குஞ்சுகளுக்குத் தேவையான உணவைத் தனது உடலிலிருந்தே திரவமாகச் சுரக்கிறது. குஞ்சுகள் தன் தாய் உடலிலிருந்து உற்பத்தி ஆகும் உணவை உண்டே உயிர் வாழ்கின்றன. தாய் மீன் திரவத்தைச் சுரக்காவிட்டாலோ, காணாமல் போய் விட்டாலோ வெளியே எத்தனை வகை உணவுகள் இருந்தாலும் அவை எதையும் சாப்பிடாமல் இம் மீன் குஞ்சுகள் இறந்து விடுகின்றன.

❖ நைல் நதியில் கேட் பிஷ் என்ற மீனினம் உள்ளது. இந்தப் பூனை மீன்கள் நீரில் தலைகீழாக மிதக்கின்றன; நீந்துகின்றன.



ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!

ஒரு வருடமாகப் பள்ளி மாணவர்களுக்குப் போட்டி வைத்து கைக்கடிகாரங்களை வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. சரியான விடை அனித்தவர்களில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். கடைசி தேதி 20.7.2002. உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இந்த மாதப் போட்டி

கீழே புகழ் பெற்ற ஆறு நதிகளின் பெயர்களும் நாடுகளும் கொடுக்கப்படுள்ளன. எந்த நதி எந்த நாட்டுக்குச் சொந்தம் என்பதைச் சரியாகக் கண்டுபிடித்து எழுதுவதுதான் போட்டி.

1.ஆமேசான்	ஆப்பிரிக்கா	1. ________
2.வோல்கா	வட அமெரிக்கா	2. ________
3.மிசிசிபி	சீனா	3. ________
4.ஷுவாங்ஹோ	இந்தியா	4. ________
5.கங்கை	தென் அமெரிக்கா	5. ________
6.நைல்	ரஷ்யா	6. ________

கோடை விடுமுறைப் போட்டி - I முடிவு

என்ன பழமொழி?

மே இதழில் அறிவித்த கோடை விடுமுறைப் போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். இதில் நான்கு பேர் மட்டுமே சரியான விடையை அளித்திருந்தனர். எனவே இந்நால்வரும் பரிசைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

சரியான விடை : பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு

ரூ. 50/- பரிசு பெற்றவர்கள் :

1. க. தனலெட்சுமி, மயிலாடுதுறை
2. ஆர்.பிரசன்னா, காந்திகிராமம், கரூர்
3. ஞா. மாடசாமி, சென்னை
4. மா. அன்பொளி, பண்ருட்டி, கடலூர்

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97



மேற்கு மலைத் தொடர் அடர்வனத்தின் எல்லைப் பகுதியில் அந்த மாணவர்கள் நடந்துகொண்டிருந்தனர்.

மரங்களின் வேர்களும் சிதறிக் கிடக்கும் சிறு சிறு கற்களுமாக உள்ள ஒற்றையடிப் பாதை அது.

கோடை விடுமுறையில் சென்னையிலிருந்து வந்த வித்யா, வினோத், மணி இவர்களை அழைத்துக்கொண்டு பூங்குன்றன், பூங்கோதை ஆகியோர், வனங்களைச் சுற்றிக் காட்டுவதற்கு வந்துள்ளனர். முதலிலேயே நீலனுக்குச் சொல்லி அனுப்பியதால் அவன் தயாராகக் காத்திருந்தான்.

கோவணமும் தலைப்பாகையும் பரட்டைத் தலையும் கருத்த உடலுமான நீலனைக் கண்டதும் சென்னை மணி முகத்தைச் சுழித்தான்.

''பாதையில்லாம, மின்சாரமில்லாம, ஒரு கடையில்லாம இந்த மாதிரி வனங்களில் மனிதர்கள் வாழ முடியுமா?'' மணி கேட்டான்.

''நம்ம முனிவர்களெல்லாம் இந்த மாதிரி வனங்கள்ளதான் தவம் செய்து வாழ்ந்தாங்க'' என்றாள் பூங்கோதை.

''ஏன் ராமர்கூட 14 வருஷம் காட்லதான் வாழ்ந்தார். பஞ்ச பண்டவர்கள்கூட கொஞ்ச காலம் காட்ல இருந்தாங்களாமே'' என்று கூறியவன் பூங்குன்றன்.



வனத்தில் ஒரு நாள்

கொ.மா. கோதண்டம்

நீண்ட கழுத்து, உள் வளைவான பெரிய காதுகள், அழகிய அகன்ற கண்கள், மஞ்சளும் தவிட்டு நிறமும் கலந்த உடலும் அதில் நட்சத்திரங்களைப் போன்ற புள்ளிகளும்... இப்படியான அழகிய மான்கள் குனிந்து தண்ணீர் குடிப்பதும் நிமிர்ந்து சுற்றும் முற்றும் பார்ப்பதுமாக இருந்தன.

"ஆஹா, அருமை!"

"அற்புதமான காட்சி" அந்த உற்சாகத்தில் மணி விசிலடிக்கவே மான்கள் ஓடிவிட்டன.

அவர்கள் எழுந்து மேலும் நடந்தனர்.

மேகங்கள் வருவதும் போவதுமாக மரங்களோடு தொட்டு விளையாடிக்கொண்டிருந்தன. சில் வண்டுகளின் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. காற்று பலமாக வீசவே மேகங்கள் ஓடிப் போய்விட்டன. மரங்கள் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தன. அடர்வனமாதலால் கிளைகள் ஒன்றோடு ஒன்று உரசிப் பெரும் சத்தம் எழுப்பின.

அவர்கள் ஒரு இடத்தில் உட்கார்ந்துவிட்டு காற்று நின்றதும் புறப்பட்டனர். பெரிய ஆற்றங் கரைக்கு அவர்கள் வந்துவிட்டனர். ஆற்றில் மார்பளவு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. 'இதிலே குளிக்கலாமே'- ஒருவன் சொன்னதும், அவர்கள் உடைகளை அவிழ்த்து ஒரு பாறையில் வைத்துவிட்டு, கொண்டு வந்த உணவுப் பொட்டலங்களையும் பாறையில் வைத்துவிட்டு, ஆற்றில் குதித்து நீந்தி குளித்து விளையாடினார்கள். நீலன் கரையோர மரங்களை மேலே பார்த்துக் கொண்டு சென்றான்.

சிறிது நேரத்தில் குரங்குக் கூட்டம் ஒன்று மரங்களில் தாவி வந்தது. ஆற்றங்கரை வந்தும் ஒரே மரத்தில் கூடி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஒன்று போல கீழே குதித்தன.

மாணவர்களின் உடைகள் இருந்த பாறைக்கு வந்து அவற்றை எடுத்து எறிந்துவிட்டு உணவுப் பொட்டலங்களை ஆளுக்கொன்றாகத் தூக்கிக்கொண்டு மரங்களின் மேலே ஏறிக்கொண்டன.

இதனைப் பார்த்த மாணவர்கள், 'ஓ'வென கூச்சலிட்டவாறே கரை ஏறி உடைகளைத் தேடி எடுத்து அணிந்து கொண்டனர். சத்தம் கேட்டு நீலன் ஓடி வந்தான்.

மணி ஒரு கல்லை எடுத்து குரங்குகளைப் பார்த்து வீச கையை ஓங்கினான்.

"சாமி, சாமி கல்லை எறியாதீங்க. மொதல்ல கல்லைக் கீழே போடுங்க" எனக் கூச்சலிட்டான் நீலன்.



"இவன், என்னடா சொல்றது? நம்ம சாப்பாடெல்லாம் கொண்டு போயிடுச்சு" கோபத்துடன் கத்தினான் மணி.

"சாமி, இது அதுங்க ராஜ்ஜியம், நம்ம ஊர்ல நமக்குப் பலம். அதுபோல இங்க அதுகளுக்கு. எல்லாம் சேர்ந்ததுன்னா நம்மள பிச்சிக் குதறிடும். ஒரு குரங்கு பத்து பேரை விரட்டியடிக்கும். ஒரு தடவை முப்பது குரங்குகள் சேர்ந்து ஒரு புலியைக் கொன்னுடுச்சுங்கன்னா பார்த்துக்கோங்களேன்.

நாமதான், நம்ம பொருள்களைப் பாதுகாப்பா வச்சிக்கணும். அது எடுத்துட்டுப் போயிட்டா பேசாம விட்டுடணும்'' நீலன் கூறியதும் பூங்குன்றன் ''சரி நீலா, நீ சொல்றதெல்லாம் சரிதான். இப்ப நாம திங்குறதுக்கு என்ன செய்ய?'' என்று கேட்டான்.

''ஆமாப்பா எல்லாப் பொட்டலங்களயு மில்ல தூக்கிட்டுப் போயிடுச்சிங்க. நாங்க பசிக்கி என்ன செய்ய?'' - வினோத்.

''கொஞ்சம் இருங்க சாமி, வந்திடறேன்'' என்ற நீலன் மரக்கிளைகளைக் கூர்ந்து பார்த்தான்.

ஒரு மரத்தில் தேன்கூடு தென்படவே மூங்கில் புதர்கள் உள்ள கரைப்பகுதிக்குச் சென்றான். இடுப்பில் இருந்த அரிவாளை எடுத்து பெரிய மூங்கிலை வெட்டி இரண்டு ஓரடி அளவிலான குழாய்களாகத் தயார் செய்து பூங்குன்றனிடம் தந்து ''கொஞ்ச நேரம் வச்சிருங்க'' என்று சொன்னான்.

தேன்கூடு உள்ள மரத்தில் நீண்ட மூங்கிலை வெட்டி பக்கக் கிளைகளைச் சாண் அளவு நீட்டி விட்டு மூங்கிலை மரத்தில் சாய்த்துக்கட்டினான்.

வெட்டிய கிளைக்கணுக்களில் கால் வைத்து மரத்தில் ஏறி வாயில் மென்று கொண்டிருந்த ஏதோ பச்சிலையைத் தேன் கூட்டில் ஊதினான்- 'சொய்ங்' என்ற சத்தத்துடன் தேனீக்கள் பறந்துவிட்டன.

கூடு உள்ள கிளையை வெட்டி வாயில் கவ்வியவாறு மெல்ல இறங்கி வந்தான். கீழே வந்ததும் ஒரு மாணவனிடம் துண்டு வாங்கி தேனடையைப் பிழிந்து மூங்கில் குழாய்களில் நிரப்பினான். மீதமுள்ள சிறிது தேனை அனைவரின் கைகளிலும் ஊற்றி அவர்களை அப்படியே நக்கிச் சாப்பிடச் சொன்னான். துண்டை ஆற்றில் அலசி எடுத்துக்கொண்டு மூங்கில் கிளைகளை வளைத்து கதிர்களை உருவி துண்டில் போட்டான். ஓரளவு சேர்ந்ததும் ஒரு பாறையில் கொட்டி ஒரு கல்லால் தேய்த்தான். பின்னர் கைகளால் அள்ளி அதை ஊதினான். உமி பறந்து போனதும் மூங்கில் கதிர்கள் அரிசிமணிகளைப் போல மின்னின.

மூங்கில் அரிசியில் தேன் விட்டுப பிசைந்து அடுத்த இரண்டு மூங்கில் குழாய்களில் உள்ளே வைத்தான். வாய்ப்பகுதியில் ஒரு இலையை வைத்துக்கட்டி, ஆற்றங் கரையோரம் செம்மண் எடுத்து குழைத்து இரண்டிலும் பூசினான்.

ஒரு பாறையருகே சுள்ளிகளையும், சருகுகளையும் கூட்டி தீ வைத்து இரண்டு மூங்கில் குடுவைகளையும் நெருப்பின் ஊடே திணித்து வைத்தான். சிறிது நேரத்தில் மூங்கில் குழாய்கள் 'பட் பட்'டென வெடித்தன. உடனே அவற்றை தீயிலிருந்து வெளியே எடுத்தான். விரிந்திருந்த மூங்கில்களை மேலும் விரித்து உள்ளேயிருந்த உருளை வடிவமான பொருளை அருகே இருந்த தேக்கு மர இலைகளில் வைத்தான்.

''சாமி, இது தேன் மாபுட்டு. எல்லாரும் சாப்புடுங்க.''

பூங்கோதை எழுந்து இலைகளை விரித்து சூட்டுக்கு விரல்களில் ஊதியவாறே அந்தப் புட்டை எல்லா இலைகளிலும் வைத்தாள்.

நீலனுக்கும் ஒரு இலையில் வைத்து அவனிடம் தந்தாள். அதற்குள் அவர்கள் அவசரப்பட்டு எடுத்துத் தின்றனர்.

''ஏய், என்னப்பா இது! ருசி அற்புதமா இருக்கே!''

''ஆமாம். நானும் அல்வா, ஜிலேபி, லட்டு எல்லாமே சாப்பிட்டிருக்கேன். இதுக்குப் பக்கத்துல எதுவுமே நிக்க முடியாது''

''நான் எங்க மாமா கொண்டு வந்த வெளிநாட்டு ஒரிஜினல் கோக் சாக்லெட் சாப்பிட்டிருக்கேன். ஆனா இந்த ருசி அப்பப்பா தனிதான்!''

மணி மட்டும் மனசில்லாமல் சாப்பிட்டான்.

''நீலனுக்கு நம்ம ஊருல ஒரு கடை வச்சிக் கொடுத்து இந்த மாதிரி புட்டு தயாரிச்சு விக்கச் சொல்லலாமே! ஒரு வேளை

''உண்மை பேசறதுக்கு முன்னால வாயில கொஞ்சம் சர்க்கரை போட்டுக்குவேன்.''

''ஏன்?''

''உண்மை கசக்குமே!''

– பா. விஜயசாரதி





''ஏசி சேர் புதுசா?''
''நம்ம ராமுவோடது!''
''அப்ப, ஓசி சேர்னு சொல்லு!''
- சா. அனந்தகுமார்

டிபன் நூறு ரூபான்னாலும் நல்லாவே விற்கும்.''

''சாமி, மூங்கில் அரிசி எப்பவும் கிடைக்காது. இருந்தாலும் நாங்க வந்து ஊர்ல கடை வக்கிறதெல்லாம் நடக்குமா சாமி?''

''என்னப்பா இவ்வளவு ருசியான உணவை நம்ம அப்பா அம்மாக்களுக்குக் கொண்டு போகலாமில்ல? நாம மட்டும் சாப்பிட்டுட்டோமே'' மாணவர்கள் அவரவர்கள் கருத்தைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சாமி, இன்னொரு தடவை வரும்போது தயாரிச்சி வீடுகளுக்குக் கொண்டு போகலாம். இப்ப நேரமாயிருமே!''

''சரி, நீலா போகலாம்.''

''வாங்க, வாங்க போகலாம்'' நீலன் நடக்கத் தொடங்கினான். மற்ற மாணவர்கள் பின்னால் வந்தனர். அவன் மூக்கைச் சுளித்து இழுத்து சுவாசித்தான்.

''சாமி, பாதையில கரடி இருக்கிறாப்புல தெரியுது. வாங்க வலது பக்கமா வேற பாதையில போகலாம்.''

''எப்படிப்பா கரடி இருக்குன்னு சொல்ற?''

''வாசனையில தெரியுது சாமி, வாங்க வேகமா போயிடலாம்.'' அவன் சிறிது தூரம் சுற்றி வந்து வேறு பாதை வழியே இறங்கி அவர்களை அழைத்து வந்தான்.

தூரத்தில் ஏதோ சத்தம் பலமாகக் கேட்டது. ''என்னப்பா நீலா?'' அவர்கள் பயந்து போய் கேட்டனர்.

''நாம இருந்த இடத்துல மனுச வாடைக்கு அங்கே வந்த கரடிகள் கத்துதுங்க.''

''அடடா! நல்லவேளை, நாம இந்தப் பாதையில வந்துட்டோம்'' அவர்கள் வேகமாக இறங்கலானார்கள்.

அடர்ந்த மரங்களுக்கு இடையிலான ஒற்றையடிப் பாதையில் அவர்கள் வந்து கொண்டிருந்தனர். தூரத்தில் ஒரு பெரிய மரக்கிளையிலிருந்து பாதையில் வளைவாக விழுது ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

''ஊஞ்சல் ஆடப் போறேன்'' மணி அருகில் ஓடினான்.

''ஓட வேண்டாம்'' என்றவாறே பின்னால் வந்த நீலன் அந்த விழுதைத் தொடப் போன மணியைத் தள்ளி விட்டான். அவன் தொப்பென விழுந்து உருண்டான்.

நீலன் உடனே கீழே கிடந்த ஒரு மரக் கட்டையை எடுத்து விழுது போல இருப்பதின் மேல் வைத்தான். அது டக்கென அந்தக்கட்டை மீது சுற்றிக்கொண்டு மரத்திலிருந்து கீழே விழுந்து உருண்டு பள்ளத்தில் விழுந்தது.

''அட பெரிய மலைப்பாம்பு'' என்று எல்லோரும் பதட்டத்துடன் கத்தினார்கள்.

நீலன் ஓடிச்சென்று மணியைத் தூக்கினான். எழுந்த மணி நடந்ததை உணர்ந்து ''நீலா, வந்ததுல இருந்து உன்னை நான் அலட்சியப்படுத்திகிட்டே இருந்தேன். இப்ப நீ என்னைத் தள்ளி விடல்லேன்னா இந்த மலைப்பாம்பு என்னைச் சுருட்டிக் கொன்னுருக்கும். என்னை மன்னிச்சிடுப்பா'' என்றான்.

''சரி சாமி, சும்மா இருங்க. இந்தப் பாம்பு இப்படி பாதையில தொங்கும். மான் போன்ற மிருகங்கள் இது விழுதுன்னு நெனைச்சி இதைத் தாண்டிப் போகும். அப்ப படக்குன்னு அதைச் சுருட்டிக் கொன்னு தின்னுடும். நாம எதுக்கும் தொந்தரவு தராத வரைக்கும் நமக்கு எதுவும் தொந்தரவு தராதுங்க.''

''இன்னக்கி நீலன் நமக்கு எவ்வளவு உதவி செய்தான்! கடைசியில மணியின் உயிரைக்கூட காப்பாற்றிட்டான்.''

''சரி நீலா, இந்த நூறு ரூபா வச்சிக்கோ'' மணி ரூபாய் நோட்டை எடுத்துத் தந்தான்.

''சாமி, உங்ககிட்ட இருக்குற துணிமணிகளை வேணா தாங்க. எங்க சனங்களுக்கு உதவும். ரூபாயெல்லாம் வேண்டாம் சாமி. அதோ அடிவாரம் வந்துருச்சு. நீங்க போயிட்டு வாங்க. நான் மேலே போக வேண்டியிருக்கு. வரட்டா சாமி'' - நீலன்.

அவர்கள் கைகளை ஆட்டி விடை கொடுத்தனர்.


கோகுலம்
போஸ்டர்
ஸ்பைடர்


மேன்

எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?

உள்ளேன் ஐயா!

ஒரு நாள் எங்கள் தமிழாசிரியர் பாடத்தை முடிக்க வேண்டும் என்பதற்காகவே வருகைப் பதிவேடு எடுக்காமல் பாடம் நடத்தினார். தூங்கிக் கொண்டிருந்த என் நண்பன் ஆசிரியரின் பார்வையில் படவில்லை. பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் திடீரென அவன் பெயரைச் சொல்லிக் கேள்வி கேட்டார். உடனே நான் அவனைத் தட்டி எழுப்பினேன். எழுந்தவன் கண்ணில் தமிழாசிரி



யர் படவே வருகைப் பதிவேடு எடுக்கிறார் என்று நினைத்துக் கொண்டு "உள்ளேன் ஐயா" என்றான். உடனே வகுப்பறையே சிரித்துவிட்டது. ஒன்றும் புரியாத தமிழாசிரியருக்கு நான் விளக்கம் கூறினேன். பிறகு அவன், "இனி மேல் வகுப்பறையில் தூங்க மாட்டேன்" என்று மன்னிப்புக் கேட்டுவிட்டு வகுப்பை கவனிக்க ஆரம்பித்தான்.

- இராசி.முருகன், இராமசமுத்திரம்

நட்சத்திரம்

எங்கள் ஆசிரியர் "இரவில் நீங்கள் எத்தனை நட்சத்திரங்களைப் பார்ப்பீர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார். ஒரு மாணவி





"ஆயிரக்கணக்கில்" என்று பதில் சொன்னாள். இன்னொருத்தி "லட்சக் கணக்கில்" என்றாள். அடுத்தது ஒருத்தி "கோடிக்கணக்கில்" என்றாள். கடைசியாக ஒரு மாணவி எழுந்து "மூன்று நட்சத்திரங்கள்" என்றாள். ஆசிரியர் ஆச்சரியத்தோடு "மூன்றே மூன்று நட்சத்திரமா, எப்படி?" என்றார். அதற்கு அந்த மாணவி "எங்கள் வீட்டில் மிகச்சிறிய ஜன்னல்தான் இருக்கிறது" என்றாளே பார்க்கலாம்!

- க.தனலட்சுமி, மயிலாடுதுறை

இரண்டு டிக்கெட்

எங்கள் கணித ஆசிரியர் பக்கத்து ஊரிலிருந்து தினமும் ரயிலில் பள்ளிக்கு வந்து செல்வது வழக்கம். ஒருமுறை அவர், பள்ளியிலிருந்து அவரது ஊருக்குச் செல்வதற்காக, ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று டிக்கெட் வாங்கி வருமாறு ஒரு மாணவனிடம் சொன்





னார். பள்ளிக்கு மிக அருகிலேயே ரயில்வே ஸ்டேஷன் இருந்தது. சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்த மாணவன் ஒரு டிக்கெட்டையும், ஒரு பிளாட்ஃபாரம் டிக்கெட்டையும் ஆசிரியரிடம் நீட்டினான். "பிளாட்ஃபாரம் டிக்கெட் எதற்கு?" என்று ஆசிரியர் கேட்டதற்கு, அம்மாணவன் "ரயில் வர்ற வரைக்கும் பிளாட்பாரம்லேதானே சார் நீங்க காத்திருக்கணும். அதனாலதான் சார் வாங்கினேன்!" என்றானே பார்க்கலாம்! வகுப்பே சிரிப்பில் அதிர்ந்தது.

- **ஆர்.பிரசன்னா, கரூர்.**

சுரைக்காய்...!


எங்கள் தமிழாசிரியர் நகைச்சுவை உணர்வு மிக்கவர். அவர் அடிக்கடி எங்களுக்கு அறிவுரைகள் கூறுவார். பொது அறிவுக்காகத் தினமும் செய்தித்தாளைக் கொண்டு வந்து அதிலிருந்து கேள்விகள் கேட்பார். நாங்களும் காலையில் வீட்டிலேயே அன்றைய செய்திகளைத் தெரிந்து கொண்டு போவோம். ஒரு நாள் அவர் இசக்கிமுத்து என்ற மாணவனை எழுப்பி ஒரு கேள்வியைக் கேட்டார். அவன் செய்தித்தாளைப் படிக்காததால் திருதிருவென்று விழித்தான். உடனே ஆசிரியர், "என்ன! இன்னிக்கு பேப்பர் படிக்கலையா? பாடம் மட்டும் படித்தால் போதாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்று கோபத்துடன் கூறினார். உடனே அவன், "அப்ப இன்ஸ்பெக்டர் சுரைக்காய் கறிக்கு உதவுமா சார்?" என்று கேட்க வகுப்பே பூசணிக்காய் தெரித்தது போல விழுந்து விழுந்து சிரித்தது. பிறகு ஆசிரியர் அவன் படிக்காததற்காகவும், அவனது அதிகப் பிரசங்கித்தனத்திற்காகவும் அவனை வகுப்பறையை விட்டு வெளியேறச் சொன்னார்.

- **எம்.வினோத், விருத்தாசலம்**

வேறுபாடு?

அன்று அறிவியல் பாட வேளை. ஆசிரியர் மனிதனின் உடம்பிலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் வரைந்து காட்டி, விளக்கிக் கொண்டிருந்தார். அனைவரும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தோம். என் நண்பன் ஒருவன் மட்டும், வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரியர், "தம்பி! இதயத்திற்கும், இருதயத்திற்கும் என்ன வித்தியாசம் கூறு பார்ப்போம்?" என்று கேட்டார். என் நண்பனோ, தயங்காது, "இதயம் என்றால் ஒரு இதயத்தைக் குறிப்பது; இருதயம் என்றால் இரண்டு இதயங்களைக் குறிப்பது" என்று சட்டென சொன்னதைக் கேட்டு ஆசிரியரும் சிரிக்க நாங்களும் சிரித்தோம்.

- **ஏ.எல்.பாத்திமா, காரைக்கால்**


பிந்தி புத்திசாலி ஆடு. ஒருநாள் மந்தையை விட்டு வழி தவறி காட்டுக்குள் நுழைந்தது.
என் அம்மா, அப்பா எல்லாம் எங்கே?
வழி தவறிய பிந்தி
வேணுவாரியத்
மோஹன் தாஸ்
என் எஜமானரின் வீட்டுக்குப் போக எனக்கு வழி தெரியவில்லையே!
அந்த வழியே ஒரு நரி வந்தது.
ஆஹா! இன்னிக்கு உணவு தேடி வேட்டைக்கு எங்கும் செல்ல வேண்டாம்.
ஆட்டுக்கறி சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு!
நீ உயிரை விடத தயார் என்றால் என்னைச் சாப்பிடலாம்.
என்ன? என்ன சொல்றே நீ?


ஒரு புலி வந்து அது குளிச்சிட்டு வர்றவரைக்கும் இந்த இடத்தை விட்டு அசையக் கூடாதுன்னு சொல்லிட்டுப் போயிருக்கு.
ஓ... அப்படியா?
நான் ஏற்கனவே உயிரை விடத் தயாராயிட்டேன். நீ என்னைச் சாப்பிடு. உன்னைப் புலி சாப்பிடட்டும்.
வேண்டாம்.
அப்பாடி! ஒரு பிரச்னை முடிந்தது.
பிந்திக்குத் தாகம் எடுத்தது. உடனே ஏரிக்குச் சென்றது. அங்கு -
நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன்!
ஐயோ! இப்ப என்ன பண்றது? ம்....
என் மகன் ரொம்ப நாட்களாக ஆட்டுக்கறி சாப்பிடணும்னு கேட்டுக்கிட்டிருந்தான். உன்னைக் கொடுத்துட வேண்டியதுதான்.
உயிர் மேல் ஆசையிருந்தால் ஓடிப் போய்விடு.


முட்டாளே! என்னையா பயந்து ஓடச் சொல்லறே? இப்ப நீதான் ஓடணும். நான் உன்னைச் சாப்பிடப் போறேன்.
நீ சொல்றது சரிதான். ஆனால் இப்ப யார் ஓடப் போறதுன்னு பார்க்கலாமா?
அங்கே பார். அந்த மரத்துக்குப் பின்னால ஒரு வேட்டைக்காரன் உன்னைச் சுடுவதற்குத் தயாரா இருக்கான்.
உனக்கு எப்படி தெரிந்தது?
ஏரிக்கு நீர் அருந்த நீ வருவேன்னு அவன்தான் என்னை இங்கே நிற்க வச்சிட்டுப் போயிருக்கான்.
ஐயோ! நான் கிளம்பறேன்.
அப்பாடா! நான் தப்பித்தேன்!
மறுநாள் காலை காட்டுக்கு வெளியே அலைந்து திரிந்து வந்தது.
இதோ என் எஜமான். இனி பயமில்லை. எங்கள் கூட்டத்தோடு சேர்ந்துடலாம்.

தியாகமனம் - பாரதிவாணர் சிவா - பக்.164. ரூ.47 - மீனா புத்தகப் பண்ணை, 29, வில்லியம் லே அவுட் 2வது தெரு, கன்னியா குளம் சாலை, விழுப்புரம் - 605 602.

சிறுவர்க்கான நாவல்கள் வெகுவாகக் குறைந்து வரும் நிலையில் ஒரு முழுநீளப் புதினத்தை குஜராத் பூகம்பத்தை மைய மாக வைத்து சுவை குன்றாது எழுதியுள்ள ஆசிரியரை மனதாரப் பாராட்டலாம். சிறு வரிடம் ஏராளமான திறமை உள்ளது. அதை ஒருமுகப்படுத்தி செயல்பட வைத்தால் எதையும் சாதிக்க வைக்கலாம் என்ற ஓர் எண்ணத்தைப் படிப்பவர் மனதில் அழுத்த மாகப் பதிய வைக்கிறது நாவல். பல இடங்கள் மனதை நெகிழ வைக்கின்றன. ஆசிரியருக்குப் பாரதியிடம் உள்ள பற்றை யும் ஒருமைப்பாட்டில் உள்ள ஈடுபாட்டை யும் உணர முடிகிறது. ஆசிரியரே ஓவிய ராகவும் அமைந்துள்ளது கூடுதல் சிறப்பு.

தெனாலிராமன் கதைகள் - பேராசிரியர் எ.சோதி - பக்.128 - ரூ.35 - நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 3.

சிறுவருக்கு நன்கு அறிமுகமான ஆசிரி யர். எத்தனை ஆண்டுகளானாலும் சிறு வரை மட்டுமல்ல, எல்லா வயதினரையும் மகிழ வைக்கும் பரம்பரைக் கதைகளைத் தமக்கே உள்ள தனித்திறமையோடு கொடுத்துள்ளார். பேசும் முழுப் பக்க ஓவியங்கள், பெரிய எழுத்து அமைப்பு, அயல் நாட்டு நூலோ என்று மயங்க வைத் துள்ள தயாரிப்பு என்று நூலின் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பாம்புகளைத் தெரிந்து கொள்வோம் - ஆழி.வே. ராமசாமி - பக்.108 - ரூ.27 - குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, ராஜா-ராணி காம்ப்ளெக்ஸ், நாகப் பட்டினம் - 611 001.


பாம்புகளைப் பற்றிய நூல் என்று தலைப்பிருந்தாலும் முதலைகள் பல்லி களைப் பற்றிய விவரங்களும் அழகிய படங் களோடு தரப்பட்டுள்ளன. எல்லாமே கோகுலத்தில் அறிவியல் சித்திர மடல்களாக வெளிவந்து வாசகர் களால் மட்டுமல்ல ஆசிரியர் - பெற்றோராலும் பெரிதும் பாராட்டப் பெற்றவை. இப்பொழுது அவை விரிவாக்கப்பட்டு கூடுதல் தகவல் களோடு நூலாக்கப்பட்டுள்ளன. உரை யாடல் வாயிலாகவே விளக்கப்பட்டுள்ள உத்தி சுவையாக உள்ளது.

வாயும் மனிதனும் - வி.அபிமன்யு - பக்.16 - ரூ.10 - கரிசல் பதிப்பகம், ஸ்கந்தா காம்பளக்ஸ், 26, மாதாகோவில் தெரு, கோவில்பட்டி - 628 501.

இந்தியாவின் மிகச் சிறிய குழந்தை எழுத்தாளர் மற்றும் குழந் தைப் பத்திரிகை ஆசிரியர் என்ற பெரு மைக்குரிய ஏழு வயதான அபிமன்யு எழுதியுள்ள பத்துக் கதைகள் இதில் உள்ளன. குழந்தைகளின் கற்பனை உலகே அதிசயமானது வினோதமானது என் பதை இந்தப் பத்து வரிக் கதைகள் உணர்த்துகின்றன. படங் களும் கற்பனைக்கு விருந்தளிப்பதாக உள்ளன.

— ரே

உங்கள் நூலகம்



குழந்தைகளின் கற்பனை வளம் அதிசயமானது!







சென்னையில் குற்றாலம்!

சென்னைக்கு வருபவர்கள் தவறாமல் சென்று பார்க்க வேண்டிய இடங்களில் கிஷ்கிந்தாவும் ஒன்று. கிஷ்கிந்தாவைப் பார்க்காதவர்கள் கூட அதைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட உல்லாசப் பூங்கா கிஷ்கிந்தாதான். 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து புதுப்புது விஷயங்களைப் புகுத்தி மக்களின் கவனத்தைத் தன் பக்கம் இழுத்து வைத்திருக்கிறது.

சென்னையை அடுத்துள்ள தாம்பரத்திலிருந்து கிஷ்கிந்தா செல்ல அவர்களே பஸ், வேன் வசதிகளைச் செய்திருக்கிறார்கள். தாம்பரத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் பயணத்தில் கிஷ்கிந்தாவை அடைந்து விடலாம்.

110 டிகிரி வெயிலில் களைத்துப் போய் உள்ளே நுழைந்தால் 120 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்கா முழுவதும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பசுமை மரங்கள், செடிகள், கொடிகள். சட்டென்று வெயில் குறைந்து குளிர்ந்த காற்று வீசுகிறது. சென்னையை விட எப்போதும் இங்கு 2 டிகிரி வெயில் குறைவாகத்தான் இருக்குமாம்!

சிறிய குழந்தைகள், சிறுவர் - பெரியவர், நீர் விளையாட்டுகள் மற்றும் வீடியோ, கம்ப்யூட்டர் விளையாட்டுகள் என்று பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

டக் டிரெயின், பம்பர் போட், ஹெலிகாப்டர் என்று இன்னும் பலவற்றில் சிறுவர்களின் கூட்டம் நிரம்பி வழிகிறது. முதலில் சிறு தயக்கத்துடன் ஏறும் குழந்தைகள் ஆட்டம் முடிந்ததும் முகமெல்லாம் சந்தோஷத்துடன் மனமின்றி இறங்கி வரு









* படங்கள் : ஸ்ரீஹரி

கிறார்கள்.

ஜெயன்ட் ஷார்க் ரைட், ஸ்பேஸ் ஷட்டில், அரேபியன் நைட்ஸ், டிராகன் கோஸ்டர், அக்வா கோஸ்டர், ஃப்ளூம் ரைட், பம்பர் கார் போன்றவற்றில் பெரியவர்களும் சிறுவர்களாக மாறி சிறுவர்களுடன் சேர்ந்து உற்சாகமாக விளையாடி மகிழ்கிறார்கள்.

அதிலும் ருத்ர காவேரி (ஒயிட் வாட்டர் ரைட்)யும் மாயக் கால்வாயும் (ஃப்ளூம் ரைடு) ரொம்பவே த்ரிலிங்காக இருக்கிறது.

கிஷ்கிந்தாவின் சேர்மேன் அப்பச்சன் குழந்தைகளை மிகவும் நேசிக்கக்கூடியவர். பல வருடங்களுக்கு முன்பு மைடியர் குட்டிச்சாத்தான் என்ற 3டி படத்தை எடுத்து எல்லோருக்கும் புதிய அனுபவத்தை ஏற்படுத்தியவர். இங்கும் ஒரு அரங்கத்தில் அந்தத் திரைப்படம் தினந்தோறும் திரையிடப் படுகிறது.

மற்ற உல்லாசப் பூங்காக்களில் இல்லாத ஒரு அம்சம் என்னவென்றால் அது சென்னை குற்றாலம்தான்! பேரிரைச்சலோடு தொம் தொம்மென்று விழும் அருவியைப் பார்க்கும் போது செயற்கை அருவி என்றே நம்ப முடியவில்லை.

அருவியிலும், நீச்சல் குளத்திலும் மணிக்கணக்கில் எல்லோரும் குளித்துத் தீர்க்கிறார்கள்.

செயற்கை கடற்கரை, பெடல் போட், மீன் காட்சியகம் என பொழுதுபோக்க பல விஷயங்கள் இங்கு வியாபித்திருக்கின்றன.

இந்த ஆண்டின் புது வரவு த்ரில்லோரியம், ஜுராசிக் ஜங்கிள், மியூசிகல் ஃபவுண்டைன்.

பல கோடி செலவாகும் விண்வெளிப் பயணத்தை நம்மால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. த்ரில்லோரியத்

தின் மூலம் நம் ஆசை நிறைவேறுகிறது. இருட்டறையில் நாம் உட்கார்ந்திருக்கும் நாற்காலிகளும் முன்னே பின்னே அசைய, எதிரில் திரையில் விண்வெளிக் காட்சிகள் திரையிடப்படுகின்றன. அப்போது நாமே விண்வெளிக்குச் செல்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

ஜுராசிக் ஜங்கிளில் சிறிதும் பெரிது மான டைனசார்கள் குரலெழுப்பியபடி நம்மைச் சற்று திகிலடைய வைக்கின்றன.

பாடல்களுக்கு ஏற்ப பல வண்ண நீரூற்றுகள் அசைந்து, அசைந்து நடனம் ஆடும் போது (மியூசிகல் ஃபவுண்டைன்) குழந்தைகளும் பெரியவர்களும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்கின்றனர்.

காலையில் நுழைந்தால் மாலை வரை 6ல் இருந்து 60 வயது வரையிலான குழந்தைகளைத் தங்கள் கவலை, வயது, வெயில் என எல்லாவற்றையும் மறந்து களிப்படையச் செய்கிறது கிஷ்கிந்தா.

கிஷ்கிந்தாவில்
கோகுலம் நடத்திய போட்டி

12.05.02 அன்று கிஷ்கிந்தாவில் கோகுலம் 'க்விஸ்' போட்டியை நடத்தியது. போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் கோகுலம் இதழ் கொடுக்கப்பட்டது. சரியான விடை அளித்தவர்களில் பத்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பரிசு பெற்ற ஒவ்வொருவருக்கும் ரூ.100/- மதிப்புள்ள குழந்தைகளுக்கான புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

பரிசு பெற்றவர்கள் :

1. வி. அருண், கும்பகோணம்.
2. ஜி. இளமதி தேவி, சேலம்.
3. கே.தணிகை ராஜன், அடியாக்க மங்கலம், நாகை மாவட்டம்.
4. கே. கிருத்திகா, மணலூர், நாகை மாவட்டம்.
5. அ. ஆர்த்தி, புழுதிவாக்கம், சென்னை.
6. மணிமேகலை, சென்னை.
7. இரா. ரம்யா, சீர்காழி.
8. எஸ். வினோத், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.
9. பி. பிரமிளா, சென்னை.
10. கே. பரணி, திருவொற்றியூர், சென்னை.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 ப	ண்	ரு	ட்	டி		ணி	ர	2 த
ல்				ச		ரு		வ்
3 ல	ட்	டு		ச்		4 ஊ	ற்	று
வ				5 கி				
ர்	வ	ய	6 கு		7 க	ம்	ப	ர்
				8 தா				ய
ம்	ள	9 வ		வா		10 கு	ந்	தி
க		ன		ர				த்
11 மே	ள	ம்		ம்	ய	ரி	டு	12 வை


சைக்கிள்

• 150 ஆண்டுகளுக்கு முந்தைய சைக்கிள்



ஏழைகளின் வாகனம் சைக்கிள் என்று சொல்வார்கள். இதைக் கண்டுபிடித்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த மாக்மில்லன். ஆனால் அவர் கண்டுபிடித்த சைக்கிள் பல வடிவம் மாறி இன்று புதிய உருவில் உள்ளது. பலரது சிந்தனையில் பலவிதமாக வடிவமைக்கப்பட்ட சைக்கிள்தான் இப்போது உள்ளது. இதற்கு அஸ்திவாரம் போட்டவர் மாக்மில்லன்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தில் மூன்று சக்கரமுள்ள ஒரு தள்ளு வண்டியை உபயோகித்து வந்தார்கள் என சில சரித்திரக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அதன்பின் 1817 ஆம் ஆண்டு இரண்டு சக்கர முள்ள 'டிரைசன்' என்ற வாகனம் உருவானது.



இதைக் கண்டுபிடித்தவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பிரடெரிக் டி ரைஸ் என்பவர் ஆவார். மரப்பலகையில் இரண்டு சக்கரங்கள் செய்து இது உருவாக்கப்பட்டிருந்தது.

மரப்பலகையில் அமர்ந்துகொண்டு இருபுறமும் கால்களால் தரையை உதைத்து மரத்தினால் ஆன சக்கரங்களை உருளச் செய்து சைக்கிளில் செல்வது போல் சென்று வந்தனர். முன்புறம் பிடித்துக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்புறம் உள்ள பிடியின் மூலம் எந்தப் பக்கமும் திருப்ப வசதியாக இருந்தது. இந்த வாகனம் விலை கூடுதலாக இருந்ததால் 'டாண்டி ஹோஸ்' என்று இதை அழைத்தனர். 1840ஆம் ஆண்டில் கிர்க்பாட்ரிக் மாக்மில்லன் காலால் மிதிக்கும் வசதியுடைய பெடலுடன் கூடிய சைக்கிளைக் கண்டுபிடித்தார். இவர் ஒரு இரும்பு வேலைக்காரர். எனவே பல நாட்கள் முயற்சி செய்து சைக்கிளைக் கண்டுபிடித்தார். முன் சக்கரத்துடன் பெடலை இணைத்து காலால் பெடலை மிதிக்கும்போது சைக்கிள் உருண்டது. பெடல் கண்டுபிடித்ததால் காலால் தரையை உதைத்துச் செல்ல வேண்டியது இல்லை. இந்த சைக்கிள் சரித்திரத்தில் இடம் பெற்றது. மாக்மில்லனுக்குப் பெருமையையும் சேர்த்தது.

சைக்கிளுக்கு 'பை சைக்கிள்' என்று பெயர் வர மேலும் 25 ஆண்டுகள் ஆனது. அதாவது 1865ல்தான் 'பை சைக்கிள்' என்று பெயர் வந்தது.

இரும்புச் சக்கரங்களும் மரச் சட்டங்களும் கொண்டு சைக்கிளை உருவாக்கினர். முன்பு உருவான சைக்கிளை விட இதில் சில பிரத்யேக வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

1868ல் மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டு புதிய சைக்கிள் உருவானது. அதாவது மரச் சட்டங்களுக்குப் பதில் கனம் குறைந்த உலோகச் சட்டங்கள், கம்பிகள் டயர் சக்கரங்கள் இப்படி பல மாற்றங்களைப் புகுத்தி புதிய சைக்கிள் வடிவமைக்கப்பட்டது. பின் சக்கரத்தை விட முன் சக்கரம் பெரிதாக அமைக்கப்பட்டது. இந்த சைக்கிள் சவாரி ஏறக்குறைய சர்க்கஸ் சைக்கிள் போல அமைந்தது. பயிற்சி இல்லாமல் இந்த சைக்கிளை ஓட்டியவர்கள் எல்லாம் உருண்டு விழுந்தனர். இதனால் இந்த சைக்கிளில் யாருக்கும் விருப்பம் இல்லாமல் போனது.

1885ல் பாதுகாப்பான சைக்கிள் உருவானது. இரு சக்கரங்களும் ஒரே அளவில் அமைந்த சைக்கிள்கள் உருவாயின. எளிதில் பயிற்சி பெற்று எல்லோரும் அந்த சைக்கிளை ஓட்டினர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என எல்லாத் தரப்பினரும் சைக்கிளை விரும்பினர். அனைவரின் விருப்பத்திற்குரிய வாகனமானது சைக்கிள்.

— தேனி முருகேசன்

சிட்டழகு கடத்தப்பட்டாள்

"ஐயோ அம்மா" என்று அலறினாள் சிட்டழகு. மல்லிகைக் கொல்லை அருகில் நின்றிருந்த வேலையாட்கள் ஓடி வந்தனர்.

கீழே தரையில் கிடந்து அழுது கொண்டிருந்த அவளைத் தூக்கி நிறுத்தினர். காலை ஊன்ற முடியாமல் தடுமாறினாள் சிட்டழகு. தூக்க வந்தவர்களைப் பார்த்துத் திருதிருவென விழித்தாள். அவள் கண்களில் பீதி வழிந்தது.

"யார்... நீ? எதுக்கு இங்கே வந்தே?" என்றனர் வேலையாட்கள்.

மரத்தடியில் இருள் சூழ்ந்து இருந்ததால் "வெளிச்சத்துக்கு அழைச்சிட்டுப் போவோம்" என்று வேலையாட்கள் தங்களுக்குள் பேசியபடியே, அவளைக் கொஞ்ச தூரத்தில் எரிந்து கொண்டிருந்த 'பெட்ரோமாக்ஸ்' அருகில் அழைத்துச் சென்றனர். சிட்டழகு நடக்க முடியாமல் தவித்தாள்.

சின்னமனூர் சின்னப் பட்டாளம்



உடனே அவளைத் தூக்கிக் கொண்டு சென்றனர். அவள் சத்தமில்லாமல் முனகியபடியே அழுது கொண்டிருந்தாள். "காயம் பெரிதாக இல்லை என்றாலும் வலி பொறுக்க முடியவில்லை போலிருக்கிறது" என்றான் ஒருவன்.

மீண்டும் மீண்டும் அவர்கள் அவளை "நீ யார்? எதற்கு இங்கே வந்தே?" என்று கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தனர்.

அவள் பதில் எதுவும் சொல்லவில்லை. கண் சொறுக மயங்கி விட்டவள் போல் சோர்ந்து கிடந்தாள்.

மரத்தின்மீது இருந்த நண்பர்கள் செய்வது அறியாமல் விழித்தனர். உதாரணம் பயத்தில் நடுங்கியபடியே மரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தான்.

கீழே குதிக்க முயன்ற முத்துக்குமாரைக் கிட்டான் சைகையால் தடுத்து நிறுத்தினான்.

பயத்தில் எல்லோரின் இதயமும் படபடவென்று படுவேகமாகத் துடித்துக் கொண்டிருந்தன. எல்லோர் கண்களும் சிட்டழகு மீதே நிலைகுத்தி நின்றன.

அவள் வாய் திறந்து ஏதாவது சொல்லிவிட்டால்? அடுத்து என்ன செய்வது என்பதில் கிட்டானின் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

ரா. சுந்தரமூர்த்தி



4

மயங்கிக் கிடந்த சிட்டழகு முகத்தில் ஒருவன் தண்ணீரைக் கொண்டு வந்து தெளித்தான். அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். தண்ணீர் தெளித்தவன் கொஞ்சம் முரட்டு ஆசாமியாக இருந்தான். அவன் இறுகிய முகத்தில் கொடுவாள் மீசை முறுக்கோடு இருந்தது. பற்கள் காவி படிந்திருந்தன. கண்கள் சிவந்து கிடந்தது.

"யார் நீ?" அதட்டலான அவனது கரகரப்பான குரலைக் கேட்டு பயந்து நடுங்கினாள் சிட்டழகு. எனினும் வாயைத் திறக்கவில்லை.

குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்பது போல் சைகை செய்தாள் சிட்டழகு. ஒரு குவளை நீர் தரப்பட்டது. அதை வாங்கி மடமடவென குடித்தாள்.

"நான்... நான்..." என்றவள் மீண்டும் மயங்கி விழுபவள் போல் தரையில் சாய்ந்தாள்.

வேலையாட்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர் "டேய் இப்ப என்னடா செய்யறது?" என்றான் ஒருவன்.

"ஐயாகிட்ட அழைச்சிட்டுப் போயிட வேண்டியதுதான்" என்றான் மற்றவன்.

'பண்ணையாரிடமா?' மனதிற்குள் பயம் ஓட திடுக்கிட்டு விழித்தாள் சிட்டழகு. உடன் நின்றவர்களை வித்தியாசமாகப் பார்த்தாள்.

"பொண்ணு மயக்கம் தெளிஞ்சிட்டா" என்றான் ஒரு முரடன்.

''ஐயோ நான் எங்கே இருக்கேன்? நீங்க யாரு?'' என்றாள் பதட்டமாக.

''ஏய் பொண்ணு, யார் நீ? எங்கே வந்தே?'' அதே கேள்வி, அதே அதட்டும் குரல்.

இனி சும்மா இருக்கமுடியாது. ஏதாவது சொல்லித் தப்பிக்க வேண்டும் என்று சிந்தித்தபடி வாயைத் திறந்தாள் சிட்டழகு.

''நான் நண்பர்களுடன் பக்கத்து ஊருக்கு நாடகம் பார்க்கப் போயிட்டு வரும் போது, தூக்கக் கலக்கத்தில் வழி தவறி விட்டேன். எதிலோ முட்டிக் கிட்டதால கீழே விழுந்து விட்டேன். நீங்க யாரு? புள்ளை புடிக்கிறவங்களா?'' என்று கேட்டு விட்டு, பெருங்குரலெடுத்து அழத் தொடங் கினாள்.

'சபாஷ்டா... சரியான பொய். சாமர்த்திய மாகச் சொல்லிட்டா' கிட்டான் மனதிற்குள் பாராட்டினான். நண்பர்கள் கமுக்கமாக ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

ஒருவன் சட்டென ''ஏய் நிறுத்து, நிறுத்து அழுகையை'' என்று கத்திக் கொண்டே சிட்டழகின் வாயை அழுத்திப் பொத்தினான். அவனிடமிருந்து விடுபட திமிறினாள் அவள்.

''டேய் ஒரு சாக்குக் கொண்டாடா, கயிறும் எடுத்திக்கிட்டு வா. இந்தப் பெண்ணை கையைக் காலைக் கட்டி வாயில் துணியை வச்சி அடைச்சி மூட் டைக் கட்டணும்'' என்றான் அவன்.

''ஏன் அண்ணே அப்படி சொல்றீங்க? பாவம் சின்னப் பெண்ணு.''

''வாயை மூடுடா மடையா. இவள் சத்தம் போட்டா பக்கத்து தோட்டங்களில் காவ லுக்கு இருக்கிற ஆட்கள் ஓடி வருவாங்க. அப்புறம் பிரச்னை ஆயிடும். ஐயாவுக்குத் தெரிஞ்சா கொன்னு போட்டுடுவாரு!''

''அண்ணே நீங்க சொல்றது சரிதான்'' என்றான் அவன்.

''முதல்ல இடத்தைக் காலி பண்ண ணும். மத்ததெல்லாம் ஐயாகிட்ட கேட்டுக் கிட்டு செய்யலாம். லோடு எடுத்துக்கிட்டுப் போனவரு நம்மை எதிர்பார்த்துக்கிட்டு இருப்பாரு. புறப்படுங்கடா எல்லாம்'' முரடன் குரல் கொடுத்தான்.

அவசரமாக ஒரு சாக்கு வந்து சேர்ந்தது. முரண்டு பிடித்த சிட்டழகை நாலு பேராகச் சேர்ந்து அமுக்கி, கால், கையைக் கட்டினர். தூக்கி மூட்டைக்குள் திணித்தனர்.

மரத்தில் இருந்த நண்பர்களுக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டது. இப்போது அவர்கள் எதுவும் செய்ய முடியாது. செய்தால் அது விபரீதமாகிவிடும் என்பதை கிட்டான் எச்சரித்திருந்தான்.

உள்ளே கிடந்து சிட்டழகு துடிப்பது மூட்டை புரள்வதில் இருந்தே தெரிந்தது. முரடனாக இருந்தவன் மூட்டையை அலக் காகத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு முன்னே நடக்கத் தொடங் கினான். மூட்டைக்குள் சிட்டழகு உடலை முறுக்கி முரண்டு செய்யவே அது தோளில் இருந்து நழுவியது.

''ஏய், சனியனே சும்மாகிட. உள்ளே ஆட்டம் போட்டே கிணத்திலோ குளத் திலோ போட்டு விடுவேன் ஜாக்கிரதை'' என்று உறுமினான். மற்றவர்களும் அவ னுடன் நடக்கத் தொடங்கினர்.

மல்லிகைக் கொல்லை படலை இழுத் துக் கட்டிவிட்டு கடைசி ஆள் போய் அவர் களுடன் சேர்ந்து கொள்ளும் வரை பொறுமையாக இருந்த நண்பர்கள் மெல்ல மெல்ல மரத்தில் இருந்து நழுவி வழுக்கிய படி சத்தமில்லாமல் இறங்கினர்.

வேலையாட்கள் விடுவிடுவென வேக



மாக நடந்தனர். அவர்கள் கொஞ்ச தூரம் நடந்த பின்பு இருட்டைத் துழாவியபடியே வைக்கோல் போரில் சாத்தி வைத்திருந்த சைக்கிள்களை எடுத்துக் கொண்ட நால்வரும் அங்கே நின்று அடுத்து என்ன செய்வது என்று ஆலோசித்தனர்.

பயத்தின் நடுக்கம் தீராத உதாரணம் ''நேரா வீட்டுக்குப் போயிடலாம்டா. இதுக்கு மேலே எதுவும் வேண்டாம். ரொம்ப நேரமா யிடுச்சு'' என்றான்.

செந்தில் கோபத்துடன் சொன்னான் : ''போடா முட்டாள். சிட்டழகு அவங்ககிட்ட மாட்டிக்கிட்டு இருக்கா. அப்ப கூட நம்மை காட்டிக் கொடுக்கலை. தந்திரமாகவும் தைரியமாகவும் சமாளிச்சி இருக்கா. இவ ருக்கு நேரம் ஆயிடுச்சாம். சிட்டழகு வீட்டில் அவ எங்கன்னு கேட்டா என்ன பதில் சொல்றது?'' என்றான்.

''பதட்டப்படாதீங்க. இப்போதான் நாம புத்திசாலித்தனமா யோசிக்கணும். ஒண்ணு செய்வோம். குறுக்கு வழியாகப் புகுந்து போய் மெயின் ரோட்டில் பண்ணையார் ஆட்களை எதிர்கொள்வோம். சிட்டழகு சொன்ன கதையையே நாமும் அவிழ்த்து விடுவோம்'' என்றான் கிட்டான்.

செந்தில் ''அருமையான யோசனை. வாங்க சீக்கிரம் போகலாம்'' என்றான்.

குறுக்கு வழி சாலையில் சைக்கிள்கள் இறங்கின.

''எந்த நேரத்திலும் எல்லோரும் எச் சரிக்கையாக இருக்கணும். நாமும் அவர்கள் கையில் சிக்கி விடக் கூடாது. அது ரொம்ப முக்கியம்'' என்றான் முத்துக்குமார்.

குறுக்கு வழி மேடு பள்ளங்களில் சைக்கிள்கள் விழுந்து எழுந்து தட்டுத் தடுமாறினாலும் மிக வேகமாகவே மெயின் ரோடு வந்து திரும்பினார்கள்.

எதிரே மூட்டையுடன் பண்ணையார் ஆட்கள் வந்து கொண்டிருந்தனர். இருட் டில் சைக்கிள்களை நிறுத்திவிட்டு, சாலை யில் டார்ச்சை அடித்த கிட்டான் அவர்களை எதிர்கொண்டு விசாரித்தான்.

மிகப் பணிவான பயம் கலந்த குரலில் ''ஐயா... ஐயா... இந்தப் பக்கம் சின்னப் பொண்ணு யாரையாவது பார்த்தீங்களா? எங்ககூட வந்த பொண்ணு. வழி தடு மாறிடுச்சு'' என்றான்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.


''என்ன? என்ன கேட்டே தம்பி பெண்ணா?'' என்றான் ஒருவன்.

கிட்டானுடன் சேர்ந்து முத்துக்குமாரும் விபரம் சொன்னான். ''ஐயா, பக்கத்து ஊரில் நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பும்போது எங்ககூட வந்த பொண்ணு தூக்கக் கலக் கத்தில் வழி தவறிட்டா. நாங்க கொஞ்ச தூரம் நடந்த பிறகு திரும்பிப் பார்த்தால் காணலை. நீங்க பார்த்தீங்களான்னு...''

''இல்லையே'' என்றான் மூட்டை வைத்திருந்தவன்.

''அப்படியா சரிங்கய்யா'' என்றான் கிட்டான் பணிவாய்.

தாங்கள் சொல்வதைப் பசங்க நம் பிட்டாங்க என்று நினைத்த ஒருவன் ''என்னப்பா நீங்க இவ்வளவு அலட்சியமா இருக்கலாமா? அதுவும் பெண் பிள்ளை யைப் பார்த்து கவ னமா கூட் டிக்கிட்டு வர வேண் டாமா? இருட்டில் எங்க நிக்குதோ



பாவம்?'' என்று பரிதாபப்படுபவன் மாதிரி நடித்தான்.

'அடப்பாவி! என்னமா நடிக்கிறான்' என்று தொண்டை வரை வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு விழுங்கினான் உதாரணம்.

''என்ன அண்ணே மூட்டையிலே?'' சாதாரணமாக விசாரிப்பவனாகக் கேட்டான் முத்துக்குமார்.

''அதெல்லாம் உனக்கெதுக்கு?'' என்று முறைத்தான் முரடன்.

''சும்மா தெரிஞ்சுக்கலாமுன்னுதான்'' என்றான் முத்துக்குமார்.

''அது உனக்கு தேவையில்லாத விஷயம்'' என்றான் முரடன்.

அதற்குள் மூட்டைக்குள் இருந்து ''ம்...ம்..'' என்று முனகல் கேட்டது.

செந்தில் கத்தினான் : ''கிட்டான் மூட்டைக்குள் இருந்து ஏதோ சத்தம் கேட்குற மாதிரி இருக்கு.''

வேலையாட்களில் ஒருவன் சுதாரித்துக் கொண்டு ''அதெல்லாம் ஒண்ணும் கேட்கலையே! மூட்டையாவது சத்தம் போடறதாவது'' என்றான் தெனாவட்டாக.

''இல்லை... எனக்கு ஏதோ சத்தம் கேட்கற மாதிரிதான் இருக்கு. அதோட நெளிகிற மாதிரியும் தெரியுதே'' என்றான் செந்தில்.

''சும்மா இருட்டுல பினாத்தாதீங்க'' என்றான் அந்த வேலையாள்.

''இல்ல எங்களுக்குச் சந்தேகமாக இருக்கு. கீழே இறக்குங்க பார்த்து விடுவோம்'' என்றான் கிட்டான் உறுதியான குரலில்.

''அதெல்லாம் முடியாது. வழியை விடுங்க. எங்களுக்கு நேரமாச்சு. நாங்க போகணும்'' என்றான் ஒருவன்.

''முடியாது நீங்க மூட்டையில் எதையோ மறைக்கறீங்க. நாங்க எங்க தங்கச்சியைத் தொலைச்சிட்டோம். நீங்க மூட்டையைக் காட்டித்தான் ஆகணும்'' என்றனர் எல்லோருமாகச் சேர்ந்து பிடிவாதத்துடன்.



பாம்புகளுக்கும், மீன்களுக்கும் கண்களைத் திறந்து கொண்டு தான் தூங்க முடியும். ஏனென்றால் அவற்றுக்கு இமைகள் இல்லை.

- ஆர். பிரகாசம்

''ஏய், என்னங்கடா வம்பு பண்றீங்க? காட்டலன்னா என்ன பண்ணுவீங்க? நாங்க யாரு தெரியுமா? சும்மா விளையாடாதீங்க. அது நல்லதில்லை'' என்றான் முரடன் மிரட்டும் தோரணையில்.

''சரி நீங்க யாரு? எங்கே போறீங்க? அதையாவது சொல்லுங்க'' என்றான் கிட்டான்.

''அதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லாத கேள்வி'' என்றான் முரடன். அவன் தோளில் இருந்த மூட்டை நெளிந்து சரிந்தது. உறுதியாகப் பிடித்துத் தூக்கி வைத்துக் கொண்டு, ஓங்கி ஒரு அடியும் கொடுத்தான் மூட்டை மீது.

உதாரணத்திற்கு வயிற்றில் ஏதோ பிசைந்த உணர்வு.

அவன் எல்லோரையும் ஓரமாக அழைத்தான். ''நம்ம பேசறது சிட்டழகுக்குத் தொல்லையா போகுதுடா'' என்றான் கிசுகிசுப்பாக.

''அவனுங்க விட மாட்டாங்க போலிருக்கே'' என்றான் செந்தில்.

அதற்குள் அவர்கள் வேகமாக நடக்கத் தொடங்கி இருந்தனர்.

''அவர்களிடம் இனி பேசிப் பயனில்லை. அதனால் அவர்களைப் பின் தொடர்ந்து போய் என்னதான் நடக்கிறது என்று பார்க்க வேண்டியதுதான்'' என்றான் கிட்டான்.

அந்தச் சமயம் திடீரென ஓடிப் போய் ரோட்டில் இருந்த எதையோ எடுத்து டிராயர் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு வந்தான் உதாரணம்.

''என்னடா அது?'' என்றான் செந்தில்.

''ஏதோ டாலர் மாதிரி கிடந்தது'' என்றான் உதாரணம்.

''ஏண்டா உனக்கு விளையாட இதுதான் நேரமா? சரியான ஆள்டா நீ'' ஏளனமாகப் பேசினான் செந்தில்.

''ஏதோ கிடந்தது எடுத்துக்கிட்டு வந்துட்டான். அதுக்கு ஏண்டா அவனைத் திட்டற?'' என்றான் முத்துக்குமார்.

''சரி பேசாம வாங்க. அவர்களைப் பின் தொடருவோம்'' என்றான் கிட்டான். எல்லோரும் பண்ணையார் ஆட்களைப் பின் தொடர்ந்து சாலை திருப்பத்திற்கு வந்தபோது-

ஒரு கார் வரும் சத்தம் கேட்டது. அதன் ஹெட் லைட் அணைக்கப்பட்டிருந்தது.

(தொடரும்)

I. எங்கள் வீட்டிற்கு ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என மொத்தம் 20 பேர் வந்திருந்தனர். எங்கள் வீட்டிலிருந்த 20 தோசைகளை ஆண்களுக்கு 3ம், பெண்களுக்கு 2ம், குழந்தைகளுக்கு 1/2 தோசையுமாக அனைவருக்கும் பரிமாறினார்கள். அப்படியென்றால் எங்கள் வீட்டுக்கு வந்தவர்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எத்தனை பேர்?

- பெ.நடராசன், பத்தாம் வகுப்பு, ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை.

II. கடிகாரம், ஒரு நாளுக்கு 15 நிமிடங்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் பகல் 12 மணிக்குச் சரியான நேரத்திற்குக் கடிகாரம் திருப்பி வைக்கப்பட்டது. மறு நாள் காலை 4 மணிக்கு, கடிகாரம் என்ன நேரம் காட்டும்?

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

III. J மாடல் மாஜிக் (1-13) எப்படி கூட்டினாலும் 29 வரும்.

1	3	9	4	12
		2		
8		5		
11		7		
10	13	6		

- எஸ்.ஜெகதீஷ், பதினோராம் வகுப்பு, ஸ்ரீஆனந்த் ஜெயின் வித்யாலயா, சென்னை.

IV. பாலு, வேலு, விமலா, கமலா, ராதா ஐந்து பேரும் கூட்டாக உண்டியலில் காசு சேர்த்து வைத்திருந்தனர். ஒரு நாள் உண்டியலை உடைத்தனர். உண்டியலில் 1 ரூபாய், 50 பைசா, 25 பைசா, 20 பைசா மற்றும் 10 பைசா நாணயங்கள் இருந்தன.

பாலு 1 ரூபாய் நாணயங்களையும்; வேலு 50 பைசா நாணயங்களையும், விமலா 25 பைசா நாணயங்களையும்; கமலா 20 பைசா நாணயங்களையும்; ராதா 10 பைசா நாணயங்களையும் எண்ணினார்கள். அதில் 1 ரூபாய்; 50 பைசா; 25 பைசா; 20 பைசா; 10 பைசா நாணயங்கள் 1:2:4:5:10 என்ற விகிதத்தில் இருந்தன. அவரவர் எண்ணிய நாணயங்களை அவரவரே வைத்துக் கொண்டனர். 1 ரூபாய் நாணயங்களை எண்ணிய பாலுவுக்கு ரூ.100 கிடைத்தது. மற்ற நான்கு பேருக்கும் எவ்வளவு ரூபாய் கிடைத்திருக்கும்?

- ஒளவை ஏ.எஸ்.யோகானந்தம், கோபி.

V. தேசிய கீதப் புதிர்

கீழே உள்ள கட்டங்களில் நான்கு நாடுகள் ஒளிந்திருக்கின்றன. அவற்றின் தேசிய கீதங்கள் பற்றிய குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அந்த நாடுகளைக் கண்டுபிடியுங்கள்.

1. உலகிலேயே மிகவும் நீளமான தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது? (128 வரிகள் உடையது)



புதிர் உலகம்

2. உலகிலேயே மிகவும் சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது? (4 வரிகள் உடையது)

கி	ஸ்	ஆ	பா	ப்
தி	ரே	வெ	ன்	ஜ
ரே	லி	க்	ப்	ம்
ர்	ட்	யா	க	கே

3. இரண்டு தேசிய கீதங்களைக் கொண்ட நாடு எது?

4. ஒரே தேசிய கீதத்தை இரண்டு நாடுகள் கொண்டுள்ளன. ஒரு நாடு கினியா. மற்றொரு நாடு எது?

- க. தமிழ்ப்பொழில், திருவாரூர்

விடை 64-ஆம் பக்கம்

தாவர வகைகளில் அதிகமான வணிக மதிப்பு பெற்றது ஏலக்காய் தான். உலர்ந்த விதைகள் கொண்ட உலர்கனியைத்தான் நாம் ஏலக்காய் என்று அழைக்கிறோம். ஏலத்தின் தாயகம் தென்னிந்தியா. உலகிலேயே அதிகமாக ஏலத்தை உற்பத்தி செய்வதும் இந்தியாதான்! ஏலம் தென்னிந்தியாவின் பூர்வீக விளைபொருளாக இருந்தாலும், இலங்கை, ஜாவாவிலும் சிறிதளவு விளை கிறது.

பொதுவாக ஏலக்காய் சோட்டா ஏலக்காய் (குட்டி ஏலக்காய்), ஏலம் மற்றும் பெரிய ஏலம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. உலகின் முக்கிய இனங்களுள் ஒன்று என்ப தைத் தவிர பெரிய ஏலத்திற்கு அவ்வளவு முக்கி யத்துவம் இல்லை. 'சோட்டா ஏலக்காய்' என நாம் பயன்படுத்தும் ஏலம்தான் நறுமணப் பொருள் களின் ராஜா என்று அழைக்கப்படுகிறது. இந்தி யாவின் இரண்டாவது தேசிய மசாலாப் பொருள் ஏலமே! நம் நாட்டிற்கு அதிக அளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவதும் ஏலம்தான். வருடம்தோறும் ரூ.50 கோடி வரை அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது ஏலம்!

ஏலம் மணத்தில் மட்டும் உயர்ந்தது அல்ல; தான் வளரும் சூழலிலும் சிறப்பமைப்பு பெற்றதே. அதற்குத் தேவையான வளங்களில் ஒன்று குறைந்தாலும் விளைச்சல் இராது; ராஜபோகமான வாழ்க்கைதான் ஏலத்துக்கு! ஏலம் வளர நிலம் கடல் மட்டத்திலிருந்து 2500–5000 அடி உய ரத்தில் அமைந்து வருடத்திற்கு 100 அங்கு லத்திற்குக் குறையாத மழை பெற வேண்டும். ஆண்டு முழுவதும் நிழல் தரும் பசுஞ் சோலையும், காற்று அதிகமில்லாத மலைச் சாரலும், நிலத்தின் ஈரப்பதத்தைத் தக்கவைக்க உதிர்ந்த சருகுகள் நிறைந்த நிலமும் இதன் தேவைகள்.

அசல் ஏலத்தைப் போலவே போலி ஏலங்களும் உண்டு. ஜாவாவில் உள்ளது உருண்டையானது; இதன் பெயர் 'அரோமம் காபலேஜ்'; இதன் காய் பெரிது; நிறம் சிவப்பு; விதை ஏல வாசனை உடையது. 'கோரீமா' என்னும் கர்ப்பூர மணமுள்ள



வங்க நாட்டு ஏலத்தின், காய்கள் முள்ளுள்ள தாய் இருக்கும். எல்லா ஏலங்களையும் விட உலகத் தரத்திலும், விலையிலும் உயர்ந்தது இந்திய ஏலம் மட்டுமே! உலகச் சந்தையில் 90–95% இந்திய ஏலம்தான் வலம் வருகிறது. நார்வே, ஜெர்மனி, ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடு களுக்கு ஏலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தி யாவில் விளையும் ஏலத்தில் 62% கேரளத்தில் மட்டுமே விளைகிறது.

ஏலம், வாழை, இஞ்சி, மஞ்சள் மற்றும் சித் தரத்தை அனைத்தும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வையே! இதன் உட்குடும்பத்தின் பெயரே இஞ்சிப் பெயரை ஒட்டிய 'ஜிஞ்ஜிபெரேசியே'தான். இதற்குத் தரைகீழ் தண்டு உண்டு; இதனைக் 'கிழங்கு' என்பார்கள். இதன் இலைகள் கத்திபோல் நீண்டி ருக்கும்; ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கடுக்காக இருக்கும். தட்டையிலிருந்து பக்கவாட்டில் நீண்ட அழகான 'கலப்பு பூங்கொத்து' உருவாகும். செடி யின் அடிப்பாகத்தில் பூ மலர்வது என்பது ஏலத்தின் சிறப்புக் குணமாகும். ஒரு



ஏலம்... ஏலம்...

கொத்திலேயே பல சிறு சிறு கொத்துகள் உண்டு; ஒவ்வொரு கொத்திலும் 10 – 20 பூக்கள் இருக்கும். ஒரு பூவிலுள்ள ஆறு கேசரங்களில் ஒன்று மட்டுமே மகரந்த சேர்க்கைக் குட்பட்டுக் காயாகும் தன்மை யுடையது. மற்ற ஐந்து கேசரங்களில் இரண்டு ஒடுங்கியும், மற்ற மூன்றும் இணைந்து பூ விதழ்கள் போல் விரிந்து அழகாக வெள்ளை நிறத்துடன் மனதைக் கவரும் விதத்தில் இருக்கும். காய்கள் முப்பட்டை உருவுடன் உருண்டயாகவோ, நீளமாகவோ இருக் கும்; பழங்கள் கருஞ்சிவப்பு, பழுப்பு, நிறத்தில் காணப்படும். இதன் தோல் காகிதம் போல் மெலி தானது. ஒவ்வொரு பழத்திலும் மூன்றறைகளும், அதற்குள் கருமையான 10 – 15 விதைகளும் உண்டு. விதைகள் இனிய மணத்துடனும் லேசான காரத்துடனும், அருமையான சுவை யுடனும் இருக்கும்.

ஏலம், விதைகளின் மூலம் பெறப்பட்ட நாற்று கள்; பழைய ஏலக் கிழங்கிலிருந்து துண்டித்து நடுவது என இரு வகைகளில் பயிரிடப்படுவ துண்டு. நாற்று நட்டாலும், கிழங்கு நட்டாலும் நட்ட மூன்றாவது ஆண்டிலிருந்து பயன்தரத் துவங்கும். முதல் காய்ப்பு 'கன்னிக்காய்' என்பதால் 'மகசூல்' குறைவாகவே இருக்கும். நட்ட 5வது ஆண்டுதான் முழுப் பயன் கிடைக் கும். ஏலம் 40 – 45 ஆண்டுகள் பலன் தரும் என்றாலும் கூட, முதல் 20 ஆண்டுகளுக்குப் பின் பலன் குன்ற ஆரம்பிக்கும். ஏலக்காயை ஆவணி முதல் பங்குனி வரை மாதா மாதம் பழம் பறிப்பார்கள். ஆண்டுக்கு 7, 8 தடவை அறுவடை செய்வர்.

பச்சைக் காய்களை வெடிக்காமல், மழைக் காலங்களில் கட்டடங்களுக்குள், கட்டி வைத்து அடுக்கிப் பதப்படுத்துவர். பதப்படுத்திய பின் தரம் பார்த்து பிரிப்பார்கள். நல்ல கிளிப் பச்சை நிறமும் உருண்டையாகவும் உள்ள ஏலம் நல்ல விலைக் குப் போகும். நிறம் நீக்கப்பட்ட ஏலத்திற்குக் கடல் கடந்து நல்ல கிராக்கி உண்டு. ஏலக்காயின் நிறம் பச்சையிலிருந்து பழுப்பு வரை உண்டு.

அரபு நாடுகளில் மதச் சடங்கின் போதும், சமூக விழாக்களிலும் 'காவா' என்னும் ஏலக்காய் காப்பி கொடுத்தால்தான், விழா நிறைவடைந்த தாகக் கருதுவார்கள். மேலும் பிர், லெமனேடு, வினிகர் மற்றும் சாஸ்கள் செய்யவும் ஏலம் பயன்படுத்தப்படுகின்றது.

ஏலம் இந்தியாவில் மருந்தாகவும் பயன்படு கிறது. ஏலம் நீர்க்கடுப்பு, வயிற்றுப் போக்கு, இதய வலியால் வியர்த்தல், அதிக வேலையால் அயர்ச்சி, மனவருத்தம் முதலியவற்றைக் கட்டுப் படுத்தும். தினமும் ஒரு தேக்கரண்டி தேனுடன், ஏலக்காயைக் கலந்து உண்டால் கண் பார்வை நன்கு தெரியும், நரம்பு சம்பந்தமான நோய்களும் குறையும்.

— மோகனா



இனிப்பு

'மக்கள் பணியே மகேசன் பணி' என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்த அன்னை தெரசா அவர்கள் ஒருமுறை விமானப் பயணம் மேற்கொண்டார். அந்த விமானத்தில் பயணம் செய்த சில மேல் நாட்டுக் குழந்தைகள் விமானத்தில் வழங்கப்பட்ட இனிப்புகளையும் உணவுப் பொருள்களையும் உண்ணாமல் அப்படியே வைத்து விட்டனர். விமானம் தரை இறங்கியது. எல்லாப் பயணிகளும் இறங்கினர். அன்னை தெரசா மட்டும் இருக்கையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அங்குள்ள பணிப்பெண், "அம்மா! தாங்கள் ஏன் இன்னும் இறங்கவில்லை?" என்று கேட்டார். அதற்கு அன்னை, "அம்மா, வீணாக்கப்பட்டிருக்கும் இனிப்புகளையும் உணவுப் பொருள்களையும் ஒரு பையில் போட்டு எனக்குத் தாருங்கள்" என்றார். பணிப்பெண்ணும் அப்படியே செய்தார். அன்னை தெரசா அந்த இனிப்புகளையும் உணவுப் பொருள்களையும் ஏழைக் குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்.

- மு. சு. முத்துலெட்சுமி,
பதினோராம் வகுப்பு, எஸ்.ஆர்.எம்.
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
செங்கோட்டை.

விருந்து!

சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் ஓர் ஊருக்குச் சென்றிருந்தார். அங்குள்ள பெரிய செல்வந்தர் தந்த அற்புதமான விருந்தினைப் புறக்கணித்து விட்டு ஏழைத் தொழுநோயாளி ஒருவர் வீட்டிற்குச் சென்று ரொட்டித் துண்டை ஆர்வத்துடன் உண்டார். இதைப் பற்றி வினவிய பொழுது, "அந்தச் செல்வந்தரின் உணவிற்குப் பின்னே அவர் சுரண்டிய ஏழைகளின் இரத்தம் என் கண்களுக்குத் தெரிந்தது. ஆனால் அந்த ஏழை தந்த உணவுக்குப் பின் நேர்மையான உழைப்பு உள்ளது" என்று கூறினார்.

- த. பரதன், திருவாரூர்.

முதல்தரம்

என்னைப் பின்பற்றாதீர்கள்!

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, ஒரு திருமண விழாவுக்குச் சென்றிருந்தார். உணவு நேரம். ஒருவர் கவிஞரை மிகவும் வற்



• காந்தி

புறுத்தி அழைத்துச் சென்று, இலையின் முன் உட்காரச் செய்து, அருகில் நின்று உபசரித்தார். கவிஞர் உணவில் சிலவற்றைத் தவிர்த்து சிலவற்றை மட்டுமே உண்டார். அருகில் நின்று உப

சரித்தவர், "சாப்பாடு நன்றாக இல்லையா?" என்று கேட்டார். அதற்குக் கவிஞர், "சாப்பாடு முதல்தரம்; நான் இரண்டாம்தரம்" என்றார். வீட்டில் முதலிலேயே சாப்பிட்டு விட்டேன். இப்பொழுது இரண்டாவது தடவையாக இங்கே சாப்பிடுகிறேன் என்பதைச் சுருக்கமாகவும், நகைச்சுவையோடும் குறிப்பிட்டார் கவிஞர்.

- ஆர். பிரசன்னா, காந்திகிராமம்.

பட்டம்!

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்த்

• தெரசா



• அழ.வள்ளியப்பா





• சரோஜினி நாயுடு



• உ.வே.சா.

தாத்தா உ.வே. சாமிநாதய்யருக்கு டாக்டர் ஆஃப் லிட்டரேச்சர் என்ற கௌரவப் பட்டத்தை வழங்கி தன்னைச் சிறப்பித்துக் கொண்டது. உ.வே.சா. அவர்கள் வேடிக்கையாக, "எனக்கு வைத்தியம் தெரியுமா? எனக்குப் போய் டாக்டர் பட்டம் தருகிறார்களே? எனக்கு இது எதற்கு?" என்று சிரித்துக் கொண்டே தம் மாணாக்கர் கி.வா.ஜ. அவர்களிடம் சொன்னார்.

தன் குருவிற்குப் பட்டம் கிடைத்ததால் பெருமகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த அவர், ''வைத்தியர் என்பவர் குறைகளை நீக்கிச் சரி செய்பவர்தானே? காலும், புள்ளியும், கொம்பும் இழந்த எத்தனை எழுத்துகளைக் கஷ்டப்பட்டு சரிப்படுத்தி பாடல்களை நேராக்கி இருக்கிறீர்கள். அதை வைத்துத்தான் டாக்டர் பட்டம் கொடுத்து இருக்கிறார்கள்'' என நயம்படச் சொன்னதும் உ.வே.சா. மிகவும் ரசித்துச் சிரித்தார்.

- கே. சுதர்ஷன்,
தூத்துக்குடி.

கொள்கை

ஒரு கிராமத்திற்கு காந்திஜி விஜயம் செய்தபோது அவருடன் கவிக்குயில் சரோஜினி தேவியாரும் உடனிருந்தார். காந்திஜி வழக்கமாகப் பருகும் வெள்ளாட்டுப் பாலும் பச்சை வேர்க்கடலையையும் தேடித் தொண்டர்கள் அந்தக் கிராமத்தில் அலைந்து திரிந்த போது அவர்களுக்கு அவை கிடைக்கவேயில்லை. அந்தக் கிராமத்தில் துரதிருஷ்டவசமாக வறட்சி ஆட்சி செய்து வந்திருந்ததால் அங்கு விளைச்சல் ஏதுமில்லை. ஆனாலும் காந்திஜியின் உணவுக்குக் குறைவைக்க விரும்பாத தொண்டர்கள் அடுத்துள்ள கிராமங்களுக்குச் சென்று வெள்ளாட்டுப் பாலையும், வேர்க்கடலையையும் கொண்டு வந்தார்கள். அதற்கோ ஏகப்பட்ட செலவாகி விட்டது. இதனை அறிந்த சரோஜினி, "காந்திஜி, நீங்கள் எளிய பழக்கத்தைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் அந்த எளிய பழக்கத்தின் இன்றைய விலை நீங்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று" என்று கிண்டலாகச் சொன்னார். உடனே தன்னிலை உணர்ந்த தேசத் தந்தை "என் கொள்கையைப் பின்பற்றுங்கள். ஆனால் என்னைப் பின்பற்றாதீர்கள்'' என்று அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

- ஆர். அஜிதா,
கம்பம்.

ராமன் ஏழை நெசவாளி. வீட்டில் துணிகளை நெய்து பக்கத்துக் கிராமத்தில் நடை பெறும் வாரச் சந்தைக்குச் சென்று விற்று வருவான். அவனுக்கு ஒரு மகன் மட்டுமே இருந்தான்.

ராமனின் மகன் பொன்னுச்சாமி பள்ளிக்கூடத்துக்கே போக மாட்டான். உண்மையைச் சொல்வதானால் படுமக்கான அவனுக்குப் பாடம் சொல்லித் தர எந்த ஆசிரியரும் தயாராக இல்லை. மற்றவர்கள் சொல்லும் சொல்லின் உட்பொருளை அறியாமல் அப்படியே செய்து அந்தக் கிராமத்திலே கேலிக்கு உரியவனாக இருந்தான்.

ராமன் தன் மகனைத் திருத்த எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டான். அவன் திருந்துவதாக இல்லை.

ஒரு நாள் ராமனுக்கு உடல் நிலை சரியில்லை. அந்த வாரம் நெய்த துணிகளைச் சந்தையில் கொண்டு போய் விற்க வேண்டும். அவன் பொன்னுச்சாமியிடம், ''டேய், சந்தைக்குப் போய் துணியை வித்துட்டு வர்றியா?'' என்று கேட்டான்.




வாரா வாரம் அப்பாவோடு பொன்னுச்சாமியும் போவான். சந்தையின் கலகலப்பான சூழ்நிலையும் அங்கு கிடைக்கும் தின்பண்டங்களும் பொன்னுச்சாமிக்கு மிகவும் பிடிக்கும். எனவே அவனும் ‘சரி’ என்று தலையை ஆட்டினான்.

துணிகளை எடுத்துக் கொண்டு பொன்னுச்சாமி கிளம்பினான். துண்டு, வேட்டி ஆகியவற்றின் விலையைப் பொன்னுச்சாமி கேட்க, வாரா வாரம் நம்மோடு வருபவன்தானே விலை தெரிஞ்சிருக்கும் என்று நினைத்த ராமன், ''எட்டணா முன்னே பின்னே இருந்தாலும் குடுத்துடு'' என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

சந்தைக்குப் போன பொன்னுச்சாமி வழக்கமாக அவன் அப்பா உட்காரும் இடத்தில் கடை விரித்தான். வாடிக்கையாளர்கள் வேட்டி, துண்டு, சேலைகளை விலை கேட்ட போது, “எட்டணா முன்னே பின்னே இருந்தாலும் குடுத்துடறேங்க” என்று சொன்னான்.

கிளிப்பிள்ளை போல சொன்னதையே அவன் திருப்பித் திருப்பிச் சொன்னதைக் கேட்ட வாடிக்கையாளர்கள் “இவன்



சந்தைக்குப் போன பொன்னுச்சாமி!

பைத்தியம் போலிருக்கு. இவனிடம் துணி வாங்கினால் மீதிப் பணத்தை ஒழுங்காகத் தர மாட்டான். நமக்கெதுக்கு வம்பு?" என்று வாங்காமலேயே போய் விட்டார்கள்.

சந்தை முடியும் நேரம் வந்தது. வெகு நேரமாகப் பொன்னுச்சாமியைக் கவனித்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு அவன் மிகப் பெரிய முட்டாள் என்பது தெளிவாகியது. பொன்னுச்சாமியிடம் வந்து அவன் வைத்திருந்த எல்லா துணிகளையும் கையிலெடுத்து "என்ன விலை?" என்று கேட்டான்.

"எட்டணா முன்னே பின்னே இருந்தாலும் குடுத்துடுவேன்" என்று வழக்கமான பல்லவியைப் பாடினான் பொன்னுச்சாமி.

அந்த மனிதன் பொன்னுச்சாமிக்கு இடப்புறம் உட்கார்ந்து கொண்டான். இரண்டு உள்ளங்கையிலும் எட்டணாவை வைத்து, பொன்னுச்சாமிக்குக் காட்டினான். இடதுகையை அவன் முகத்துக்கு நேராகவும் வலது கையை முதுகுப் பக்கமும் வைத்துக் கொண்டான். "உனக்கு முன் பக்கம் எவ்வளவு இருக்கு?" என்றான் அவன்.

"எட்டணா" என்றான் பொன்னுச்சாமி.

"பின்பக்கம் எவ்வளவு இருக்கு?"

"எட்டணா."

"உனக்கு முன்னே, பின்னே எட்டணா

இருக்கா?"

"ஆமாம்" என்று பொன்னுச்சாமி சொன்னதும் இரண்டு நாணயங்களையும் பொன்னுச்சாமியிடம் கொடுத்து விட்டு அவ்வளவு துணியையும் எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

பொன்னுச்சாமி அவன் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அது மழைக்காலம். ஆதலால் இருபுறமும் வயல்களில் தண்ணீர் தேங்கியிருந்தது. லேசாக இருட்ட ஆரம்பித்த படியால் தவளைகள், "வரட், வரட்" என கத்திக் கொண்டிருந்தன. பொன்னுச்சாமி ஒரு விநாடி நின்று கவனித்தான். தவளைகள் வரவு எட்டு, வரவு எட்டு என்று சொல்வது போல் அவனுக்குக் கேட்டது.

"அட முட்டாள் தவளைகளே! இரண்டு எட்டணாக்கள் சேர்ந்தால் ஒரு ரூபாய்தானே. நான் என்ன ஒரு எட்டணாவா வைத்திருக்கிறேன். கணக்குத் தெரியாத கழுதைகளே" என்று திட்டினான்.

தவளைகளும் மறுபடியும், 'வரட், வரட்' என்று கத்தின.

"என்னிடம் ஒரு ரூபாய்தான் இருக்கிறது. எட்டு என்று சொல்கிறீர்களே. உங்களுக்குக் கணக்குத் தெரியுமா? இதோ எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று காசினை வயலுக்குள் வீசினான்.

தவளைகள் கத்துவது மாறவில்லை. இருட்டில் போட்ட காசைத் தேடிப் பார்த்தான் பொன்னுச்சாமி. சகதியில் விழுந்த காசு கையில் தட்டுப்படவில்லை.

தவளைகளைத் திட்டியபடியே வெறும் கையுடன் வீடு வந்து சேர்ந்தான் பொன்னுச்சாமி.

அவனைப் பார்த்த ராமனுக்கு வியப்பும் மகிழ்ச்சியும் உண்டானது.

'நான் போனாக்கூட எப்படியும் இரண்டு மூன்று துணி விக்காமல் திருப்பிக் கொண்டு வருவேன். இன்னைக்கு என் பிள்ளை எல்லாவற்றையும் விற்று விட்டானே' என்று மனம் மகிழ்ந்தான். வீட்டிற்குள் வந்த பொன்னுச்சாமியிடம், "எவ்வளவு பணம்டா கொண்டு வந்திருக்கே?" என்று கேட்டான்.

நடந்த விவரத்தைப் பொன்னுச்சாமி சொல்ல கோபத்தோடு, "அட முட்டாளே" என்று அடிக்கப் போனான் ராமன். உள்ளே இருந்து ஓடிவந்த அவன் மனைவி, "நீங்க விலையை ஒழுங்கா சொல்லியிருந்தா அவன் ஒழுங்கா வித்துருப்பான். தப்பை உங்க மேல் வச்சிக்கிட்டுப் பிள்ளையை ஏன் அடிக்கிறீங்க?" என்று கணவனைக் கோபித்தாள்.

"ஆமாம். இவனை சந்தைக்கு அனுப்பிய நான்தான் முட்டாள்" என்று தலையில் அடித்துக் கொண்டான் ராமன்.

— எஸ். துர்கா காத்யாயனி,
பதினோராம் வகுப்பு, புனித
அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி.,
தூத்துக்குடி.

புதிர் உலகம் விடைகள்

I.

ஆண்கள்	1	x	3	=	3
பெண்கள்	5	x	2	=	10
குழந்தைகள்	14	x	½	=	7
	20 பேர்				20 தோசை

II. 4 மணி 10 நிமிடங்கள்

IV. மற்ற நால்வருக்கும் ஆளுக்கு ரூ.100 கிடைத்தது.

1ரூ	50 பை	25 பை	20 பை	10 பை
1 :	2 :	4 :	5 :	10

1 ரூபாய் நாணயங்கள் 100. அப்படியானால் 50 பைசா நாணயங்கள் 200. 25 பைசா நாணயங்கள் 400. 20 பைசா நாணயங்கள் 500. 10 பைசா நாணயங்கள் 1000.

V. 1. கிரேக்கம் 2. ஜப்பான் 3. ஆஸ்திரேலியா 4. கேப்வெர்ட்

அறிவுச் சுடர்களும் அணில் பணிகளும்!



கதைகதையாம், காரணமாம்...

அணிலுக்கு முதுகில் மூன்று கோடுகள் உருவானது எப்படி? அதற்கு ஒரு கதை உண்டு. இலங்கையை அடைய கடல் மீது ராமர் பாலம் அமைத்தபோது, வானரங்கள் பலவும் உதவி செய்தன. ஒரு அணிலும் உதவ முன் வந்தது. கடல் நீரில் நனைந்து, மணலில் புரண்டு, ஓடிப்போய், உருவாகி வரும் பாலத்தின் மீது மணலைச் சிலிர்த்து உதிர்த்தது. ராமர் அந்த அணில் பணியையும் ஏற்றுக் கொண்டார். அன்புடன் அதனைக் கையில் எடுத்து முதுகில் மூன்று விரல்களால் தடவிக் கொடுத்தார். மூன்று வரிகள் அழகாகப் பதிந்தன. அந்த வரிகள் அனைத்து அணில்களிடமும் இன்றும் காணப்படுகின்றன... இப்போது எதற்கு இந்தக் கதை?


மே மாத இறுதியில் பத்திரிகைகளில் முதல் ரேங்க் மாணவர்கள் பற்றிய செய்திகள் நிறைய வரும். பள்ளியில் முதல் மார்க்; நகரத்தில் முதல் ரேங்க்; மாநிலத்திலேயே முதல் மாணவன் என்றெல்லாம் புகைப்படங்களுடன் சாதனையாளர்கள் அறிமுகப்படுத்தப் படுவார்கள். பிரமாத மார்க் வாங்கிய ஒரு சில மாணவ மாணவியருக்கு அரசும் வேறு அமைப்புகளும் பரிசுகள் வழங்கும். நாலைந்து நாட்கள் இந்தப் பரபரப்பு நீடிக்கும். அப்புறம் அடங்கி விடும்.

சற்று யோசித்தால், முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவருக்கு மற்றவர்கள் குறைந்து போய்விடவில்லை என்பது புரியும். படிப்பில் இவர்கள் சிறிது பின் தங்கியிருக்கலாம். ஆனால் இவர்களிடம் வேறு சில ஆற்றல்கள் இருக்கும். அந்த ஆற்றல்களை முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களிடம் காண முடியாது. அவற்றை இனம் கண்டு, அவர்களுக்கு ஊக்கமளிக்கும் அளவில் இந்தச் சமுதாயம் இன்னும் முன்னேறவில்லை.

எல்லாரும் எம்.பி.பி.எஸ் பட்டம் வாங்க முடிந்தால் யாருக்கு அவர்கள் வைத்தியம் பார்ப்பார்கள்? எல்லோருமே எம்.பிஏ. படித்துத் தேர்ச்சி பெற்றால் யாரை அவர்கள் நிர்வகித்து வேலை வாங்குவார்கள்? சமுதாயத்துக்கு ஒரு சிவில் இன்ஜினியர் – காண்ட்ராக்டர் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு ஒரு கொத்தனாரும் அவருக்குக் கீழே வேலை செய்யும் சித்தாட்களும் அவசியம். விவசாயி, மொத்த கொள்முதல் வியாபாரி, மளிகைக் கடைக்காரர் என்று முத்தரப்பும் சேர்ந்து பணியாற்றும்போதுதான் மக்கள் பசி தீரும். இந்த ஒத்துழைப்பால்தான் சமுதாயம் வளம் பெறுகிறது.

இதைப் புரிந்து கொள்ளாமல் குறைந்த மார்க் வாங்கிய சில மாணவ மாணவியர் தற்கொலை கூட செய்து கொள்ளத் துணிவதைப் பார்க்க அதிர்ச்சியாக இருக்கிறது. அந்த அளவுக்குப் போகாவிட்டாலும் பலர் மனச் சோர்வினால் பீடிக்கப்படுகிறார்கள். இதை அடியோடு தவிர்த்து விடுங்கள். நமக்கு எந்தத் துறையில் திறமை உள்ளது, எதில் ஆர்வம் இருக்கிறது என்பதை எடை போட்டுப் பார்த்துத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். அந்தத் துறையில் முன்னேற தீவிர முயற்சி மேற்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

– ஆசிரியர்



ஆளப்பிறந்தவனை மறக்க முடியாது!

✉ ஆளப்பிறந்தவன் நீண்ட காலம் எங்களுடன் நட்புறவாடிக் கொண்டிருந்தான். கதை முடிந்ததும் என்னவோ போல் இருந்தது. ஜெயசிம்மன், சோமு, லைலா, வீரசிம்மன், பிரபாகரன் பாத்திரங்களை மறக்க முடியாது.

- ஹெச். ஜான்சி, என்.ஜோசப்,
துறையூர், திருச்சி

✉ ஆளப்பிறந்தவன் படக்கதையில் எங்களால் மிகவும் ஒன்றிப் போக முடிந்தது. காரணம் ஜெயசிம்மன், சோமு, லைலா, குப்பன் எல்லாம் எங்கள் வயதை ஒத்தவர்களாக இருந்ததுதான். ஆரம்பம் முதல் கடைசி வரை விறுவிறுப்பாக இருந்தது.

-ஜி. நடேசன், திருவொற்றியூர்,
சென்னை

✉ கைலாயத்துக்குக் கடிதம் அனுப்பிய மாயனை இரவோடு இரவாக வெளியூருக்கு அனுப்பிய வியாபாரிக்கு சபாஷ்! 'ஜில்' விளையாட்டு அனல் பறக்கும் கோடையில் ஜில்லென்றிருந்தது.

- இரா. விக்னிஷா, இடையர்காடு

✉ கருமிகள் பற்றி நிறைய கதைகள் வந்திருந்தாலும் 'விரதம் இருந்த கருமிகள்' கதை அருமையாக இருந்தது. சிறுவர்களுக்குப் பல பத்திரிகைகள் வந்தாலும் கோகுலம் போல் ஓவியப் போட்டி, கதைப் போட்டிகளை நடத்தி எங்களின் திறமைகளை யாரும் வெளிக் கொண்டு வருவதில்லை.

- கே.அருண்குமார்,
எட்டாம் வகுப்பு,
ஜெமீந்தார்
மேல்நிலைப் பள்ளி,
– துறையூர்.

✉ உலகமே உலகக் கோப்பை கால் பந்தாட்டத்தை எதிர்பார்த்திருக்க, கோகுலத்தில் அதைப் பற்றிய செய்திகளை அறிய விரும்பினேன். என் விருப்பத்திற்கு ஏற்றவாறே வண்ணப் படங்களுடன் செய்திகளை அளித்திருந்தீர்கள். சின்ன ஆசை கதையைப் படித்துச் சட்டென சிரித்து விட்டேன்.

- வி. பாஸ்கர், பத்தாம் வகுப்பு,
உடுமலைப் பேட்டை, கோவை

✉ புன்சிரிப்போடு, பொம்மைகளைத் தூக்கி வைத்திருக்கும் குழந்தைக்குத் திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். பின் அட்டை பாண்டாவும் கொள்ளை அழகு. வீரம் வேண்டும்; விவேகமும் வேண்டும் என்ற கிருஷ்ணரின் கதை நல்ல கருத்தை வலியுறுத்தியது.

- ஆர். திலகா, ஒன்பதாம் வகுப்பு,
பெண்கள் மே.நி.பள்ளி, திண்டிவனம்

ஓவியப் போட்டி

சேவல், கோழி, குஞ்சுகளுடன் நடந்து செல்வதைப் பார்த்திருப்பீர்கள். இவைதான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. சேவல், கோழி நடக்கலாம், சாப்பிடலாம், சண்டை போடலாம். இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறக்காமல் குறிப்பிடுங்கள்!

கடைசி தேதி : 5.07.2002

விறுவிறுப்பான ஆட்டங்கள்!

பதினேழாவது உலகக் கோப்பை கால் பந்து போட்டி தென் கொரியத் தலைநகர் சியோலில் மே 31ந் தேதி ஆரவாரத்துடன் தொடங்கியது.

தென் கொரிய அதிபரும் ஜப்பான் பிரதமரும் இணைந்து போட்டியைத் துவக்கி வைத்தனர்.

21ஆம் நூற்றாண்டின் முதல் போட்டி என்பதால் உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான ரசிகர்கள் விழாவில் பங்கேற்றனர். தொடக்க விழாவுக்கு ஆன செலவு மட்டும் 40 கோடி ரூபாய். 32 நாடுகள் உலகக் கோப்பையில் பங்கேற்கின்றன.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் இரண்டு ஆட்டங்கள் மறக்க முடியாதவை.



* செனகல் வீரர்களை அதிர்ச்சியுடன் பார்க்கும் ஃபிரான்ஸ் வீரர்கள்


துவக்க நாள் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ஃபிரான்ஸும் ஆப்பிரிக்க நாடான செனகலும் மோதின. முதன் முதலாக உலகக் கோப்பையில் பிரதான சுற்றுக்குத் தகுதி பெற்ற செனகல் ஆட்டம் துவங்கிய 30வது நிமிடத்தில் ஒரு கோல் போட்டது. அரங்கில் அமர்ந்திருந்த 62,561 ரசிகர்களும் எழுந்து நின்று கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

ஃபிரான்ஸ் அணியினர் முதல் பாதி ஆட்டத்தில் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த மிகவும் சிரமப்பட்டனர். இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஃபிரான்ஸ் எவ்வளவோ முயற்சி செய்தும் கோல் போட இயலவில்லை. இறுதியில் செனகல் 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

உலகக் கோப்பையின் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் தோற்பது 12 ஆண்டுகளுக்குப் பின் இதுவே முதல் முறையாகும். 1990ஆம் ஆண்டு இத்தாலியில் நடந்த முதல் ஆட்டத்தில் அப்போதைய சாம்பியன் அர்ஜென்டினாவை கேமரூன் 0 - 1 என்ற கோல் கணக்கில் வென்றது.

அதேபோல் அமெரிக்கா - போர்ச்சுகல் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியும் மிகவும் விறுவிறுப்பானது. முதலில் குறிப்பிட்ட நேரத்துக்குள் 2 கோல்களைப் போட்டு ஆச்சரியத்தில் ஆழ்த்தியது அமெரிக்கா. பரபரப்பான ஆட்டத்தின் முடிவில் 3 : 2 என்ற கோல் கணக்கில் போர்ச்சுகலை வென்றது அமெரிக்கா.

இனி நடக்கப் போகிற பந்தயங்களிலும் விறுவிறுப்பு, ஆச்சரியங்களுக்குப் பஞ்சமிருக்காது. இறுதியில் வெல்லப் போவது எந்த அணி என்று யாராலும் கணிக்க இயலாது. காத்திருப்போம்.



முதல் பரிசு

எஸ். அபிநயா,
எட்டாம் வகுப்பு
ஏ.வி.பி.இ.டி சின்மயா வித்யாலயா
மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை

ஓவியப் போட்டி முடிவுகள்

இரண்டாம் பரிசு

என்.சி. கிருஷ்ணகுமார்,
பழையபாளையம், இராஜபாளையம்



வாழையடி வாழை

ஜூன் இதழில் 'வாழை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து ஓவியங்கள் இங்கே...



மூன்றாம் பரிசு
ரா. ப்ரஷாந்த்,
ஐந்தாம் வகுப்பு, ஜவஹர் வித்யாலயா, சென்னை



ஆறுதல் பரிசு
பி. அரவிந்த்,
ஐந்தாம் வகுப்பு,
பாரதி வித்யா பவன், ஈரோடு

ஆறுதல் பரிசு
எஸ். ராகவேந்திரன்
ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி,
ஆர்.கே. பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம்





இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பில் ஒளியியல் (ஃபோட்டோ கிராஃபி) பாடத்தில் 600க்கு 591 மதிப்பெண் வாங்கி மாநிலத்திலேயே முதலாவதாக வந்தார் பி.எஸ். மனுஷ்நந்தன். பள்ளி அளவில் ஃபோட்டோகிராஃபி பாடத்திட்டம் இருப்பது பலருக்கும் ஆச்சரியமான விஷயம். பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் இந்த மாதிரி புதிய துறைகளில் கால் பதிக்க உதவும் வகையில் ஃபோட்டோகிராஃபி பாடத்தைப் பற்றி மனுஷிடம் கேட்டோம்.

? பள்ளி அளவில் பொதுவாக அதிகம் கேள்விப்படாத துறையாக இருக்கிறதே. அதைப் பற்றிச் சொல்லுங்கள்.

நிறையப் பேருக்கு இந்த மாதிரி ஒரு கோர்ஸ் இருப்பதே தெரியவில்லை என்பது உண்மைதான். தமிழ்நாட்டிலேயே சூளைமேட்டில் இருக்கும் எங்கள் மாநகராட்சி பள்ளியில் மட்டும்தான் இந்த கோர்ஸ் இருக்கிறது.

1979ஆம் ஆண்டு தொழில் சார்ந்த கோர்ஸ்கள் ஆரம்பிக்கப்பட்டபோது இதுவும் ஆரம்பிக்கப்பட்டது. 22 ஆண்டுகள் ஆகியும் இந்த கோர்ஸ் அதிகம் பிரபலமடையவில்லை.

தமிழ், ஆங்கிலம், இயற்பியல், ஃபோட்டோகிராஃபி என நான்கே பாடங்கள்தான் உண்டு. ஃபோட்டோகிராஃபிக்கு மட்டும் 600 மார்க்ஸ்.

? இந்த கோர்ஸில் சேர மதிப்பெண், பணம் அதிகம் வேண்டுமா?

இரண்டுமே இல்லை. ஃபோட்டோகிராஃபியில் ஆர்வம் இருக்க வேண்டும். ஓராண்டுக்கு 25 மாணவர்கள் வரை சேர்க்கலாம். ஆனால் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள்தான் ஒவ்வொரு ஆண்டும் சேர்கின்றனர். நான் படிக்கும்போது மொத்தம் 12 மாணவர்கள்தான் இருந்தோம். எனவே அதிகபட்ச மதிப்பெண்களை நிர்ணயித்து இதில் சேர்த்துக்கொள்வதில்லை.

? பள்ளியில் இந்தப் பாடத்துக்கான வசதிகள் உள்ளனவா?

ஒரு காமிரா மற்றும் பிராசஸிங் அறை இருக்கிறது. மற்றபடி ஃபிலிம் ரோல், டெவலப்பிங் போன்றவற்றிற்கு அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி கிடைக்காததால் மாணவர்களே அந்தச் செலவுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும்.

? கோச்சிங் எப்படி?

கோச்சிங் பொறுத்தவரை ரொம்ப நன்றாக இருக்கும். அதிலும் எங்கள் ஆசிரியர் கே. ரவிச்சந்திரன் ஆர்வத்துடன் சொல்லிக் கொடுப்பார். அனுபவ ரீதியான விஷயங்களை அவர் மூலமாகத்தான் கற்றுக் கொண்டோம். அவருடைய காமிராக்களைக் கொடுத்து ஏதாவது விழாக்களில் எங்களைச் சுயமாக ஃபோட்டோ எடுக்கச் சொல்லி, திறமையை வளர்த்தார்.



? இரண்டாண்டுகளில் ஃபோட்டோகிராஃபி பாடத்தில் என்னென்ன கற்றுக் கொள்கிறீர்கள்?

முதல் ஆண்டில் ஸ்டில் ஃபோட்டோகிராஃபியைப் பற்றி படித்தோம். இரண்டாம் ஆண்டில் எடிட்டிங், பிரிண்ட்டிங், சினிமேட்டோகிராஃபி ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தார்கள். பிராக்டிகலுக்கு 400 மதிப்பெண்களும் தியரிக்கு 200 மதிப்பெண்களும் வழங்கப்படும்.

? பரீட்சை எப்படி இருக்கும்?

பரீட்சையின்போது ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் இருந்து தேர்வாளர்கள் வருவார்கள். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பணியைச் செய்யச் சொல்வார்கள். பிறகு கேள்விகள் கேட்டு அதற்கு ஏற்றாற்போல் மதிப்

பெண்களை வழங்குவார்கள்.

தியரியில் காமிரா, அவற்றின் பாகங்கள், லைட்டிங் போன்றவற்றிலிருந்து கேள்விகள் வரும்.

? பள்ளிப் படிப்பு முடித்த பின் என்ன படிக்கலாம்?

பள்ளிப்படிப்பு முடித்த பின் D.F.Techல் (டிப்ளமோ இன் ஃபிலிம் டெக்னாலஜி) சேரலாம். ஒவ்வொரு ஆண்டும் 20 சதவீத மாணவர்களை எங்கள் பள்ளியில் இருந்து சேர்த்துக்கொள்கிறார்கள். அதில் சேர நிறையப் போட்டி இருக்கும். நுழைவுத் தேர்வும் உண்டு. இதை முடித்தால் பெரிய அளவில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

? D.F.Tech. ல் சேர முடியாதவர்கள் என்ன பண்ணலாம்?

எல்லோரும் D.F.Tech படிக்க வேண்டும் என்பதில்லை. பள்ளிப் படிப்பு முடித்த உடன் சம்பாதிக்கக்கூடிய ஒரே கோர்ஸ் ஃபோட்டோகிராஃபியாகத்தான் இருக்கும். சொந்தமாக காமிரா வைத்துக்கொண்டால் திருமணம் மற்றும் பொதுநிகழ்ச்சிகளில் ஃபோட்டோ எடுத்து சம்பாதிக்கலாம். எங்கள் சீனியர் மாணவர்கள் லேப், ஸ்டுடியோ வைத்திருக்கிறார்கள். நிறையப் பேர் சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் பணியாற்றுகிறார்கள். என்னுடன் படித்த அனைவரும் சம்பாதித்துக் கொண்டுதான் இருக்கிறோம். நல்ல காமிரா 10 ஆயிரம் ரூபாயில் கிடைக்கிறது. செகண்ட் ஹேண்டில் 5 ஆயிரம் ரூபாய்க்குக் கூட காமிரா வாங்கிக் கொள்ளலாம்.

? உங்கள் இலட்சியம்?

D.F.Tech. முடித்து சினிமேட்டோகிராஃபர் ஆவதுதான் என்னுடைய இலட்சியம். அதற்காகத்தான் மெட்ரிகுலேஷனில் பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு, தமிழ் வழிக் கல்வியாக இருந்த இந்த கோர்ஸில் சேர்ந்தேன். ஆரம்பத்தில் சற்றுச் சிரமப்பட்டாலும் இரண்டு மாதங்களில் கற்றுக்கொண்டேன்.


என்னுடன் படித்த மாணவர்கள் எல்லாம் சேர்ந்து சம்பாதித்து ஒரு புகைப்பட கண்காட்சி நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம். அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு எங்கள் பள்ளியில் புதிதாக சேரும் மாணவர்களுக்கு உதவ இருக்கிறோம்.

என்னுடைய ஆசை என்னவென்றால் நிறையப் பேர் இந்த கோர்ஸில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பதுதான். படிக்கும்போதே சம்பாதிக்கவும் முடிகிறது. எங்கள் கோர்ஸ் படிக்க ஜாலியாக இருக்கும். மற்ற கோர்ஸ் மாணவர்கள் எங்களைப் பார்த்துப் பொறாமைப்படுவார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஃபோட்டோகிராஃபியில் பெரிய ஆளாக வர வேண்டும் என்ற நினைப்போடு படித்து, அதற்கு ஏற்றவாறு உழைத்தால் நிச்சயம் சாதிக்க முடியும்.

அட்டையில்: **மனுஷ்நந்தன்**
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

• மனுஷ் எடுத்த படங்கள்...



ஜாலியான படிப்பு!


தங்கமா, உப்பா?
கதை : வி.ஆர்.கிருத்திகா, திருச்சி
படம் : மகேஸ்
தங்கபுரி நாட்டை ஆண்டு வந்தார் நாகவர்மன். ஒரு நாள்-
அரசி, நம் இரு மகள்களில் யாரை இந்நாட்டுக்கு அரசியாக்குவது?
ம்... தங்களையும் இந்நாட்டையும் யார் அதிகமாக மதிக்கிறார்களோ அவர்களுக்கே அரசி பட்டம்.
நீ சொல்வது சரிதான்.
சுவர்ணா, புவனா இங்கே வாருங்கள்.
இருவரும் வந்தனர்.
சுவர்ணா, என்னையும் நம் நாட்டையும் எப்படி மதிக்கிறாய்?
புவனா நீ?
தங்களையும் நம் நாட்டையும் உப்பைவிட உயர்வாக மதிக்கிறேன்.
உடனே அரசருக்குக் கோபம் வந்தது.
போயும், போயும் உப்புடனா என்னையும் என் நாட்டையும் ஒப்பிடுகிறாய்? வெளியே போ.
அரசே, சிறிது கருணை காட்டுங்கள்.
முடியாது.


புவனா அழுதபடியே ஒரு முனிவரின் குடிலை அடைந்தாள். எல்லாவற்றையும் கேட்ட முனிவர் -
நீ கவலைப்படாதே. தங்கத்தை விட உப்பின் மதிப்பு அதிகமாகும் போது நீ உன் தந்தையிடம் செல்லலாம்.
நன்றி ஐயா.
அரண்மனையில் -
அரசி, சுவர்ணா தங்க நகைகளை இப்படி வாங்கிக் குவித்திருக்கிறாளே!
அவளுக்கு நகைகள் மேல் ரொம்ப விருப்பம்.
அப்படியென்றால் அவள் என்னைவிட தங்கத்தைத் தான் அதிகம் நேசிக்கிறாள்.
வருந்தாதீர்கள். சுவர்ணாவின் திருமணம் நல்லபடியாக நடக்க வேண்டும்.
மறுவாரம். திருமணத்துக்கு வித விதமான பதார்த்தங்கள் தயாராயின.
இதை ஞான திருஷ்டியால் அறிந்த முனிவர்-
புவனா, என் தவ வலிமையைப் பயன்படுத்தி கல்யாணச் சாப்பாடு, வீடு, கடல்களில் உள்ள உப்பை மறையச் செய்கிறேன்.
அரண்மனையில்
அரசே! உணவில் உப்பே இல்லை. எங்கு தேடியும். ஒரு துளி உப்புக்கூட நம் நாட்டில் இல்லை.
இப்ப என்ன செய்வது? என் மானமே போகப் போகிறது.


அந்த நேரத்தில் முனிவருடன் மூட்டை நிறைய உப்போடு புவனா வந்தாள்.
வா, புவனா. எப்படி இருக்கே? உப்பின் அருமை எனக்கு இன்றுதான் புரிந்தது. தங்கம் ஏராளமாக இருந்தும் அதை வைத்து உப்பு வாங்க முடியவில்லை. தங்கத்தைவிட உப்பே உயர்ந்தது.
ஐயா, மீண்டும் உப்பை வரவழைத்து விடுங்கள்.
நொடியில் வந்து சேரும்.
புவனாவை அரசியாக்கினார் நாகவர்மன்.
ஐயா, தங்களுக்கு எப்படி நன்றி கூறுவது என்றே தெரியவில்லை. என்னை ஆசீர்வதியுங்கள்.

கோகுலம் நியூஸ்



டைனசார்

ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியின் மீது விண்கல் ஒன்று மோதியது. அதனால் தான் பூமியில் வாழ்ந்து வந்த டைனசார்கள் அழிந்து போய் விட்டதாக விஞ்ஞானிகள் தற்போது கூறியுள்ளனர். இவை அழிவதற்கு முன் பூமியில் பதிமூன்றரைக் கோடி ஆண்டுகள் வாழ்ந்திருக்கின்றன என்றும் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திரியாசிக் யுகத்தின் போது, ஒரு பெரிய விண்கல் பூமியின்மீது மோதியது. அதனால் பூமியில் இருந்த பல்வேறு வகைத் தாவரங்களும், முதலைக் குடும்பத்தைச் சேர்ந்த விலங்குகளும் அழிந்து போய்விட்டன. பின்னர் ஜூராஸிக் யுகம் தொடங்கியது. மற்றொரு விண்கல் மோதியதால் அந்த யுகமும் முடிவுக்கு வந்தது. அதன்பிறகு பூமியில் பாலூட்டியினம் உருவாக வழி பிறந்தது என்று கூறு கிறார்கள்.

சாதனை

இந்தியாவிலேயே முதன் முறையாக, பிறந்து பத்து நாட்களே ஆன குழந்தைக்கு இதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. அதிலும் நார்வுட் எனும் அறுவை சிகிச்சை உலகிலேயே மிகவும் அபூர்வமானது. இத்தகைய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்தவர்கள் போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மனை மருத்துவர்கள். இந்த அறுவை சிகிச்சை மூலம் குழந்தைக்குப் புதிதாக ரத்தக் குழாய் உருவாக்கப்பட்டது.

மக்கள் தொகை

ஜப்பானின் மக்கள் தொகை 12.9 கோடி ஆகும். அந்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. 2007ஆம் ஆண்டிலிருந்து மக்கள் தொகை எண்ணிக்கை மேலும் சுருங்கத் தொடங்கும். இதே நிலை நீடித்தால் ஜப்பானிய இனமே அழிந்து விடக்கூடிய ஆபத்து இருப்பதாக ஜப்பானிய அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நாய்கள் பெருக்கம்

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் மட்டும் ஒரு லட்சத்து இருபதாயிரம் தெரு நாய்கள் திரிகின்றன. அவற்றின் இனப் பெருக்கத்தை ஊசியின் மூலம் குறைக்கத் தாய்லாந்து அரசு முடிவு செய்துள்ளது. எனவே, நாய்களைப் பிடித்து மாநகராட்சியிடம் ஒப்படைத்தால் ஒரு நாய்க்கு ரூ.10/- சன்மானம் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

விடுதலை

400 ஆண்டுகளுக்கு மேலாக அடிமைப்பட்டுக் கிடந்த கிழக்குத் தைமூர் சுதந்திர மடைந்துவிட்டது.

பிஸ்கெட்

1953ஆம் ஆண்டு எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் ஏறினார் சிக்கிமைச் சேர்ந்த சோனம் ஜியாத்கோ. அவர் மலை ஏறுவதற்குமுன் பௌத்த துறவி சுஷாங் ரிம்போக் ஆசியைப் பெறும்போது ஒரு பிஸ்கெட் டின்னைக் கொடுத்தார். அந்த பிஸ்கெட் டின்னை அலமாரியில் வைத்து விட்டார் துறவி. 1970ஆம் ஆண்டு அவரது மகன் லகூங்பா டின்னைக் கண்டு பிடித்து அப்படியே வைத்து விட்டார். 49 ஆண்டுகளாகத் தாம் பாதுகாத்து வந்துள்ள பிஸ்கெட் டின்னை கோல் கத்தாவிலுள்ள அருங்காட்சியகத் திடம் ஒப்படைக்க இருக்கிறார் லகூங்பா. இந்த பிஸ்கெட்டைத் தயாரித்தது கோல்கத்தாவைச் சேர்ந்த கோலே நிறுவனம்.

ஆர். பொன்னம்மாள்

சத்யலோகம். இந்திராதி தேவர்கள் நான்முகனையும், கலைவாணியையும் தரிசனம் செய்து கொண்டிருந்தனர். நாரதர் தனது மகதி வீணையை மீட்டியபடி பாடிக் கொண்டே வந்தார். பிரம்மா எழுந்து வந்து நாரதரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.


அனைவரும் இது கண்டு திடுக்கிட்டனர். 'மகனை, தந்தை நிறைந்த சபையில் வணங்குவதா' என்று!

"உங்கள் புத்திரனுக்கு நீங்கள் தீங்கு விளைவித்திருந்தால் மன்னிப்புக் கேட்குமிடம் சபையல்ல. உங்களைப் பார்த்து எதிர்காலத்தில் எங்கள் குமாரர்கள் கெட்டு விடுவார்கள்" என்றார் பிரஜாபதி.

"பிரஜாபதி! நாரதனின் வீணை அருகே ஒரு கருவண்டு பறப்பதைப் பார். அந்த வண்டின் கால்களிலே சங்கு சக்கரம், கதாயுதம், தாமரை எல்லாம் இருப்பது தெரியவில்லையா? நான் வண்டு வடிவில் வந்த என் தந்தையான ஸ்ரீமந்நாராயணனையே நமஸ்கரித்தேன். மகனை அல்ல" என்று மெய்யுருகக் கூறினார் சதுர்முகன்.

நவபிரஜாபதிகளும் இதை ஏற்காமல் கேலி செய்தனர். அவர்களைப் பூலோகத்தில் போய் பிறக்குமாறு சபித்துவிட்டார் பிரம்மா. ஒன்பது பேரும் தங்களை மன்னித்து சாப விமோசனம் சொல்லும்படி பிரம்மனிடம் கெஞ்சினர்.

"தவம் செய்தால் பரந்தாமன் காட்சியளிப்பார்" என்றார் நான்முகன்.




"நாரத முனிவரே! பூலோகத்தில் தவம் செய்ய ஏற்ற இடம் எது?" என்று கேட்டனர்.

பிரம்மாவின் கர்வம்!

அவர் "நாராயணா" என்றபடி தன் மேலங்கியைக் சுழற்றி வீசினார். "அது விழுந்த இடமே தவம் செய்ய பொருத்தமான இடம்" என்றார் நாரதர்.

அது பரசுராம க்ஷேத்திரத்தில். அறுபது யோஜனை அகலம்; அறுபது யோஜனை நீளமுள்ள பரப்பில் கடற்கரை அருகே விழுந்திருந்தது. ஒரு பிரம்மாண்டமான ஆலமரம் விழுதுகளோடு இருந்தது. சுற்றி ஒரு சுனனைகூட இல்லை! "ஓம் நமோ நாராயணாய" என்று ஒன்பது பேரும்



ஜபிக்க, 'கிர்... ர்... ர்...ர்...' என்று எதிரே சுதர்ஸனச் சக்கரம் சுழன்றது. பாதாளத்திலிருந்து கங்கை நீர் பீய்ச்சி அடித்து அவர்களை நனைத்தது. சக்கரம் மறைந்ததும் அந்த இடத்தில் ஒரு பெரிய பள்ளம் ஏற்பட்டிருந்தது. அது நிறைய ஜலம் தளும்பி வழிந்தது.

நவப் பிரஜாபதிகளும் காய், கனிகளை உண்டு அங்கு நெடுங்காலம்

தவமியற்றினர். ஒரு நாள் நாரதர் அங்கு வந்தார்.

"திரிலோக சஞ்சாரியே! எங்கள் பாவம் எப்போது தீரும்? திருமாலின் தரிசனம் எப்போது கிடைக்கும்?" என்று நவப்ரஜா பதிகளும் அவரிடம் கேட்டனர்.

"ப்ரஜாபதிகளே! உங்கள் பாவம் நீங்கி விட்டது. வண்டாக வந்த பகவானை என் தந்தை நமஸ்கரித்ததை நீங்கள் இகழ்ந்த தால் திருமால் தரிசனம் தரவில்லை! யாரை, கேலி செய்தீர்களோ அவரைக்கொண்டே ஒரு மகரயாகம் செய்தால் பரந்தாமன் தரிசனம் கிடைக்கும்" என்று கூறிச் சென்றார்.

பிரம்மாவிடம் சென்று மகரயாகம் நடத்தித் தரும்படி நவப்ரஜாபதிகளும் பிரார்த்திக்க அவரும் ஒப்புக் கொண்டார். தேவ சிற்பியான விச்வகர்மா யாகசாலை அமைத்தார். வியாசர் குருவாக இருந்து ஏழு நாட்கள் சிறப்பாக யாகத்தை நடத்தினார். அந்தணர் களுக்குத் தானம் கொடுக்கவும், யாகப் பொருட்களுக்காகவும் தேவேந்திரன் காம தேனுவும், கற்பக விருட்சமும் கொடுத்தான்.

ஏழாம் நாள் பூர்ணாகுதியாகி சமாரா தனை நடந்து கொண்டிருந்தது. "யாகத்தை என்ன நேர்த்தியாய் செய்தோம்! நமது சாபத்துக்கு என்ன வலிமை! நவப்ரஜாபதிகளும் நம் காலடியில் பணிந் தனரே! அஷ்டதிக் பாலர்களும் வந்திருந் தனரே!" என்று கர்வப்பட்டுக் கொண்டார் பிரம்மா. அப்போது தடியை ஊன்றிக் கொண்டு தொண்டுக்கிழவராய், உட லெல்லாம் 12 நாமங்கள், கழுத்தில் துளசி மாலையுடன் ஒரு அந்தணர் வந்தார். "64 காய்கறிகளுடன் சாப்பாடு போடுகிறீர் களாமே! ஒரே பசி! பிரம்மாவே யாகம் பண்ணு கிறாராமே!" என்று கண்களின் அருகே கையை வைத்துக் கொண்டு கேட்டார்.

பிரம்மா மமதையுடன், "இப்படி உட் காருங்கள். இலை போடச் சொல்கிறேன். திருப்தியாய் சாப்பிடுங்கள். இப்படி ஒரு விருந்தைப் பார்த்தே இருக்கமாட்டீர்" என்று ஓரமாக உட்கார்த்தி வைத்தார்.

இலை போட்டு, நீர் தெளித்து நவப்ர ஜாபதிகளும் பயபக்தியுடன் பரிமாறினர். இலையில் வைத்ததுமே பதார்த்தங்கள் மறைந்து போயின. சமையலறையில் போய் பார்த்தால் எல்லா பாத்திரங்களும் காலி. காமதேனு, கற்பக விருட்சம் இரண்டையும் காணவில்லை.

நவப்ரஜாபதிகளும் என்ன செய்வ தென்று புரியாததால் சாபத்துக்குப் பயந்து சமையற்கூடத்தில் பதுங்கி இருந்தனர்.

"என்னய்யா யாகம் நடத்துகிறீர்? ஒரு வனுக்கு வயிறார சாப்பாடு போட முடிய வில்லை? மந்திரம் சொல்லி ஹோமம் வளர்த்தால் ஆயிற்றா?" என்று அந்தணர் கூச்சலிட்டார்.

பிரம்மா தலைகுனிந்து, கண்களில் நீர் தளும்ப, "சபித்துவிடாதீர்கள், ஸ்வாமி!" என்று பாதங்களைப் பிடித்துக் கொண்டார். கிழவர் மறைந்து அந்த இடத்தில் சங்கு சக்கரதாரி நின்றார்.

"சதுர்முகனே! பெரிய செயல்கள் செய் பவனுக்கு முதலில் வேண்டியது அடக்கம். மலைகளில் உற்பத்தியாகும் அருவி நதி யாக ஓடினால்தான் மக்களுக்குப் பயன் படும். உன் கர்வத்துக்குத்தான் இந்தப் படிப்பினை!" என்றார். நவப்ரஜாபதிகளும் மகாவிஷ்ணுவைப் பணிந்தனர்.

"சக்கரத்தினால் உண்டான இந்தத் தீர்த் தம் இன்று முதல் 'பிரம்மயக்ஞ தீர்த்தம்' என்று வழங்கப்படும். நாரதரின் வல்கலம் (மேலங்கி) விழுந்த இந்த இடம் வல்கலை என்றே புகழ் பெறும்" என்று அருளினார்.


கைக்கடிகாரங்கள் யாருக்கு?

மே இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டு, சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரிய இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள் : 1. இரா.சுப்ரியா, பதி னோராம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல் நிலைப் பள்ளி, சிதம்பரம் 2. பி. மோகன லக்ஷ்மி, ஒன்பதாம் வகுப்பு, பி.எஸ்.ஜி. ஆர்.கிருஷ்ணம்மாள் பெண்கள் மே.நி.பள்ளி, பீளமேடு, கோவை

சரியான விடை : 1. பெரியபுராணம் - சேக்கிழார் 2. பாஞ்சாலி சபதம் - பாரதியார் 3. கீதாஞ்சலி - ரவீந்திரநாத் தாகூர் 4. சத்திய சோதனை - காந்தியடிகள் 5. அக்னி சிறகுகள் - அப்துல் கலாம் 6. அகல் விளக்கு - மு. வரதராசனார்

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



JULY 2002

5 new features begin

GOKULAM

The monthly magazine for children


TURNS 15

Rs.6/- ONLY

Get your child a copy today

CARTOONS MADE EASY

Lalitha aunty who gave you an 'insight' into drawing and painting (May 2002 issue) teaches you to draw cartoons. Have fun!




COUNTRIES AND THEIR CHILDREN

- a twelve part coverage on the way of life of people from different lands!

FASCINATING FLORA

- taking you on an intriguing journey through the kingdom of plants.





THE PARENT PAGE

Welcoming contributions from parents of our young readers!

Write to :
The Circulation Manager,
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097


THE STRANGE CREATURES

- a colourful and exciting picture story serial!

Story : **Aparna Vishwanathan**

Illustration : **Jayaraj**





விண்வெளிப் பயண ஒலி!

செய்து பாருங்கள்!

வண்டிச் சத்தம், பாட்டுச் சத்தம், பறவைகளின் ஒலி இயந்திரங்களின் இரைச்சல், குழந்தைகளின் மழலை என எவ்வளவோ ஒலிகளைத் தினமும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். விண்வெளிப் பயணத்தின்போது ஒலியைக் கேட்க முடியாது. ஆனால் சினிமா, டி.வி.க்களில் சவுண்ட் எஃபக்ட் கொடுத்து விண்வெளிப் பயணத்தைக் காண்பிக்கிறார்களே. அதே மாதிரி ஒலியை வரவழைப்போமா?

சற்றுப் பெரிய பாசி மணிகள் 4, மெல்லிய நூல் சிறிது, வண்ணக் கண்ணாடித் தாள், பசை ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

முதலில் நூலின் ஒரு நுனியில் 3 பாசிமணிகளைக் கோர்த்து முடிச்சுப் போட்டு விடுங்கள். பாசி மணிகளுக்கு அருகில் 4 இன்ஞ் அளவுக்கு செவ்வக வடிவில் வெட்டிய கண்ணாடித் தாளைப் பசை கொண்டு நூலின் மேல் ஒட்டி விடுங்கள். (அதாவது சிறிய கொடிகளை கயிற்றில் ஒட்டித் தொங்கவிடுவது போன்று).

நூலின் மற்றொரு முனையில் ஒரு பாசிமணியைக் கட்டி விடுங்கள். சற்று நேரத்தில் பசை காய்ந்ததும் ஒரே ஒரு பாசிமணி இருக்கும் பகுதியைக் கையில் வைத்துக் கொண்டு மெதுவாகச் சுற்றுங்கள்.

ஆஹா! அருமையான விண்வெளிப் பயண ஒலி கேட்கிறதல்லவா?

இதே போல் 4 அல்லது 5 பாசி மணிகளை ஒரு முனையில் கட்டி, கண்ணாடித் தாளை 2 முக்கோணங்களாக்கி, சற்று இடைவெளி விட்டு இரண்டையும் நூலில் ஒட்டி விடுங்கள். இப்போது நூலைச் சுழற்றுங்கள். ஒலியில் வித்தியாசம் இருக்கிறதா? இப்படி பாசிமணிகளின் எண்ணிக்கையைக் கூட்டி, குறைத்து, கண்ணாடித் தாள்களின் வடிவத்தை மாற்றி செய்து பாருங்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான ஒலியை ஏற்படுத்தி உங்களை வியப்பில் ஆழ்த்தும்!

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


மறைந்திருக்கும் உருவங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை : ஆடு, கோன் ஐஸ், மனிதத் தலை 2, வாத்து, உடும்பு, புறா, மீன்

இதில் எத்தனை சதுரங்கள், செவ்வகங்கள், முக்கோணங்கள் உள்ளன?



விடை: சதுரம் - 11
முக்கோணம் - 52
செவ்வகம் - 34

பாசு...

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

